www.tamilarangam.net



# புரட்சிகர சர்வதேசிய இயக்கத்தின் பிரகடனம்

விலை ரூபா 10·00

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"இன்று உலகம் பிரமாண்டமான சம்பவங்கள் நடக்கும் தறுவாயில் இருக்கின்றது. ஏகாதிபத்திய அமைப்பில் ஏற்பட்டுள்ள நெருக்கடி புதிய மூன்றாம் உலக யுத்தம் ஒன்றின் ஆபத்தைத் துரிதமாக ஏற்படுத்துகின்றது. அத்துடன் உலகம் பூராவிலும் உள்ள நாடுகளில் புரட்சியின் உண்மையான வாய்ப்பையும் ஏற்படுத்துகின்றது". 1980-ம் ஆண்டின் இலையுதிர் காலத்தில் நடைபெற்ற எமது முதலாவது சர்வதேசிய மாநாட்டின் கூட்டறிக்கையில் அடங்கியுள்ள இந்த வார்த்தைகளின் விஞ்ஞான பூர்வமான உண்மையை உலகின் சமீபகால சம்பவங்கள் முற்றிலும் நிரூபித்துள்ளன. அதுமட்டுமல்ல இந்த மாநாட்டுக்குப் பின் உலக நிலைமை மேலும் தீவிரமடைந்து கடுமையாகியுள்ளது.

ஆகவே எமக்கு முன்னால் உருவாகும் பிரமாண்டமான சவால்களுக்கும் சமர்களுக்கும் முகங்கொடுக்க அதன் அணிகளை மேலும் ஐக்கியப்படுத்தித் தயாரிக்கும் மிகுதியும் பாரிய பொறுப்பு மாக்சிஸ - லெனினிஸ இயக்கத்தை எதிர்நோக்குகின்றது. சடுதியான மாற்றங்கள் வளர்ச்சிப் பாய்ச்சல்கள் ஆகியவற்றுக்கு முற்றுமுழுதாகத் தயாரிப்புச் செய்யுமாறு, குறிப்பாக உலகளாவிய வளர்ச்சிகள் தேசிய வளர்ச்சிகளை மிகவும் ஆழமாகப் பாதிப்பதும் புரட்சிக்கான முன்காணாத வாய்ப்புக்கள் உருவாகிக் கொண்டிருப்பதுமான இந்த நிலைமையில் முற்று முழுதாகத் தயாரிப்புச் செய்யுமாறு பாட்டாளி வர்க்கத்தின் வரலாற்றுப் பணி எம்மை மேலும் அவசரமாக அழைக்கின்றது. எமது வர்க்கத்தின் நலன்களுக்காக இந்தச் சந்தர்ப்பங்களை இயன்றளவு மிகச் சிறந்த முறையில் பயன்படுத்தவும் உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்காக இயன்றளவு மிகவும் முன்னேறிய தளங்களை வென்றெடுக்கவும் நாம் எமது புரட்சிகர விழிப்பைக் கூர்மையாக்கி எமது அரசியல், தத்துவார்த்த, ஸ்தாபன, ராணுவத் தயாரிப்பு நிலைமையை அதிகரிக்க வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மாக்ஸ், எங்கல்ஸ், லெனின், ஸ்டாலின், மாசேதுங் ஆகியோரின் விஞ்ஞான ரீதியான போதனைகளால் ஆயுதபாணிகளாக்கப்பட்ட நாம், இன்றைய நிலைமையில் எம்மிடம் எதிர்பார்க்கப்படும் பணிகளை நன்கறிவோம். இந்த வரலாற்றுப் பணியை ஏற்றுக்கொண்டு அதன்படி நடப்பதில் நாம் பெருமை அடைகின்றோம்

மாக்ஸிய லெனினிஸ இயக்கம் தொடர்ந்து ஆழமான பாரதூரமான நெருக்கடி ஒன்றை எதிர் நோக்குகின்றது. மாசேதுங்கின் மறைவுக்குப் பின்னர் சீனாவில் ஏற்பட்ட பிற்போக்கான ஆட்சிக்கவிழ்ப்பு, அன்வர் ஹோஷாவின் நயவஞ்சகத்தனமான காட்டிக்கொடுப்பு ஆகியவற்றினால் இந்த நெருக்கடி உச்ச கட்டத்தை அடைந்திருக்கின்றது இருப்பினும் இந்தப் பின்னடைவுகள் ஏற்பட்ட போதிலும் கம்யூனிஸத்துக்கான போராட்டத்தைக் கைவிட மறுக்கும் நேர்மையான மாக்ஸிய - லெனினிச வாதிகள் சகல கண்டங்களிலும் இருக்கின்றனர்.

சர்வதேசிய கம்யூனிஸ இயக்கம் மேற்கொண்டு ஸ்திரமான ஐக்கியம் என்ற போக்கிற் கூடாக வளர்ந்து மாக்சிஸம் - லெனினிசம் - மாசேதுங் சிந்தனையின் விஞ்ஞானரீதியான கோட்பாடுகளின் வழியில் முன்னேறிக் கொண்டிருக்கின்றது. 1980 முதல் நாம் எமது பலத்தைப் பெருக்கி வளர்ச்சிகளிற் செல்வாக்கு வகுத்து அவற்றுக்கு வழிகாட்டும் எமது திறனைப் பெருக்கியுள்ளோம். சாதகமற்ற கஷ்டமான நிலைமைகளின் மத்தியில் வெற்றிகரமாகக் கூட்டப் பெற்ற மாக்சிஸ - லெனினிசக் கட்சிகளினதும் ஸ்தாபனங்களினதும் இரண்டாவது சர்வதேசிய மாநாடு எமது இயக்கத்தின் ஐக்கியத்திலும் முதிர்விலும் குணரீதியானதோர் பாய்ச்சலாக அமைகின்றன. திரிபுவாத தத்துவார்த்தம் சகல பூர்ஜுவா தத்துவார்த்தம் ஆகியவற்றுக்கெதிராக வெல்லமுடியாத அணை ஒன்றை உருவாக்குவதன் மூலமும் பொங்கி எழும் புரட்சி அலைகளுக்கு விஞ்ஞானரீதியான தலைமைதாங்கி அவற்றின் முன்னணியில் நிற்பதன்மூலமும் புரட்சிகர வர்க்கப் போராட்டம் என்ற ஊதுலையில் எமது நடைமுறைக்கு வழிகாட்டவும் எமது அனுபவத்தை தொகுக்கவும் மாக்ஸிஸம் லெனினிஸம் மாசேதுங் சிந்தனையின் கோட்பாடுகளை உணர்வுபூர்வமாக பிரயோகிப்பதன் மூலமும் அவசரம் செய்யவேண்டிய பணிகளை செய்ய இயலும், நிச்சயம் செய்யமுடியும்.

பின்வரும் பிரகடனம் புரட்சிகர சர்வதேசிய இயக்கத்தை தற்பொழுது உருவாக்கியுள்ள மாக்ஸிஸ லெனினிஸக் கட்சிகள், ஸ்தாபனங்களின் இரண்டாவது சர்வதேச மாநாட்டில் கலந்து கொண்ட பிரதிநிதிகளும் பார்வையாளர்களும் சிரத்தையுடன் பன்முகங்களில் நடத்திய பேச்சுவார்த்தைகள் கோட்பாட்டுரீதியான போராட்டம் ஆகியவற்றுக்கூடாக உருவாக்கப்பட்டது:

# உலக நிலைமை

உலக ஏகாதிபத்திய அமைப்பின் பிரதான முரண்பாடுகள்
அனைத்தும் துரிதமாக உக்கிரமடைகின்றன; பல்வேறு ஏகாதிபத்திய
வல்லரசுகளுக்கிடையிலான முரண்பாடு, ஏகாதிபத்தியத்துக்கும் அடக்கி
ஒடுக்கப்பட்ட தேசங்கள் மக்களுக்குமிடையிலான முரண்பாடு, ஏகாதி
பத்திய நாடுகளில் பூர்ஷ்வா வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்
கும் இடையிலான முரண்பாடு ஆகியன துரிதமாக உக்கிரமாகின்றன.
இந்த முரண்பாடுகள் அனைத்தும் முதலாளித்துவ உற்பத்தி முறையையும்
அதன் அடிப்படை முரண்பாட்டையும் பொது ஊற்றுவாயாகக்
கொண்டுள்ளன. முறையே அமெரிக்கா, சோவியத் யூனியன் ஆகியவற்
றால் தலைமைதாங்கப்படும் இரண்டு ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கிடை
யிலான போட்டா போட்டி யுத்தத்துக்கு இட்டுச் செல்வது திண்ணம்.
புரட்சி இவ்யுத்தத்தைத் தடுத்து நிறுத்தினாற்தான் இது நடவாது.
இந்தப் போட்டா போட்டி உலக சம்பவங்களையும் பெரிதும் பாதிக்
கின்றது.

இரண்டாம் உலக யுத்தத்துக்குப் பிந்திய உலகம்
துரிதமாக அச்சில் பிளவுபடுகின்றது. உலக யுத்தத்தின் மூலமும்
அதன் பின்னரும் ஸ்தாபிக்கப்பட்ட சர்வதேசிய பொருளாதார அர
சியல் உறவுகள் - உலகின் பங்கீடு - - பல்வேறு ஏகாதிபத்திய வல்
லரசுகள் தமது இலாப சக்கராதிபத்தியங்களை "சமாதானமாகப்"
பெருப்பித்து விரிவாக்கும் தேவைகளுக்குப் பொருத்தமற்றதாக இருக்
கின்றது ஏகாதிபத்தியவாதிகளின் மத்தியிலான மோதல்களின் விளை
வாக, குறிப்பாக புரட்சிப் போராட்டத்தின் விளைவாக இரண்டாம்
உலக யுத்தத்துக்குப் பிந்திய உலகம் முக்கியமான மாற்றங்களுக்
கூடாகச் சென்றுள்ள வேளையில் இன்று இந்த முழு பொருளாதார,
அரசியல், ராணுவ உறவுப் பின்னலமைப்புமே ஆட்டங் கண்டுள்ளது.
பெரும் ஏகாதிபத்திய வல்லரசுகளின் ஒப்பீட்டளவிலான ஸ்திரப்பாடு,
உலக மக்கள் - தேசங்களின் பெரும்பான்மையைச் சுரண்டி அவற்றின்
இரத்தத்தையும் வியர்வையையும் உறிஞ்சி ஒருசில நாடுகள் கொண்
டுள்ள ஒப்பீட்டளவிலான செழிப்பு ஆகியன அம்பலமாகின்றன;
அடக்கி ஒடுக்கப்பட்ட தேசங்கள் மக்களின் புரட்சிப் போராட்டங்கள்
மீண்டும் பொங்கி எழுந்து ஏகாதிபத்திய உலக ஒழுங்கிற்கு புதிய
அடிகளை வழங்குகின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்த நிலைமையிற்தான், "ஒன்றில் புரட்சி யுத்தத்தைத் தடுக்கும் அன்றேல் யுத்தம் புரட்சிக்கு வழிகோலும்" என்ற கூற்று மேலும் உரக்க ஒலித்து அவசர முக்கியத்துவம் பெறுகின்றது. ஏகாதிபத்திய அமைப்பு, புரட்சிப் போராட்டங்கள் ஆகியவற்றின் இயற்கையான நிலைமையினால் புதிய நிலைமை ஒன்று தயாராகின்றது. ஏகாதிபத்தியவாதிகளின் போட்டிக் கும்பல்களுக்கிடையிலான முரண்பாடு, ஏகாதிபத்தியவாதிகளுக்கும் அடக்கி ஒடுக்கப்பட்ட தேசங்களுக்கும் இடையிலான முரண்பாடு, ஏகாதிபத்திய நாடுகளில் பாட்டாளி வர்க்கத்துக்கும் பூர்ஷ்வா வர்க்கத்துக்கும் இடையிலான முரண்பாடு ஆகியன எதிர்வரும் காலத்தில் முன்காணாத அளவில் ஆயுதப் பலம் என்ற வடிவத்தில் பிரதிபலிப்பது சாத்தியம். முதலாம் உலக யுத்தத்தைப் பொறுத்து ஸ்டாலின் கூறியவாறு

"பத்தாண்டுகளுக்கு முன்னர் வெடித்த ஏகாதிபத்திய யுத்தத்தின் முக்கியத்துவத்தில் அது இந்த முரண்பாடுகள் அனைத்தையும் ஒரு முடிச்சில் சேர்த்து நிறைத் தராசில் வீசியெறிந்தது. இவ்வாறு பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிச் சமர்களைத் துரிதப்படுத்தி அவற்றுக்குத் துணைபுரிந்ததும் அடங்கும் உலகின் சகல நாடுகளும் பிரதேசங்களும் முன்னர் தூங்கச் செய்யப்பட்டிருந்த அல்லது வாழ்வைப் பற்றி அசட்டையாய் இருந்த மக்கள் பகுதியினரும், மேற்கூறியவாறு முரண்பாடுகள் உக்கிரமடைவதால் உலக வரலாற்றுச் சக்கரத்துக்குள் இப்பொழுது இழுக்கப்படுகின்றனர். எதிர்காலத்தில் மேலும் தீவிரமாக இழுக்கப்படுவர். ஆகவே புரட்சிகர கம்யூனிஸ்டுகள் வர்க்க உணர்வுடைய தொழிலாளர்களையும் புரட்சிகர மக்கள் பகுதியினரையும் தயாராக்கி அவர்களின் புரட்சிப் போராட்டத்தைத் தீவிரப்படுத்த வேண்டும்.

கம்யூனிஸ்டுகள் ஏகாதிபத்திய யுத்தத்தின் உறுதியான எதிரிகள். மூன்றாம் உலக யுத்தத்துக்கான தயாரிப்புகளுக்கு எதிரான போராட்டத்தில் கம்யூனிஸ்டுகள் மக்களை அணிதிரட்டி அவர்களுக்குத் தலைமை தாங்க வேண்டும். வரலாற்றில் மூன்றாம் உலக யுத்தம் மனிதகுலத்துக்கு மிகப்பெரிய பாதகமாக அமையும் ஆனால் மாக்சிஸ லெனினிஸவாதிகள் உண்மையை மக்களிடமிருந்து ஒருபோதும் மறைக்க மாட்டார்கள். மாக்சிஸ லெனினிஸவாதிகளும் புரட்சிகர சக்திகளும் தலைமை தாங்கும் அல்லது தலைமை தாங்கத் தயாராகும் புரட்சியினால், புரட்சிகர யுத்தத்தினால் மாத்திரம் இந்தப் பாதகத்தைத் தடுத்து நிறுத்த முடியும். மாக்சிஸ லெனினிஸவாதிகள் துரிதமாக வளரும் புரட்சிச் சாத்தியப்பாடுகளை இறுகப்பற்றி சகல முனைகளிலும் புரட்சிப் போராட்டத்தைத் தீவிரப்படுத்துவதில் மக்களுக்குத் தலைமைதாங்க வேண்டும்.



இயலுமான இடத்தில் புரட்சி யுத்தத்தைத் தொடங்க வேண்டும். நிலைமைகள் இன்னும் பக்குவமடையாத இடங்களில் புரட்சி யுத்தத்துக்கு தயாரிப்புகளைத் தீவிரப்படுத்த வேண்டும். இந்த முறையில் கம்யூனிஸத்துக்கான போராட்டம் முன்னேறும். தீர்க்கமான சமர்களின் போக்கில் பாட்டாளி வர்க்கமும் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களும் பெறும் வெற்றி உலக யுத்தத்துக்கான ஏகாதிபத்தியவாதிகளின் தற்போதைய தயாரிப்புகளைச் சுக்குநூறாக்கி பல நாடுகளில் தொழிலாளி வர்க்கத்தின் ஆட்சியை ஸ்தாபித்து புரட்சிப் போராட்டத்தின் முன்னேற்றத்துக்கு மேலும் சாதகமான பொதுவான உலக நிலைமையை உருவாக்க முடியும். மறுபுறத்தில், புரட்சிப் போராட்டம் மூன்றாம் உலக யுத்தம் ஒன்றைத் தடுக்கும் சக்தி அற்றதாகின், கம்யூனிஸ்டுகளும் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கமும், இந்த யுத்தத்தினாலும் அதனால் ஏற்படக்கூடிய தவிர்க்கமுடியாத துன்பதுயரங்களினாலும் மக்கள் மத்தியில் கோபாவேசத்தை உருவாக்கும் அணிதிரட்டி யுத்தத்தின் ஊற்று மூலமான ஏகாதிபத்தியத்துக்கு எதிராக அதனைச் செலுத்தி எதிரியின் பலவீனமான நிலைமையைப் பயன்படுத்தி இவ்வாறு பிற்போக்கான ஏகாதிபத்திய யுத்தத்தை ஏகாதிபத்தியத்துக்கும் பிற்போக்கிற்கும் எதிரான நீதியான யுத்தமாக மாற்றத் தயாராக வேண்டும்.

ஏகாதிபத்தியம் உலகத்தை தனியொரு கோள அமைப்பில் இணைத்துள்ளபடியால் ( அது மேலும் இவ்வாறு செய்கின்றது ) உலக நிலைமை மென்மேலும் ஒவ்வொரு நாட்டினதும் வளர்ச்சிகளைப் பாதிக்கின்றது: ஆகவே உலகம் பூராவுமுள்ள புரட்சிச் சக்திகள் கூட்டு மொத்த உலக நிலைமையைச் சரியாக மதிப்பீடு செய்ய வேண்டும். ஒவ்வொரு நாட்டினதும் ஸ்தூல நிலைமையை மதிப்பீடு செய்தல், ஸ்தூலமான நெடுநோக்குத் திட்டம், தந்திரோபாயங்கள் ஆகியவற்றை வகுத்து புரட்சி அனுஷ்டானத்தை விருத்தி செய்தல் என்ற முக்கிய பணியை இது மறுப்பதாகாது. மாக்சிஸ லெனினிசவாதிகள் கோள ரீதியில் கூட்டு மொத்த நிலைமை, ஒவ்வொரு நாட்டினதும் ஸ்தூல நிலைமைகள் என்ற இந்த இயங்கியல் உறவைத் தவறற்ற முறையில் இறுகப் பற்றாவிட்டால் ஒவ்வொரு நாட்டிலும் புரட்சிக்குச் சாதகமான மிகுதியும் சாதகமான கோள ரீதியான நிலைமையைப் பயன்படுத்த முடியாது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒரு நாட்டிலான புரட்சியை கம்யூனிஸத்துக்கான கூட்டுமொத்தப் போராட்டத்திலிருந்து பிரித்துப் பார்க்கும் போக்குகளுக்கு எதிராகப் போராட வேண்டும். லெனின் பின்வருமாறு சுட்டிக் காட்டி "ஒரு வகை, ஒரேயொரு வகை சர்வதேசியத்துவம்தான் உண்டு. அதாவது ஒருவர் தனது சொந்த நாட்டில் புரட்சிகர இயக்கத்தின் வளர்ச்சிக்காக இதயபூர்வமாகப் பாடுபட்டு (பிரச்சார மூலமும், அனுதாப மூலமும், பொருளாயத உதவி மூலமும்) இந்தப் போராட்டத்துக்கு ஆதரவளிப்பது. இதுதான் இது மட்டும்தான், விதிவிலக்கின்றி ஒவ்வொரு நாட்டிலும் மார்க்கமாகும். "பாட்டாளி வர்க்கப் புரட்சிவாதிகள் தமது புரட்சி வேலையை "எனது" நாடு என்ற நோக்கில் பார்க்காமல் உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கான தயாரிப்பு, பிரச்சாரம், அதனைத் துரிதப்படுத்தல் ஆகியவற்றில் எனது பங்கு என்ற நோக்கில் பார்க்க வேண்டும் என்று லெனின் வற்புறுத்தினார்.

## உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் இரண்டு பிரிக்கமுடியாத பகுதிகள் பற்றி

ஒருசிலது, முன்னேறிய முதலாளித்துவ நாடுகள் எனவும் பெருந்தொகையானது அடக்கி ஒடுக்கப்பட்ட தேசங்கள் எனவும் உலகம் பிரிந்திருப்பதை லெனின் எப்பொழுதோ பகுத்தாராய்ந்தார். பிந்திய நாடுகள் உலகின் கூடுதலான பிரதேசத்தையும் மக்கள் தொகையையும் கொண்டிருக்கின்றன. இவற்றை ஏகாதிபத்தியவாதிகள் புல்லுருவித்தனமாகச் சுரண்டுகின்றனர். மற்றவர்களைத் தங்கியிருக்கும் நிலைமையிலும், பிற்போக்கான நிலைமையிலும் வைத்திருக்கின்றனர். இந்த உண்மையான நிலைமையிலிருந்துதான் வரலாறு நிரூபித்துள்ள லெனினிஸக் கருத்து, அதாவது, உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சி சாராம்சத்தில் இரண்டு ஓட்டங்களைக் கொண்டது — ஏகாதிபத்தியக் கோட்டைகளில் பாட்டாளி வர்க்கமும் அதன் நேச அணிகளும் நடத்தும் பாட்டாளி வர்க்க சோஷலிசப் புரட்சி, ஏகாதிபத்தியத்தால் அடிமையாக்கப்பட்ட தேசங்களும் மக்களும் நடத்தும் தேசிய விடுதலை அல்லது புதிய ஜனநாயகப் புரட்சி ஆகிய இரண்டு ஓட்டங்களைக் கொண்டது என்ற லெனினிஸக் கருத்துத் தோன்றியது.



இரண்டாம் உலக யுத்தம் முதலான காலந்தொட்டு இன்று வரையான காலகட்டத்தில் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்கள் தேசங்களின் போராட்டம் உலகப் புரட்சிப் போராட்டத்தின் சூறாவளிக் கேந்திரமாக இருந்து வருகின்றது. பல ஏகாதிபத்திய நாடுகளில் காணப்படும் செழிப்பு, ஸ்திரப்பாடு, "ஜனநாயகம்" ஆகியன அடக்கி ஒடுக்கப்பட்ட நாடுகளின் மக்களை தீவிரமாகச் சுரண்டி, அவர்களை அவலப்படுத்துவதினூடாகத்தான் ஏற்பட்டது. நவகாலனிசத்தின் வளர்ச்சி தேசிய, காலனிப் பிரச்சினையை இல்லாதொழிக்கவில்லை. முழுத்தேசங்களையும் மக்களையும் சர்வதேசிய மூலதனத்தின் தேவைகளுக்கு மேலும் அடிபணியச் செய்துள்ளது. ஏகாதிபத்திய ஆதிக்கத்துக்கு எதிராகத் தொடரான பல புரட்சி யுத்தங்களுக்கு வழிகோலியுள்ளது.

உலக முரண்பாடுகளின் தற்போதைய உக்கிரப்பாடு இந்த இயக்கங்களுக்கு மேற்கொண்டு சாத்தியப்பாடுகளை ஏற்படுத்துவதுடன் புதிய தடைகளையும் புதிய பணிகளையும் அவற்றின் முன்னால் வைக்கின்றது. அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் புரட்சிப் போராட்டங்களைக் கவிழ்ப்பதில் அல்லது திசை திருப்புவதில் குறிப்பாக இவற்றை ஏகாதிபத்தியங்களுக்கிடையிலான போட்டா போட்டியில் கருவிகளாக மாற்றும் முயற்சியில் இப்படிச் செய்வதில் ஏகாதிபத்திய வல்லரசுகள் முயற்சி எடுத்துள்ள போதிலும் சில வெற்றிகளைப் பெற்றுள்ள போதிலும் இப் போராட்டங்கள் தொடர்ந்து ஏகாதிபத்திய அமைப்புக்குப் பலம் வாய்ந்த அடிகள் வழங்கி, முழு உலகிலும் புரட்சி சாத்தியப்பாடுகளின் வளர்ச்சியைத் துரிதப்படுத்தியுள்ளன.

மேற்கு முகாமைச் சேர்ந்த ஏகாதிபத்திய நாடுகளில் இரண்டாம் உலக யுத்தத்துக்குப் பிந்திய காலம் பொதுவாகப் புரட்சிகர மற்றதோர் நிலைமையாக இருக்கின்றது. இந்த நாடுகளில் ஏகாதிபத்திய ஆட்சியின் ஒப்பீட்டளவிலான ஸ்திரப்பாட்டை இது பிரதிபலிக்கின்றது. இந்த ஸ்திரப்பாடு இந்த ஏகாதிபத்திய அரசுகள் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களைத் தீவிரமாகச் சுரண்டுவதிலிருந்து பிரிக்க முடியாதது. இந்த நாடுகளில் புரட்சிகர நிலைமைகள் அரிதாக இருக்கின்றன, இன்று உலகில் உருவாகும் நிலைமை போன்ற உலக முரண்பாடுகளின் உக்கிர தீவிரப்பாட்டுடன் பொதுவாகத் தொடர்பு பட்டிருக்கின்றன என்பதை வரலாறு காட்டியுள்ளது. இருப்பினும் சமீபகால வரலாற்றில் இல்லாத முறையில் இந்த நாடுகளில் புரட்சிக்கான வாய்ப்புக்கள் மிகவும் சாதகமாக இருக்கின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பல மேற்கத்தைய ஏகாதிபத்திய நாடுகளில் ஏற்பட்ட பொது மக்கள் புரட்சிப் போராட்டங்கள், குறிப்பாக அறுபதாம் ஆண்டுகளில் ஏற்பட்ட போராட்டங்கள் இந்த நாடுகளில் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் சாத்தியப்பாட்டை தீர்க்கமாகக் காட்டுகின்றன. அறுபதாம் ஆண்டுகளில் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான நிலைமைகள் சாதகமாக இருக்கவில்லை என்பதும் இந்த இயக்கங்கள் உலக இயக்கத்தின் பொதுவான தேய்வுடன் மங்கிப் போயின என்பதும் உண்மையே. இன்று கூர்மையடையும் உலக நிலைமை இந்த நாடுகளில் மென்மேலும் பிரதிபலிக்கின்றது. உதாரணத்துக்கு சில ஏகாதிபத்திய நாடுகளில் கீழ்த் தட்டுப்பாட்டாளி வர்க்கத்தினர் முக்கிய கிளர்ச்சிகளை நடத்தியுள்ளனர். பல நாடுகளில் ஏகாதிபத்திய யுத்தத் தயாரிப்புகளுக்கு எதிராக பலம்வாய்ந்த இயக்கம் ஒன்று வளர்ந்திருக்கின்றது இதில் கூடுதலான புரட்சிகரமான பகுதியினர் சேர்ந்திருக்கின்றனர்.

கிழக்கு முகாமைச் சேர்ந்த முதலாளித்துவ ஏகாதிபத்திய நாடுகளில் அரசு முதலாளித்துவ பூர்ஷ்வா வர்க்கத்தின் ஆட்சியின் ஒப்பீட்டளவிலான ஸ்திரப்பாட்டில் முக்கிய வெடிப்புகளும் விரிசல்களும் மென்மேலும் தெரியத் தொடங்கியுள்ளன. போலந்தில் பாட்டாளி வர்க்கமும் பொது மக்களின் இதர பகுதியினரும் போராட்டத்தில் எழுந்து ஸ்தாபகமான ஒழுங்கிற்குப் பலமான அடிகள் வழங்கியுள்ளனர். இந்த நாடுகளிலும் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் வாய்ப்புகள் வளர்ந்து கொண்டிருக்கின்றன. உலக முரண்பாடுகளின் வளர்ச்சியினாலும் தீவிரப்பாட்டினாலும் இவை அதிகரிக்கும்.

இரண்டுவகை நாடுகளிலுமுள்ள புரட்சிகர சக்திகளுக்கு முன்னேறிய நாடுகளின் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்துக்கும் அடக்கி ஒடுக்கப்பட்ட தேசங்களின் தேசிய ஜனநாயகப் புரட்சிகளுக்குமிடையிலுள்ள நெடுநோக்கான நேசஅணியின் இயல்பைப் புரிந்து கொள்ளப் போதிக்கப்பட வேண்டும். அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் புரட்சிகரப் போராட்டத்தின் முக்கியத்துவத்தை அல்லது பாட்டாளி வர்க்கத்தினதும் உண்மையானதோர் மாக்சிஸ லெனினிஸக் கட்சியினதும் தலைமையில் சோஷலிசத்தின் ஸ்தாபகத்தை நோக்கிச் செல்லும் அவர்களின் திறமையை மறுக்கும் சோஷல் — பேரினவாத (சாவனிச) நிலைப்பாடு இன்னும் எதிர்த்துச் சமாளிக்க வேண்டியதோர் அபாயகரமான பிறழ்வாகவே இருக்கின்றது. அதன் "இயற்கையான (ஏகாதிபத்திய) நேசஅணி"யின் "உதவி" யைப் பெற்றுலே தேசிய விடுதலைப்



போராட்டம் ஒன்று வெற்றிபெற முடியும் என்று கூறும் சோவியத் யூனியன் தலைமையிலான நவீன திரிபுவாதிகளும் தேசிய ஜனநாயகப் புரட்சியொன்றை சோஷலிசப் புரட்சியாக மாற்றமுடியும் என்ற கோட்பாட்டை மறுதலிக்கும் ட்ரொஸ்கியவாதிகளும் இந்த அபாயகரமான போக்கின் உதாரணங்கள் ஆவர். மறுபுறத்தில், சமீபகாலத்தில் தோன்றியுள்ள முக்கியமான பிரச்சினை, முன்னேறிய நாடுகளில் புரட்சிகர நிலைமைகளின் சாத்தியப்பாட்டை மறுதலிக்கும் அல்லது தேசிய விடுதலைப் போராட்டங்களின் முன்னேற்றத்தின் நேரடி விளைவாகவே இத்தகைய புரட்சிகர நிலைமைகள் எழமுடியும் என்று கருதும் இன்னொரு பிறழ்வாகும். இந்த இரண்டு பிறழ்வுகளும் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் பலத்தை மழுங்கடிக்கின்றன. அவை வளரும் உலக நிலைமையையும் அதனால் உலகரீதியில் பல்வகை நாடுகளில் ஏற்படும் புரட்சிகர முன்னேற்றத்துக்கான சாத்தியப்பாடுகளையும் கணக்கில் எடுக்கத் தவறுகின்றன.

## சர்வதேசிய கம்யூனிஸ இயக்கத்தின் வரலாறு சம்பந்தமான சில பிரச்சினைகள்

"கம்யூனிஸ்ட் பிரகடனத்"தின் பிரசுரம், "சகல நாடுகளினதும் தொழிலாளர்களே, ஐக்கியப்படுவீர்" என்ற அதன் அறைகூவல் ஆகியன முதலான ஒரு நூற்றாண்டுக்குச் சற்று மேலான காலத்தில் சர்வதேசியப் பாட்டாளி வர்க்கம் ஏராளம் அனுபவத்தைத் திரட்டியிருக்கிறது. தீர்க்கமான வெற்றிகள் புரட்சிகரப் பெருமிதம் ஆகியவற்றின் காலத்திலும் மிக இருண்ட பிற்போக்கான பின்னடைவான காலத்திலும் பல்வகை நாடுகளில் புரட்சிகர இயக்கத்துக்கு இந்த அனுபவம் கைகொடுக்கின்றது. இயக்கத்தின் வளைவு சுழிவுகளின் போக்கில் மாக்சிஸம் – லெனினிஸம் – மாசேதுங் சிந்தனை என்ற விஞ்ஞானம் உருவெடுத்து அதன் புரட்சிகர இதயத்தைத் துண்டாடுவோர் அல்லது அதனைப் பாசிபிடித்த உயிரற்ற தத்துவம் ஆக்குவோருக்கு எதிரான இடைவிடாப் போராட்டத்தில் வளர்ந்துள்ளது. மாக்சிஸத்துக்கும் திரிபுவாதம், வரட்டுத் தத்துவவாதம் ஆகியவற்றுக்கும் இடையில் தத்துவார்த்த முனையில் நடைபெற்ற உக்கிரமான சமர்களைத் தொடர்ந்தே உலக வரலாற்றிலும் வர்க்கப் போராட்டத்திலும் முக்கியமான திருப்பு மையங்கள் ஏற்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பட்டுள்ளன. இரண்டாவது சர்வதேசியத்துக்கு எதிரான லெனினுடைய போராட்டம் இத்தகையதே. (முதலாம் உலக யுத்தத்தின் வெடிப்பு, ரஷ்யாவிலும் மற்றும் இடங்களிலும் புரட்சிகர நிலைமையின் வளர்ச்சி ஆகியவற்றின் காலத்தில் இது ஏற்பட்டது) நவீன சோவியத் திரிபுவாதத்துக்கு எதிரான மாசேதுங்கின் போராட்டமும் இத்தகையதே. உலக வரலாற்று வளர்ச்சிகளைப் (சோவியத் யூனியனில் முதலாளித்துவத்தின் புனர் ஸ்தாபகம், சோஷலிச சீனாவில் வர்க்கப் போராட்டத்தின் தீவிரப்பாடு, குறிப்பாக அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிரான உலகம் தழுவிய புரட்சிப் போராட்டப் பேரலையின் வளர்ச்சி) பிரதிபலித்ததோர் மகத்தான போராட்டம் இது. அது போலவே தற்போது சர்வதேசிய கம்யூனிஸ இயக்கம் கண்டுள்ள ஆழமான நெருக்கடி, சீனாவில் பாட்டாளி வர்க்க ஆட்சி மறுதலிக்கப்பட்டமை, மாசேதுங்கின் மறைவுக்குப் பின்னர் கலாச்சாரப் புரட்சி மீதான பன்முகத் தாக்குதல், தெங்சியௌபிங், குவாகோவெங் ஆகியோர் நடத்திய ஆட்சிக் கவிழ்ப்பு ஆகியவற்றின் கூட்டு மொத்தமாக உலக முரண்பாடுகள் உக்கிரமடைந்து உலக யுத்தம் ஒன்றின் ஆபத்துத் தீவிரமாகி புரட்சியின் வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளதன் பிரதிபலிப்பேயாகும். முந்திய மகத்தான போராட்டங்களின் போதிருந்தது போலவே இன்றும் புரட்சிகர மார்க்கத்துக்காகப் போரிடும் சக்திகள் சிறிய சிறுபான்மையர்களே இருக்கின்றன. அவை பல்வகை திரிபுவாதிகளாலும் பூர்ஷ்வா மன்ருடிகளாலும் சுற்றிவளைத்துத் தாக்கப்படுகின்றன. இருப்பினும் இந்தச் சக்திகள் எதிர்காலத்தைப் பிரதிநிதித்துவம் செய்கின்றன. இன்றைய சிக்கலான நிலைமையில் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்துக்கு முன்னேற்றப் பாதையைக் காட்டும் அரசியல் மார்க்கம் ஒன்றை உருவாக்கும் அவற்றின் திறனிலேயே சர்வதேசிய கம்யூனிஸ இயக்கத்தின் மேற்கொண்டு முன்னேற்றம் தங்கியிருக்கிறது. இதற்குக் காரணம் மார்க்கம் சரியானதாயிருந்தால் முதலில் தனியொரு போராளி தானும் இருக்காவிட்டாலும் பின்னர் போராளிகள் கிடைப்பர், அரசியல் அதிகாரம் இருக்காவிட்டாலும் அதிகாரம் பெறப்படும் என்பதாகும்: மாக்ஸ் முதலான சர்வதேசிய கம்யூனிஸ இயக்கத்தின் வரலாற்று அனுபவம் இதனை நிரூபிக்கின்றது.

சர்வதேசிய கம்யூனிஸ இயக்கத்துக்கு இத்தகைய பொதுமார்க்கத்தை வகுப்பதற்கு மிகுதியும் முக்கியமான விஷயம் எமது இயக்கத்தின் வரலாற்று அனுபவத்தை சரியாக மதிப்பீடு செய்வதாகும். கோடிக்கணக்கான மக்களின் வெகுஜனப் புரட்சிப் போராட்டங்களின் போக்கில் எண்ணற்றோர் உயிர்த் தியாகம் செய்துபெற்ற அனுபவங்களுக்கும் கற்ற படிப்பினைகளுக்கும் தக்க முக்கியத்துவம் அளிக்கத் தவறுவது முற்றிலும் பொறுப்பீனமான செயலாகும். அத்துடன் அறிவு பற்றிய மார்க்சிஸத் தத்துவத்துக்கு முரணானதுமாகும்.



இன்று புரட்சிகர சர்வதேசிய இயக்கமும் மற்றும் மாவோயிச சக்திகளும் மாக்ஸ், எங்கல்ஸ், லெனின், ஸ்டாலின், மாவோ ஆகியோரின் வாரிசுகள் ஆவர். அவர்கள் இந்தப் பாரம்பரியத்தில் உறுதியாக ஊன்றி நிற்க வேண்டும். அத்துடன் அவர்கள் இந்தப் பாரம்பரியத்தின் அடிப்படையில் அதன் குறைபாடுகளை விமர்சிக்கத் துணிய வேண்டும். போற்ற வேண்டிய அனுபவங்களும் உண்டு. கவலைதரும் அனுபவங்களும் உண்டு. அவற்றிலிருந்து சரியான முடிவுகளையும் பயனுள்ள படிப்பினைகளையும் பெறுவதற்காக சகல நாடுகளிலுமுள்ள கம்யூனிஸ்டுகளும் புரட்சிவாதிகளும் இந்த வெற்றி தோல்வி அனுபவங்களை ஆழமாக யோசித்து பாரதூரமாக ஆராய வேண்டும்.

எமது பாரம்பரியத்தின் தொகுப்பு ஒரு கூட்டுப் பொறுப்பு. முழு சர்வதேசிய கம்யூனிஸ இயக்கமும் இதனைச் செய்யவேண்டும். இந்தத் தொகுப்பு கண்டிப்பானதோர் விஞ்ஞான முறையில் மாக்சிஸ லெனினிசக் கோட்பாடுகளின் அடிப்படையில் அப்பொழுது நிலவிய ஸ்தூலமான வரலாற்று நிலைமைகள், பாட்டாளி வர்க்க முன்னணிப் படைக்கு அவை வகித்த எல்லைகள் ஆகியவற்றை முற்றிலும் கணக்கிலெடுத்து எல்லாவற்றுக்கும் மேலாக இறந்த காலத்தை நிகழ்காலத்துக்கு சேவை புரியச் செய்யவும் வரலாற்று நிலைமைகளைப் பொருட்படுத்தாமல் கடந்த காலத்தை இன்றைய அளவுகோலால் அளக்கும் நிலையியற் தவறுகளைத் தவிர்க்கும் உணர்வுடன் செய்யப்பட வேண்டும். இத்தகைய பூரணமான தொகுப்பிற்குக் கணிசமான நீண்ட காலம் பிடிக்கும். ஆனல் உலக சம்பவங்கள் ஏற்படுத்தும் நிர்ப்பந்தம், புரட்சிகர வாய்ப்புகளின் திறப்பு ஆகியவற்றினல் சில முக்கிய படிப்பினைகளை இப்பொழுது பெற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. இது பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படைகள் தமது பொறுப்புகளை நிறைவேற்ற மேலும் துணைபுரியும்.

வரலாற்று அனுபவத்தின் தொகுப்பு என்பதே எப்பொழுதும் வர்க்கப் போராட்டத்தின் கூர்மையான அரங்கமாக இருந்துவந்துள்ளது. பாரிஸ் கம்யூனின் தோல்வி முதல் சந்தர்ப்பவாதிகளும் திரிபுவாதிகளும் சரியையும் பிழையையும் குழப்பி முக்கியமானதையும் முக்கியமற்றதையும் குழப்பி "பாட்டாளி வர்க்கம் ஆயுதம் ஏந்தியிருக்கக் கூடாது" என்று கூற பாட்டாளி வர்க்கத்தின் தோல்விகளையும் குறைபாடுகளையும் பயன்படுத்தி வந்துள்ளனர். "ஆக்கபூர்வமான வளர்ச்சி" என்ற பெயர்ப் பலகையின் கீழ் மாக்சிஸத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை மறுதலிக்க ஒரு சாக்குப் போக்காக புதிய நிலைமைகளின் தோற்றம் எப்பொழுதும் பாவிக்கப்பட்டு வந்துள்ளது. அதே வேளையில் மாக்சிஸ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



லெனினிச விமர்சன ரீதியான உணர்வைக் கைவிட்டு பாட்டாளி வர்க்கத்தின் குறைபாடுகளையும் வெற்றிகளையும் தொகுக்கத் தவறி கடந்த காலத்தில் சரியெனக் காணப்பட்ட நிலைமைகளையும் உயர்த்திப் பிடித்து அல்லது மீண்டும் மீண்டும் போற்றுவதுடன் திருப்திப்படுவது தவறானது. முந்தியது போலவே தீங்கானது. இத்தகைய அணுகுமுறையினால் மாக்சிஸம் லெனினிசம் கலவோடாகி எதிரியின் தாக்குதல்களுக்கு நின்றுபிடிக்க முடியாததாகி வர்க்கப் போராட்டத்தில் புதிய முன்னேற்றங்களுக்குத் தலைமைதாங்க முடியாததாகிவிடும். இதனால் அதன் புரட்சிகர சாராம்சம் திருகிக் கொல்லப்படும்.

மாக்சிஸத்தின் உண்மையான ஆக்கபூர்வமான வளர்ச்சிகள் (போலியான திரிபுவாதப் பிறழ்வுகள் அல்ல) எப்பொழுதும் மாக்சிஸம் லெனினிசத்தின் அடிப்படைக் கோட்பாடுகளைப் பாதுகாத்து உயர்த்திப் பிடிப்பதற்கான உக்கிரமான போராட்டத்துடன் இணைந்து பிணைந்திருக்கின்றன என்பதை வரலாறு காட்டுகின்றது. பகிரங்கத் திரிபுவாதிகளுக்கும் "மாக்சிஸப் பழமைபேணல்" என்ற போர்வையில் புரட்சியை எதிர்த்த கோட்ஸ்கி போன்றவர்களுக்கும் எதிராக லெனின் நடத்திய இருமுனைப் போராட்டமும் மாசேதுங் நவீன திரிபுவாதிகளையும் லெனின் ஸ்டாலின் ஆகியோரின் கீழ் சோவியத் யூனியனில் சோஷலிசத்தைக் கட்டியமைப்பதில் பெற்ற அனுபவத்தை அவர்கள் மறுதலிப்பதையும் எதிர்த்து மகத்தான சமரை நடத்திய அதே வேளையில் திரிபுவாதத்தின் வேர்களைப் பற்றி முற்றுமுழுதான விஞ்ஞான ரீதியான விமர்சனத்தை நடத்தியதும் இதற்கு உதாரணமாகும்.

இன்று சர்வதேசிய கம்யூனிஸ இயக்கத்தின் சிக்கலான கேள்விகள் பிரச்சினைகளையொட்டி இத்தகையதோர் அணுகுமுறைதான் தேவைப்படுகின்றது. மாசேதுங்கின் மறைவுக்குப் பின் சர்வதேசிய கம்யூனிஸ இயக்கத்தில் ஏற்பட்டுள்ள பின்னடைவுகளைக் கண்டு மாக்சிஸம் லெனினிசம் தோல்வி கண்டுவிட்டது. பாட்டாளி வர்க்கம் பெற்ற முழு அனுபவமும் சந்தேகத்துக்குரியது என்று கூறுவோர் பாரியதோர் அபாயமாக அமைகின்றனர். இந்தப் போக்கில் சோவியத் யூனியனில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் அனுபவம் மறுதலிக்கப்படும்; பாட்டாளி வர்க்கத் தலைவர்களின் அணியிலிருந்து ஸ்டாலின் நீக்கப்படுவார்; வாஸ்தவத்தில் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் இயல்பு. முன்னணிப் படையான கட்சியின் தேவை, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் ஆகியன பற்றிய அடிப்படையான லெனினிஸக் கருத்துக்கள் தாக்கப்படும். மாவோ ஆற்றலுடன் கூறியவாறு, "இரண்டு வாள்கள் உண்டு என நான் கருதுகின்றேன். ஒன்று லெனின். மற்றது ஸ்டாலின்.



ஸ்டாலின் என்ற வாளை ஒதுக்கியதும், இந்தக் கதவைத் திறந்ததும் பொதுவாக லெனினிசம் வீசியெறியப்படுகின்றது." 1956-ல் மாசேதுங் நிகழ்த்திய இந்தக் கூற்று இன்றுவரை பெறுமதியானதாக இருக்கின்றது என்பதை சர்வதேசிய கம்யூனிஸ இயக்கத்தின் அனுபவம் காட்டுகின்றது. அதுபோலவே இன்று, புரட்சி என்ற விஞ்ஞானத்தைப் பொறுத்து மாசேதுங் நிகழ்த்திய முன்னேற்றங்கள் தாக்கப்படுகின்றன அல்லது இனங்காண முடியாதவாறு சிதைக்கப்படுகின்றன. உண்மையில இவை அனைத்தும் மிகவும் பழைய பாசிபிடித்த திரிபுவாதத்தினதும் சோஷல் ஜனநாயத்தினதும் "புதிய பதிப்பாகும்.

ஏறக்குறைய இந்த பகிரங்கமான திரிபுவாதம், அது பழைய மொஸ்கோ — சார்புக் கட்சிகளிலிருந்து வந்தாலும் சரி, அதன் "ஐரோப்பிய கம்யூனிஸ" ஓட்டத்திலிருந்து வந்தாலும் சரி, சீனாவிலுள்ள திரிபுவாத அபகரிப்பாளர்களிடமிருந்து வந்தாலும் சரி, அல்லது ட்ரொஸ்கியவாதிகளிடமிருந்தும் லெனினிஸத்தின் குட்டி பூர்ஷ்வா விமர்சகர்களிடமிருந்தும் வந்தாலும் சரி, இது சர்வதேசிய கம்யூனிஸ் இயக்கத்தின் பிரதான ஆபத்தாக இருக்கின்றது. அதேவேளையில் வரட்டுத் தத்துவாத வடிவிலான திரிபுவாதம் தொடர்ந்து புரட்சிகர மாக்சிஸத்தின் கடுஸ்மயான எதிரியாக இருக்கின்றது. அன்வர் ஹோஷாவினதும் அல்பேனிய தொழிற் கட்சியினதும் அரசியல் மார்க்கத்தில் மிகவும் கூர்மையாகப் பிரதிபலிக்கும் இந்த ஓட்டம் மாசேதுங் சிந்தனையைத் தாக்குகின்றது. சீனப் புரட்சியின் பாதையைத் தாக்குகின்றது. குறிப்பாக மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் அனுபவத்தைத் தாக்குகின்றது. ஸ்டாலினின் பாதுகாவலர்கள் (உண்மையில் இவர்களின் பல முடிவுகள் ட்ரொஸ்கியவாதமானவை) என்று வேடம்போட்ட இந்தத் திரிபுவாதிகள் ஸ்டாலினின் உண்மையான புரட்சிப் பாரம்பரியத்தை மாசுபடுத்துகின்றனர். இந்த ஏமாற்றுப் பேர்வழிகள் தமது திரிபுவாத — ட்ரொஸ்கியவாத மார்க்கத்துக்கு முண்டு கொடுக்க சர்வதேசிய கம்யூனிஸ இயக்கத்தின் சாதனைகளையல்ல, குறைபாடுகளையும் தவறுகளையும் பயன்படுத்தி ஏதோ மர்மமான "தத்துவப் பரிசுத்த நிலைமை"க்குத் திரும்பிச் செல்லும் அடிப்படையில் சர்வதேசிய கம்யூனிஸ இயக்கம் தம்மைப் போலவே செய்ய வேண்டும் என்று கோருகின்றனர். பகிரங்கமாக லெனினிஸத்துக்கு விரோதமான "ஐரோப்பிய கம்யூனிஸம்", ஹோஷாவின் மாறுவேடம் பூண்ட லெனினிஸ விரோதம் இரண்டையும் சோவியத் திரிபுவாதமும் (பொதுவாகப் பிற்போக்கும்) ஊக்குவித்து அவற்றிலிருந்து இலாபம் பெறுவது உட்பட பழைய திரிபுவாதத்துடன் இந்த ஹோஷா மார்க்கம் கொண்டுள்ள பொது இயல்புகள் இவற்றின் பொதுவான பூர்ஷ்வா சித்தாந்த அடிப்படையை நிரூபிக்கின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இன்று சர்வதேசிய இயக்கத்திலும் உலகிலுள்ள வர்க்க உணர்வுள்ள தொழிலாளர்கள் மற்றும் புரட்சிகர எண்ணங்கொண்ட மக்கள் மத்தியிலும் மாசேதுங் மார்க்சிஸம் – லெனினிஸத்தை குணும்சரீதியாக வளர்த்ததை உயர்த்திப் பிடிப்பது மிகுதியும் முக்கியமான அவசரமான பிரச்சினையாகும்.

மாசேதுங் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கும் மார்க்சிஸம் – லெனினிஸம் என்ற விஞ்ஞானத்துக்கும் ஆற்றிய தீர்க்கமான பங்களிப்பை உயர்த்திப் பிடித்து அதனை வளர்த்தெடுப்பதா இல்லையா என்பது தான் இதிற் சம்பந்தப்பட்ட கோட்பாடாகும். ஆகவே இது மார்க்சிஸம் – லெனினிஸத்தை உயர்த்திப் பிடிப்பதா இல்லையா என்ற பிரச்சினை தவிர வேறு எதுவுமல்ல.

"லெனினிஸம் என்பது ஏகாதிபத்தியம், பாட்டாளி வர்க்கப் புரட்சி ஆகியவற்றின் யுகத்தின் மார்க்சிஸம்" என்று ஸ்டாலின் கூறினார். இது முற்றிலும் சரி. லெனின் மறைவுக்குப் பின் உலக நிலைமை பெரும் மாற்றங்களுக்கூடாகச் சென்றுள்ளது. ஆனுல் யுகம் மாறவில்லை. லெனினிஸத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் காலாவதியாகி விடவில்லை. அவை இன்றும் எமது சிந்தனைக்கு வழிகாட்டும் தத்துவ அடிப்படையாக விளங்குகின்றன. மாசேதுங் சிந்தனை, மார்க்சிஸம் – லெனினிஸத்தின் வளர்ச்சியில் ஒரு புதிய கட்டம் என்று நாம் உறுதிப்படுத்துகின்ரும். மார்க்சிஸம் – லெனினிஸம் – மாசேதுங் சிந்தனையை உயர்த்திப் பிடித்து அதனை வளர்த்தெடுக்காமல் திரிபுவாதத்தையும் ஏகாதிபத்தியத்தையும் பொதுவான பிற்போக்கையும் தோற்கடிக்க முடியாது.

## சோவியத் யூனியனும் கொமின்ரேனும்.

ரஷ்ய ஒக்டோபர் புரட்சியும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் ஸ்தாபகமும் சர்வதேசிய தொழிலாளி வர்க்க இயக்கத்தின் வரலாற்றில் புதியதோர் கட்டத்தைத் திறந்து வைத்தன. பாட்டாளி வர்க்கப் புரட்சி பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் ஆகியன பற்றிய மார்க்சிஸத் தத்துவத்தைப் பொறுத்து லெனின் செய்துள்ள முக்கிய வளர்ச்சியின் உயிருள்ள நிரூபணமாக ஒக்டோபர் புரட்சி அமைகின்றது. வரலாற்றில் முதற் தடவையாக தொழிலாளி வர்க்கம் பழைய



அரசு இயந்திரத்தை சுக்குநூருக்கி அதன் சொந்த ஆட்சியை ஸ்தாபித்து இந்த சோஷலிச ஆட்சியை தொட்டிலிலேயே திருகிக் கொல்ல சுரண்டல்காரர் எடுத்த முயற்சிகளைத் தோற்கடித்து புதிய, சோஷலிச, பொருளாதார ஒழுங்கு ஒன்றை ஸ்தாபிப்பதற்கு அவசியமான அரசியல் நிலைமைகளை உருவாக்குவதில் வெற்றி கண்டது. இந்தப் போக்கில் புதியரக முன்னணிப் படையான அரசியற் கட்சி ஒன்றின், லெனினிஸக் கட்சியின் கேந்திரப் பாத்திரம் நிரூபிக்கப்பட்டது

ரஷ்ய புரட்சியின் சர்வதேசியப் பாதிப்பு பிரமாண்டமானதாக இருந்தது. குறிப்பாக இந்தப் புரட்சி முதலாம் உலக யுத்தம் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட புரட்சிகர நடவடிக்கைப் பேரெழுச்சி ஆகியன இருந்த உலக நிலைமையில் ஏற்பட்டபடியால், பிரமாண்டமானதாக இருந்தது. ஆரம்பத்திலிருந்தே இந்தப் புதிய சோஷலிச அரசின் தலைவர்களும் வர்க்க உணர்வுள்ள தொழிலாளர்களும் அங்கு புரட்சியின் வெற்றியை ஒரு முடிவாகக் கருதவில்லை. உலகம் பூராவிலும் ஏகாதிபத்தியத்தைத் தோற்கடித்து சுரண்டலை ஒழித்து கம்யூனிஸத்தை ஸ்தாபிப்பதற்கான உலகந் தழுவிய போராட்டத்தில் முதலாவது பெரும் உடைப்பாகவே கருதினுர்கள். ரஷ்யப் புரட்சியைத் தொடர்ந்து போல்ஷிவிக் புரட்சியின் முக்கிய படிப்பினைகளை உட்செறித்தும் இரண்டாவது சர்வதேசியத்தில் இருந்த மிகப் பெரும்பான்மை சோஷலிஸக் கட்சிகளை நச்சுப்படுத்தி இறுதியில் அவற்றின் இயல்பாய் அமைந்த சீர்திருத்தவாதம் சோஷல் ஜனநாயகம் ஆகியவற்றுடன் உறவைத் துண்டித்துக் கொண்டும் புதிய கம்யூனிஸ்ட் சர்வதேசியம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது ரஷ்யப் புரட்சியும் கொமின்ரேனும் முதலாம் உலக யுத்தத்தினுல் ஏற்பட்ட புறநிலை வளர்ச்சிகளுக்கிணங்க சாராம்சத்தில் ஐரோப்பியத் தோற்றப்பாடாக இருந்த சோஷலிஸம், கம்யூனிஸத்துக்கான போராட்டத்தை வரலாற்றில் முதற் தடவையாக உண்மையில் உலகந்தழுவிய போராட்டமாக மாற்றின.

லெனினும் ஸ்டாலினும் தேசியப் பிரச்சினை, காலனிப் பிரச்சினை ஆகியன பற்றிய பாட்டாளி வர்க்க மார்க்கத்தை விருத்தி செய்து, உலகம் பாட்டாளி வர்க்கப் புரட்சி என்ற முழுமையான போக்கில் அடக்கி ஒடுக்கப்பட்ட நாடுகளில் புரட்சிகளின் முக்கியத்தை வற்புறுத்தி இந்த நாடுகளின் புரட்சி ஏகாதிபத்திய நாடுகளில் பாட்டாளி வர்க்கத்தின் வெற்றியில் தங்கியிருக்கின்றது என்று கூறியவர்களும் இந்தவகை நாடுகளில் முதலில் புரட்சியின் பூர்ஷ்வா ஜனநாயகக் கட்டத்திற்குத் தலைமை தாங்கியதன் அடிப்படையில் பாட்டாளி வர்க்கம் சோஷலிசப் புரட்சி நடத்துவதன் சாத்தியப்பாட்டை மறுத்தவர்களுமான ட்ரொஸ்கி போன்ருேருக்கு எதிராக வாதிட்டார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ரஷ்யப் புரட்சியைத் தொடர்ந்த காலகட்டத்தில் உலகம் பூராவிலும் புரட்சிகரக் கொந்தளிப்பு ஏற்பட்டது. பல நாடுகளில் தொழிலாளி வர்க்க அரசியல் அதிகாரத்தை ஸ்தாபிக்கும் முயற்சிகள் ஏற்பட்டன. புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட சோவியத் யூனியனின் உறுதியான ஆதரவும் லெனினின் அரசியல் கவனிப்பும் உலகம் தழுவிய புரட்சிகர இயக்கத்துக்குக் கிடைத்தபோதும் முதலாம் உலக யுத்தம் பிரதிபலித்த நெருக்கடி தற்காலிகமாகத் தீர்க்கப்பட்டதும் ஏகாதிபத்திய வல்லரசுகளின் மீதப் பலம் காரணமாகவும் புரட்சிகரத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் பலவீனங்கள் காரணமாகவும் சோவியத் யூனியனின் எல்லைகளுக்கு வெளியே புரட்சி தோல்வியைக் கண்டது.

சோவியத் யூனியனில் புரட்சியின் கனிகளைப் பாதுகாத்து சோவியத் யூனியனில் மாத்திரம் சோஷலிசப் பொருளாதார அமைப்பொன்றை ஸ்தாபிக்கும் அவசியம் லெனினுக்கும் அவருடைய வாரிசான ஸ்டாலினுக்கும் ஏற்பட்டது. லெனின் மறைவுக்குப் பின் ஸ்டாலின் முக்கியமானதோர் சித்தாந்த, அரசியல் போராட்டத்தை நடத்தினர். சோவியத் யூனியனில் உற்பத்தி சக்திகளின் தாழ்ந்த மட்டம், பிரமாண்டமான விவசாய வர்க்கம் இருப்பது. அதன் சர்வதேசிய தனிமைப்பாடு ஆகியவற்றின் காரணமாக சோஷலிச நிர்மாணத்தைச் செய்வது சாத்தியமில்லை என்று கூறிய ட்ரொஸ்கிக்கும் பிறருக்கும் எதிராக அவர் இப் போராட்டத்தை நடத்தினர். அவர்களின் தவறான, சரணாகதிவாதக் கருத்து தத்துவரீதியிலும் மேலும் முக்கியமாக நடைமுறையிலும் நிராகரிக்கப்பட்டது. கோடிக்கணக்கான தொழிலாளர்களும் விவசாயிகளும் பழைய முதலாளித்துவ அமைப்பைத் தூக்கியெறிந்து விவசாயத்தைக் கூட்டுமயமாக்கி மனிதனை மனிதன் சுரண்டுவதை அடிப்படையாகக் கொள்ளாத புதிய பொருளாதார அமைப்பொன்றை உருவாக்க சமருக்குச் சென்று நடைமுறை ரீதியில் இதனை நிராகரித்தார்கள்.

இந்த உணர்ச்சியூட்டும் சமர்களும் அதில் பெறப்பட்ட முக்கிய வெற்றிகளும் மாக்சிஸம் – லெனினிஸத்தின் செல்வாக்கைப் பெரிதும் பரப்பி சோவியத் யூனியனின் கௌரவத்தை உலகம் பூராவிலும் அதிகரிக்கச் செய்தன. வர்க்க உணர்வுள்ள தொழிலாளர்களும் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களும் சரியாகவே சோஷலிச சோவியத் யூனியனைத் தமக்குச் சொந்தமானதெனக் கருதி சோவியத் தொழிலாளி வர்க்கம் பெற்ற வெற்றிகளைக் கண்டு களிப்படைந்தார்கள். ஏகாதிபத்தியவாதிகளின் அச்சுறுத்தல்களுக்கும் தாக்குதல்களுக்கும் எதிராக அதனைப் பாதுகாக்க முன்வந்தார்கள்.



இருப்பினும் இப்பொழுது பின்னோக்கிப் பார்க்கும்போது, இருபதாம் ஆண்டுகளின் பிற்பகுதியிலும் முப்பதாம் ஆண்டுகளிலும் நடைபெற்ற மகத்தான சோஷலிச மாற்றக் காலகட்டத்திற்கூட சோவியத் யூனியனிலான சோஷலிசப் புரட்சியின் முன்னேற்றத்தில் கடுமையான பலவீனங்களும் குறைபாடுகளும் இருப்பதைக் காணமுடியும். பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தின் குறுகியகாலப் பாரிஸ் கம்யூன் அனுபவம் தவிர முந்திய வரலாற்று அனுபவம் இன்மை. சோவியத் யூனியனுக்கு எதிரான கடுமையான ஏகாதிபத்திய முற்றுகை, ஆக்கிரமிப்பு ஆகியன இந்தச் சில பலவீனங்களுக்கான காரணங்களாகும். சில முக்கியமான தத்துவார்த்த, அரசியல் தவறுகளால் இந்தப் பிரச்சினைகள் அதிகரித்துப் பெருகின. மாசேதுங் குருசேவின் அவதூற்றுத் தாக்குதல்களிலிருந்து ஸ்டாலினைப் பாதுகாத்த அதேவேளையில் இந்தத் தவறுகளைக் கடுமையாகவும் சரியாகவும் விமர்சித்துள்ளார். மாவோ ஸ்டாலினின் தவறுகளுக்கான தத்துவார்த்த அடிப்படையை விளக்கிக் கூறினர். ஸ்டாலின் ஓரளவு நிலையியலைக் கொண்டவராக இருந்தார். அவரை பின்பற்றி பலர் நிலையியலை மேற்கொண்டனர். "எதிரானவற்றின் போராட்டம் எதிரானவற்றின் ஐக்கியம் ஆகியவற்றுக்கிடைத் தொடர்பைக் காண ஸ்டாலின் தவறினர். சோவியத் யூனியனில் சிலர் தமது சிந்தனையில் அவ்வளவு இறுக்கமானவர்களாகவும் நிலையியலானவர்களாகவும் இருக்கின்றனர். ஒரு விஷயம் இது அல்லது அதாக இருக்க வேண்டும் என்று அவர்கள் நினைக்கின்றனர். எதிரானவற்றின் ஐக்கியம் என்பதை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர். இதனால் அரசியல் தவறுகள் இழைக்கப்படுகின்றன." சகல துறைகளிலும் இயங்கியலை முற்றுமுழுதாகப் பிரயோகிக்கத் தவறியமை ஸ்டாலினின் மிகவும் அடிப்படையான தவறாகும். இதனால் அவர் சோஷலிசத்தின் கீழ் வர்க்கப் போராட்டத்தின் இயல்பு பற்றியும் முதலாளித்துவ மீட்சியைத் தடுப்பதற்கான வழிமுறைகள் பற்றியும் மிகவும் தவறான முடிவுகளைப் பெற்றுக்கொண்டார். ஸ்டாலின் பழைய சுரண்டும் வர்க்கங்களுக்கு எதிராக உக்கிரமான போராட்டம் ஒன்றை நடத்திய அதே வேளையில் சோஷலிச சமுதாயத்துக்குள்ளிருந்தே, கம்யூனிஸ்ட் கட்சியிலுள்ள திரிபுவாதிகளால் பிரதிபலிக்கப்பட்டு அவர்கள் மத்தியிலிருந்து புதிய பூர்ஷ்வா வர்க்கம் ஒன்று தோன்றுவதைத் தத்துவரீதியில் மறுத்தார். இதனால்தான் அவர், தொழிற் துறையிலும், விவசாயத்திலும் சோஷலிச உடைமை முறையை அடிப்படையில் ஸ்தாபித்ததன் விளைவாக சோவியத் யூனியனில் பகைமையான வர்க்க முரண்பாடுகள் அழித்தொழிக்கப்பட்டன என்று தவறாகக் கூறினர். இதுபோலவே சோஷலிச சமுதாயத்தை ஆராய்வதில் இயங்கியலை முழுதாகப் பாவிக்கத் தவறியதால் சோவியத் தலைவர்கள் சோஷலிசத்தின் கீழ் உற்பத்தி சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையில் இனிமேலும் முரண்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாடு கிடையாது என்ற முடிவுக்கு வந்தனர். இதனால் மேலமைப்பில் புரட்சியை நடத்துவதில் போதிய கவனம் செலுத்தத் தவறினார்கள். அடிப்படையில் சோஷலிச உடைமை முறையை ஸ்தாபித்த பின்னரும் உற்பத்தி உறவுகளைத் தொடர்ந்து புரட்சிமயப்படுத்தத் தவறினார்கள்.

சோஷலிச சமுதாயத்தின் இயல்பு பற்றிய இந்தத் தவறான விளக்கம் காரணமாக ஸ்டாலின் மக்களுக்கும் எதிரிக்கும் இடையிலுள்ள முரண்பாடுகளையும் மக்கள் மத்தியிலுள்ள முரண்பாடுகளையும் போதியளவு இனங்காணத் தவறினார். இதனால் இந்த முரண்பாடுகளைக் கையாள்வதில் குறிப்பிடத்தக்க அதிகாரத்துவவாத முறைகள் அனுசரிக்கப்பட்டன. இது எதிரிக்கு மேலும் பல வாய்ப்புகளை வழங்கியது.

லெனின் மறைவுக்குப் பின் ஸ்டாலின் கம்யூனிஸ்ட் சர்வதேசியத்துக்குத் தலைமை தாங்கினார். இந்த ஸ்தாபனம் உலகப் புரட்சியை முன்னேறச் செய்வதிலும் புதிதாக அமைக்கப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சிகளை வளர்த்து ஸ்திரப்படுத்துவதிலும் முக்கிய பாத்திரம் வகித்தது.

1935-ல் கம்யூனிஸ்ட் சர்வதேசியத்தின் மிகவும் முக்கியமான மாநாடு ஒன்று நடைபெற்றது. கடுமையான உலகப் பொருளாதார நெருக்கடி, புதிய உலக யுத்தம் ஒன்றின் வளரும் ஆபத்து, சோவியத் யூனியன் மீதான ஏகாதிபத்தியத் தாக்குதல்கள், ஜேர்மனியில் பாசிஸம் ஆட்சிக்கு வந்தமை, மற்றும் பல நாடுகளில் பாசிஸத்தின் அச்சுறுத்தல் ஆகியவற்றின் மத்தியில் இந்த மாநாடு நடைபெற்றது. இந்தப் பிரச்சினைகள் அனைத்தையும் பொறுத்து தந்திரோபாய மார்க்கம் ஒன்றை கம்யூனிஸ்ட் சர்வதேசியம் விருத்தி செய்ய முயற்சித்தமை தேவையாயிருந்தது, சரியாயிருந்தது.

கொமின்ரேனின் ஏழாவது மாநாடு சர்வதேசிய இயக்கத்தின் வரலாற்றில் ஆழமான செல்வாக்கு வகித்துள்ளபடியால் அக்காலத்தில் நிலவிய வரலாற்று நிலைமைகளுக்கிணங்க இந்தக் காங்கிரசின் அறிக்கையை நிதானமாகவும் விஞ்ஞான ரீதியாகவும் மதிப்பீடு செய்வது அவசியம். குறிப்பாக ஜேர்மன் கம்யூனிஸ்ட் கட்சியின் தோல்விக்கான காரணங்களை ஆழமாக ஆராய வேண்டும். இருப்பினும் சில முடிவுகளை இப்பொழுது செய்ய முடியும். இன்றைய மார்க்சிஸ - லெனினிச வாதிகளின் தற்போதைய பணிகளுக்கிணங்க இதனைச் செய்ய வேண்டும்; மூன்று தெளிவான பிறழ்வுகளை இனங்காண வேண்டும்.



முதலாவதாக, பாசிஸத்துக்கும் ஏகாதிபத்திய நாடுகளிலுள்ள பூர்ஷ்வா ஜனநாயகத்துக்கும் இடையிலான வித்தியாசம், கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு நிச்சயமாக உண்மை முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தபோதும், இந்த இரண்டு வகை பூர்ஷ்வா சர்வாதிகாரத்துக்கும் இடையிலான வித்தியாசத்தை சம்பூரணமானதாக்கும் முறையிலும் பாசிஸத்துக்கு எதிரான போராட்டத்தின் யுத்ததந்திரக் கட்டம் ஒன்றை உருவாக்கும் முறையிலும் கையாளப்பட்டது.

இரண்டாவதாக, பாட்டாளி வர்க்கம் மென்மேலும் வறுமைப்படுவதனால் முன்னேறிய நாடுகளில் தொழிலாளி வர்க்கத்தில் ஏற்பட்ட பிளவையும், இதன் விளைவாக ஏற்பட்ட பிரிவுச் சேர்க்கையையும் குணப்படுத்தும் பொருளாயத அடிப்படை ஒன்று உருவாகும் எனவும் ஒரு ஆய்வுரை முன்வைக்கப்பட்டது.

ஏகாதிபத்தியம், இரண்டாவது சர்வதேசியத்தின் வீழ்ச்சி, ஆகியன பற்றிய தமது படைப்புக்களில் லெனின் தொழிலாளி வர்க்கத்தின் பிரிவு இதன் விளைவாக ஏற்பட்ட பிரிவுச் சேர்க்கை ஆகியன பற்றி மிகவும் ஆற்றலுடன் ஆராய்ந்துள்ளார். நெருக்கடியின் ஆழம், முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில் பிரபுத் தட்டின் சமூக அடிப்படைக்குக் குழிபறித்து முன்னர் சோஷல் ஜனநாயகவாதிகளின் ஆதிக்கத்தின் கீழிருந்த தொழிலாளர்களில் பெரும்பகுதியினருடன் ஐக்கியப்பட கம்யூனிஸ்ட் கட்சிகள் பாவிக்கக்கூடிய உண்மை வாய்ப்புக்களை உருவாக்கியபோதும், எந்தவித யுத்த தந்திர அர்த்தத்திலும் தொழிலாளி வர்க்கத்தில் ஏற்பட்ட பிளவைக் குணப்படுத்த முடியும் என்று நம்புவது தவறானது.

மூன்றாவதாக, பாசிஸத்தை ஏகாதிபத்திய நாடுகளிலுள்ள ஏகபோக பூர்ஷ்வா வர்க்கத்தின் மிகவும் பிற்போக்கான பகுதியின் ஆட்சி என்று வரையறுத்தபோது ஏகபோக பூர்ஷ்வா வர்க்கத்தின் ஒரு பகுதியை முற்போக்கானது என்று காணும் அபாயகரமான சீர்திருத்தவாத, சந்தர்ப்பவாதப் போக்கிற்கு வழி திறந்து வைக்கப்பட்டது.

இந்தத் தவறுகளைத் தொகுத்து அவற்றிலிருந்து படிப்பினை பெற்றுக் கொள்ளும் அதேவேளையில், இந்தக் காலம் உட்பட, கம்யூனிஸ்ட் சர்வதேசியத்தை கம்யூனிஸத்துக்கான புரட்சிப் போராட்டப் பாரம்பரியத்தின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொண்டு, உண்மைத் தவறுகளைப் பற்றிப் பிடித்து பிற்போக்கான முடிவுகளைச் செய்யும் ஒழிப்புவாத, ட்ரொஸ்கியவாத முயற்சிகளைத் தோற்கடிக்க வேண்டும். இந்தக் காலத்திலும் கம்யூனிஸ்ட் சர்வதேசியம் வர்க்க எதிரிகளுக்கு எதிராகக் கோடிக்கணக்கான தொழிலாளர்களை அணிதிரட்டி பிற்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போக்கிற்கு எதிராக வீரமிக்க போராட்டங்களுக்குத் தலைமை தாங்கியது. ஸ்பெயினில் பாசிஸத்துக்கு எதிராகப் போரிட சர்வதேசிய பிரிகேடுகளை ஸ்தாபனப்படுத்தியது இவற்றில் ஒன்று. ஸ்பெயினில் சர்வதேசியத்துவத்தின் உற்சாகந்தரும் ஆதர்சங்களாக தொழிலாளி வர்க்கத்தின் உன்னத புத்திர, புத்திரிகள் தமது இரத்தத்தைச் சிந்தினார்கள்.

கம்யூனிஸ்ட் சர்வதேசியம் சரியாகவே சோவியத் யூனியனை, சோஷலிசப் பூமியைப் பாதுகாப்பதைப் பெரிதும் வற்புறுத்தியது. ஆனால் பல்வேறு ஏகாதிபத்திய நாடுகளுடன் சோவியத் யூனியன் சில சமரசங்களைச் செய்துகொண்டபோது கொமின் ரேணின் தலைவர்கள் 1946-ல் ( சோவியத் யூனியனுக்கும் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகியவற்றுக்கு மிடையில் அப்பொழுது செய்யப்பட்ட சமரசங்களை ஒட்டி ) மாசேதுங் தொகுத்தளித்த விமர்சன அம்சத்தை அநேகமாகப் புரிந்து கொள்ளத் தவறினார்கள். " இந்த சமரசத்தைக் கண்டு முதலாளித்துவ உலகின் நாடுகளிலுள்ள மக்கள் அப்படியே செய்து உள்நாட்டில் சமரசங்களைச் செய்ய வேண்டும் என்பதில்லை " மேலும் இந்த சமரசங்களில் முதலாவதாகவும் முக்கியமாகவும் உலகப் புரட்சிகர இயக்கத்தின் முழுமையான வளர்ச்சி கணக்கில் எடுக்கப்பட வேண்டும். இயல்பாகவே இதில் சோஷலிச அரசுகளைப் பாதுகாப்பது முக்கிய பாத்திரம் வகிக்கின்றது.

சோஷலிச அரசுகள் அல்லது ஒரு சோஷலிச அரசு ஏகாதிபத்திய சுற்றிவளைப்புக்குள்ளாகும் போது இந்தப் புரட்சி வெற்றிகளைப் பாதுகாப்பது சர்வதேசிய பாட்டாளி வர்க்கத்தின் மிக முக்கியமானதோர் பணியாகும். சோஷலிச அரசுகள் ராஜதந்திரப் போராட்டம் நடத்தி சிலவேளைகளில் ஒரு ஏகாதிபத்திய வல்லரசுடன் அல்லது இன்னொரு ஏகாதிபத்திய வல்லரசுடன் பல்வகை உடன்பாடுகளைச் செய்து கொள்வதும் அவசியமாகின்றது. ஆனால் சோஷலிச அரசுகளைப் பாதுகாப்பது எப்பொழுதும் உலகப் புரட்சியின் முழுமையான முன்னேற்றத்துக்குக் கீழ்ப்பணிந்ததாக இருக்க வேண்டும். பாட்டாளி வர்க்கத்தின் சர்வதேசியப் போராட்டத்துக்கு சமமானதாக அதனை ஒருபோதும் கருதக் கூடாது. பதிலானதாக அறவே கருதக் கூடாது. சில நிலைமைகளில் சோஷலிச நாட்டைப் பாதுகாப்பது பிரதான விஷயமாகலாம், ஆனால் இதுவும் உலகப் புரட்சியின் முன்னேற்றத்துக்கு சோஷலிச நாட்டைப் பாதுகாப்பது தீர்க்கமானது என்பதாலேயாகும்.



இந்தப் படிப்பினைகளை மனதிற் கொண்டு இரண்டாம் உலக யுத்தத்தைச் சூழவுள்ள காலத்தில் சர்வதேசிய கம்யூனிஸ இயக்கத்தின் அனுபவங்களைத் தொகுப்பது அவசியம். இரண்டாம் உலக யுத்தத்தை முதலாம் உலக யுத்தத்தின் மறுதலிப்பு என்று மட்டும் கருதிவிட முடியாது. ஏனென்றால் முதலாளித்துவ அமைப்பின் அதே கொலைகாரத் தர்க்க நியாயம்தான் இதற்குக் காரணம் என்றபோதிலும் இரண்டாம் உலக யுத்தம் சிக்கலான முரண்பாடுகளின் சேர்க்கையாகும். 1939-ல் இந்த யுத்தம் ஆரம்பித்த போது, மாவோ அப்பொழுது சுட்டிக் காட்டியவாறு, அது " அநீதியான, சூறையாடல்தனமான, ஏகாதிபத்திய இயல்புடைய " யுத்தமாகும். ஆனால் ஹிட்லர் ஜேர்மனி சோவியத் யூனியனுக்கு எதிராகத் தனது துருப்புகளைத் திருப்பிவிட்ட போது கோளரீதியான பாதிப்புகள் உடைய பெரியதோர் மாற்றம் ஏற்பட்டது. சோவியத் யூனியனின் இந்த நீதியான யுத்தம் உலகம் பூராவுமுள்ள தொழிலாளி வர்க்கத்தினதும் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களினதும் ஆதரவையும் அனுதாபத்தையும் பெற்றது. செஞ்சேனையினதும் சோவியத் தொழிலாளி வர்க்கத்தினதும் மக்களதும் வீரமிக்க எதிர்ப்புப் போராட்டம் அவர்களுக்குப் பெரிதும் ஊக்கமளித்தது. இது ஆக்கிரமிப்புக்குப் பலியான ஒருவருக்குக் காட்டப்பட்ட அனுதாபம் மாத்திரமல்ல. சோவியத் யூனியனைப் பாதுகாப்பது உலகப் புரட்சியின் சோஷலிசத் தளப் பிரதேசத்தின் பாதுகாப்புமாகும் என்ற ஆழ்ந்த நம்பிக்கையுமாகும். அதுபோலவே சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் யப்பானிய ஆக்கிரமிப்புக்கு எதிராக சீன மக்கள் நடத்திய யுத்தமும் வளர்ந்தது. அதுவும் ஒரு நீதியான யுத்தமாகும். உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் பிரிக்க முடியாத பகுதியாகும்

குறிப்பாக சோவியத் யூனியன் யுத்தத்துக்குட் பிரவேசித்ததும் இந்த யுத்தம் சிக்கலான இயல்பைக் கொண்டதாயிற்று. நாலுபகுதிகளின் சேர்க்கையாக அது அமைந்தது: சோஷலிசத்துக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் இடை யுத்தம்; ஏகாதிபத்திய முகாம்களுக்கிடை யுத்தம்; ஏகாதிபத்தியத்துக்கு எதிரான அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் யுத்தங்கள்; பாட்டாளி வர்க்கத்துக்கும் பூர்ஷ்வா வர்க்கத்துக்கும் இடையிலான முரண்பாடு. இது சில நாடுகளில் ஆயுதப் போராட்டமட்டத்துக்கு அபிவிருத்தி அடைந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்த வேறுபட்ட அம்சங்களினால் ஒரு புறத்தில், சோஷலிச சக்திகள் வளர்ச்சி அடைந்தன. பாசிஸ ஏகாதிபத்திய வல்லரசுகள் தோற்கடிக்கப்பட்டன. ஏகாதிபத்தியம் பலவீனமாகியது. தேசிய விடுதலைப் போராட்டங்கள் துரித வேகம் பெற்றன. மறுபுறத்தில், ஏகாதிபத்திய உலகப் பங்கீடு புனரமைக்கப்பட்டது. அமெரிக்கா, ஏகாதிபத்தியவாதிகள் மத்தியில் தலைமைக் கொள்ளைக்காரனின் பாத்திரத்தைப் பெற்றுக் கொண்டது.

இரண்டாம் உலக யுத்தத்தின் போக்கில் மாபெரும் புரட்சிகர சாதனைகள் ஏற்பட்டன! அதேவேளையில் இழைக்கப்பட்ட கடுமையான தவறுகளைப் பார்க்காமல் விடுவதும் முடியாது. எதிர்காலப் புயல்களுக்கு நன்கு தயாராக இருப்பதற்காக கூட்டு முறையில் அவற்றை ஆழமாகத் தொகுக்க ஆரம்பிக்க வேண்டும். குறிப்பாக மேற்குறிப்பிட்ட முரண்பாடுகளைக் கூழாம்பாணியாகச் சேர்ந்த தவற்றை நாம் குறிப்பிட முடியும். நடைமுறை அரசியலைப் பொறுத்தவரையில், சோவியத் யூனியனின் ராஜதந்திரப் போராட்டமும் சர்வதேசிய ஒப்பந்தங்களும் கொமின்ரேனை உருவாக்கிய கம்யூனிஸ்ட் கட்சிகளின் நடவடிக்கைகளுடன் போட்டுக் குழப்பியடிக்கப்பட்டன. இந்தப் பிரச்சினையினால் பாசிஸமல்லாத வல்லரசுகளை, அவை தூக்கியெறியப்பட வேண்டிய ஏகாதிபத்தியவாதிகள் என்ற உண்மையிலிருந்து பிரித்து வேறு ஏதோ விசயமாக காட்டும் பலமான போக்குகள் தோன்றின. ஜேர்மன் பாசிஸத் துருப்புகள் இடங்கொண்டிருந்த ஐரோப்பிய நாடுகளில் மக்களை அணிதிரட்டும் நிலைப்பாட்டில் நின்று கம்யூனிஸ்ட் கட்சிகள் தேசிய உணர்வுகளைப் பயன்படுத்துவது தவறானதல்ல. ஆனால் இந்தத் தந்திரோபாய நடவடிக்கைகளை யுத்ததந்திர மட்டத்துக்கு உயர்த்தியதால் தவறுகள் இழைக்கப்பட்டன. இவ் நேசவணி காரணமாக ஏகாதிபத்திய வல்லரசுகளின் ஆதிக்கத்தின் கீழிருந்த காலனிகளிலான விடுதலைப் போராட்டங்களும் இந்தத் தவறான கருத்துக்களால் தடைப்பட்டன.

இந்த முக்கியமான காலகட்டத்திலும் அதற்குப் பிந்திய ஆண்டுகளிலும் ஏற்பட்ட பிரமாண்ட புரட்சிப் போராட்டங்களையும் வெற்றிகளையும் பேணி மதித்து உயர்த்திப் பிடிக்கும் அதேவேளையில் இன்றைய மாக்சிஸ - லெனினிசவாதிகள் இந்தத் தவறுகளைப் பற்றியும் அவற்றுக்கான அடிப்படையைப் பற்றியும் தமது விளக்கத்தையும் ஆழமாக்கிக் கொள்ள வேண்டும்.



இரண்டாம் உலக யுத்தத்தில் தோன்றிய சோஷலிச முகாம் ஒருபோதும் திடமானதாக இருக்கவில்லை. கிழக்கு ஐரோப்பிய மக்கள் ஜனநாயக நாடுகளில் பெரும்பாலானவற்றில் புரட்சிகர மாற்றம் சிறிதே செய்யப்பட்டது.

சோவியத் யூனியனில் கூட, இரண்டாம் உலக யுத்தத்தின் போதும் அதன் பின்னரும் தோன்றிய பலம் வாய்ந்த திரிபுவாதச் சக்திகள் பலமும் செல்வாக்கும் பெற்றன. 1956-ல், ஸ்டாலினின் மறைவுக்குப் பின்னர் குருசேவ் தலைமையிலான இந்தத் திரிபுவாதச் சக்திகள் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதில் வெற்றி பெற்று சகல முனைகளிலும் மாக்சிஸம் - லெனினிசத்தைத் தாக்கி, அங்கு முதலாளித்துவத்தை மீட்டனர்.

சோவியத் யூனியனில் குருசேவினதும் திரிபுவாதிகளினதும் ஆட்சிக் கவிழ்ப்பு, முன்னர் நிலவிய கம்யூனிஸ இயக்கத்தினதும் முடிவு மாகும் என்பது இப்பொழுது தெளிவு. கொமின்ரேனில் இருந்த பல கட்சிகளை (மிகவும் செல்வாக்கான சில கட்சிகள் உட்பட) திரிபுவாதம் என்ற எங்கும் பரவிய புற்றுநோய் தனக்கு இரையாக்கியது. இன்னும் பல கட்சிகள் நவீன திரிபுவாத நிலைப்பாட்டை நோக்கி வேகமாகச் சீரழிந்து கொண்டிருந்தன. மிக மெல்லிய சருமம் தான் அதனை மறைத்திருந்தது. புரட்சிகர சக்திகள் திருகித் திணறடிக்கப்பட்டன. சோவியத் யூனியனில் ஸ்டாலின் மறைவுக்குப் பின்னர், யுத்தத்தினால் பலவீனப்பட்டு கடுமையான அரசியல் சித்தாந்தத் தவறுகளால் பாதிக்கப்பட்ட நேர்மையான மாக்சிஸ லெனினிசவாதிகளும் சோவியத் பாட்டாளி வர்க்கமும் திரிபுவாதத் துரோகிகளுக்கு எதிராக எந்தவித பாரதூரமான பதிலடியையும் கொடுக்க முடியாதவர்களாக இருந்தனர்.

## மாசேதுங்கும் கலாச்சாரப் புரட்சியும் மாக்சிஸ லெனினிச இயக்கமும்

குருசேவின் ஆட்சிக் கவிழ்ப்புக்குப் பின்னர் உடனடியாக மாசேதுங்கும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாக்சிஸ லெனினிசவாதிகளும் சோவியத் யூனியனிலும் சர்வதேசிய கம்யூனிஸ இயக்கத்திலும் ஏற்பட்ட வளர்ச்சிகளை ஆராய்ந்து நவீன திரிபுவாதத்துக்கு எதிராகப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போராட ஆரம்பித்தார்கள். 1963 ல் சர்வதேசிய கம்யூனிஸ இயக்கத்தின் பொது மார்க்கத்துக்கான ஒரு பிரேரணை (25 அம்சக் கடிதம்) வெளியிடப்பட்டது. இந்தத் தஸ்தாவேஜு திரிபுவாதத்தை எல்லா முறைகளிலும் பகிரங்கமாகவும் கண்டித்தது. சகல நாடுகளினதும் நேர்மையான மாக்சிஸ-லெனினிசவாதிகளுக்கு அறைகூவலாக அமைந்தது. சமகால மாக்சிஸ லெனினிச இயக்கம் இந்த வரலாற்றுரீதியான வேண்டுகோளையும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட வாதப் பிரதிவாதத்தையும் அதன் ஊற்றுமூலமாகக் கொண்டது.

பிரேரணையிலும் வாதப் பிரதிவாதத்திலும் மாவோவும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும் சரியாகப் பின்வருவனவற்றைச் செய்தனர்.

— பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றிய லெனினிச நிலைப்பாட்டை உயர்த்திப் பிடித்து "முழுமக்களினதும் அரசு" என்ற திரிபுவாதத் தத்துவத்தை நிராகரித்தனர்.

— ஆயுதப் புரட்சியின் அவசியத்தை உயர்த்திப் பிடித்து "சோஷலிசத்துக்கு சமாதான மாற்றம்" என்ற யுத்ததந்திரத்தை எதிர்த்தனர்.

— அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் தேசிய விடுதலை யுத்தங்களை ஆதரித்து அவற்றுக்கு ஊக்கமளித்தனர்; "நவ காலனித்துவ" போலி சுதந்திரத்தை அம்பலப்படுத்தி, விடுதலை யுத்தங்களைத் தவிர்க்க வேண்டும். ஏனென்றால் அவை "உலக சமாதானத்"தை ஆபத்துக்குள்ளாக்குகின்றன" என்ற திரிபுவாத நிலைப்பாட்டை நிராகரித்தனர்.

— ஸ்டாலினைப் பற்றியும் சோவியத் யூனியனில் சோஷலிச நிர்மாண அனுபவம் பற்றியும் முழுமையான சாதகமான மதிப்பீடு செய்து, ஸ்டாலின் தவறுகள் பற்றி சில முக்கியமான விமர்சனங்களைச் செய்த அதேவேளையில் அவர் ஒரு "கசாப்புக் கடைக் கொலைகாரன்", "கொடுங்கோலன்" என்ற அவதூறுகளை நிராகரித்தனர்.

— மற்றக் கட்சிகள்மீது திரிபுவாத மார்க்கம் ஒன்றைத் திணிக்க குருசேவ் எடுத்த முயற்சிகளை எதிர்த்தனர்; தோறெஸ், தொக்லியாட்டி, டிட்டோ மற்றும் நவீன திரிபுவாதிகளை விமர்சித்தனர்.

— சோஷலிசத்தின் வர்க்க இயல்பு, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்ந்து நடத்துதல் ஆகியனபற்றி மாசேதுங் உணர்ந்து கொண்டிருந்த தத்துவத்தை கருவுருவாக முன்வைத்தார்கள்.



— சர்வதேசிய கம்யூனிஸ இயக்கத்தின் வரலாற்று அனுபவத்தையும் திரிபுவாதத்தின் வேர்களையும் முற்று முழுதாக ஆராய்ந்தறியும்படி அறைகூவல் விடுத்தனர்.

பிரேரணையிலும் வாதப் பிரதிவாதத்திலும் உள்ள இந்த அம்சங்களும் மற்றும் அம்சங்களும் மாக்சிஸம் லெனினிசத்தைத் திரிபுவாதத்திலிருந்து பிரித்தறிவதற்கு ஜீவாதார விஷயங்களாக இருந்தன. இன்றும் இருக்கின்றன. இந்த வாதப் பிரதிவாதங்கள் மூலம் மாவோவும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும் மாக்சிஸ லெனினிசவாதிகளுக்கு திரிபுவாதிகளிடமிருந்து பிரிந்து புதிய பாட்டாளி வர்க்கப் புரட்சிக் கட்சிகளை அமைக்குமாறு ஊக்கமளித்தனர். வாதப் பிரதிவாதம் நவீன திரிபுவாதத்துடன் தீவிரமான முறிவாக அமைந்தது. மாக்சிஸ லெனினிசவாதிகள் சமரில் முன் செல்வதற்கு போதிய அடிப்படையாக அமைந்தது. ஆனால், பல பிரச்சினைகளில் திரிபுவாதத்தைப் பற்றிய விமர்சனம் போதியளவு பூரணமானதாக அமையவில்லை. சிலவற்றை விமர்சித்த அதேவேளையில் சில தவறான கருத்துக்களும் சேர்க்கப்பட்டன. வாதப் பிரதிவாதமும் மாவோவும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும் புதிய மாக்சிஸ லெனினிச இயக்கத்தின் தோற்றத்தில் வகித்த முக்கியமான பாத்திரம் காரணமாக வாதப் பிரதிவாதத்திலும் சர்வதேசிய கம்யூனிஸ இயக்கத்தில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி நடத்திய போராட்டத்திலும் உள்ள இரண்டாந்தரமான, எதிர்மறையான அம்சத்தைப் பரிசீலிப்பது சரியானதும் அவசியமானதுமாகும்.

ஏகாதிபத்திய நாடுகளைப் பொறுத்து, பிரேரணை பின்வரும் கருத்தை முன்வைத்தது. "அமெரிக்க ஏகாதிபத்தியம் கட்டுப்படுத்தும் அல்லது கட்டுப்படுத்த முயலும் முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளி வர்க்கமும் மக்களும் தமது தாக்குதல்களைப் பிரதானமாக அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிராகச் செலுத்த வேண்டும். அத்துடன் தேசிய நலன்களைக் காட்டிக் கொடுக்கும் தமது சொந்த ஏகபோக முதலாளிகள் மற்றும் பிற்போக்கு சக்திகள் ஆகியோருக்கு எதிராகவும் செலுத்த வேண்டும்".

இந்த வகை நாடுகளில் மாக்சிஸ லெனினிச இயக்கத்தின் வளர்ச்சியைக் கடுமையாகப் பாதித்த இந்தக் கருத்து வாஸ்தவத்தில் ஏகாதிபத்திய நாடுகளில் "தேசிய நலன்கள்" என்பவை ஏகாதிபத்திய நலன்கள் என்பதையும் ஆளும் ஏகபோக முதலாளி வர்க்கம் மற்ற ஏகாதிபத்திய வல்லரசுகளுடன் எத்தகைய கூட்டணியை அமைத்துக் கொண்டாலும் இந்தக் கூட்டணியின் இயல்பான அசமத்துவ இயல்பு இருந்தாலும், மேற்கூறிய நலன்களைக் காட்டிக் கொடுப்பதில்லை, மாறாகப் பாதுகாக்கின்றது என்பதையும் மழுங்கடிக்கின்றது. இவ்வாறு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்த நாடுகளின் மாப்பெரும் வங்கம் ஏகாதிபத்திய பூர்ஷ்வா வர்க்கத்தின் நலன்களைப் பாதுகாப்பதில் அதனிலும் மார்க்க முயற்சியெடுக்க ஊக்குவிக்கப்படுகின்றது. இந்தக் கருத்து சர்வதேசிய கம்யூனிஸ்ட் இயக்கத்தில் நீண்ட வரலாறு உடையது. இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

திரிபுவாதிகளுக்கு எதிராக மார்க்சிஸ லெனினிசக் கட்சிகளை வளர்ப்பதில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி பெரும் கவனம் செலுத்தியது. ஆனால் கம்யூனிஸ்டுகளின் சர்வதேசிய ஐக்கியத்தை வளர்க்கும் வடிவங்களையும் வழிமுறைகளையும் அது காணவில்லை. சித்தாந்த, அரசியல் ஐக்கியத்துக்குப் பங்காற்றியபோதிலும் உலகளவில் ஸ்தாபன ரீதியான ஐக்கியம் காண முயற்சிகள் எடுக்கப்படவில்லை. சீனக் கம்யூனிஸ்ட் கட்சி கொமின்ரேனின் எதிர்மறை அம்சங்களைப் பற்றி, பிரதானமாக மிகைமத்தியத்துவத்தினால் ஏற்பட்ட எதிர்மறை அம்சங்களைப் பற்றி மிகையான விளக்கம் ஒன்றைக் கொண்டிருந்தது. மேற்கூறிய மிகை-மத்தியத்துவத்தினால் அங்கத்துவ கம்யூனிஸ்ட் கட்சிகளின் சுதந்திரமும் சுயேச்சையும் நசுக்கப்பட்டன. சீனக் கம்யூனிஸ்ட் கட்சி சரியாகத் "தந்தைக் கட்சி" என்ற கருத்தை விமர்சித்தது. சர்வதேசிய கம்யூனிச இயக்கத்தில் அதன் பாதிப்பைச் சுட்டிக் காட்டியது. கட்சிகளுக்கிடையில் சகோதரத்துவ உறவுகளின் கோட்பாடுகளை வற்புறுத்தியது. அதே வேளையில் கருத்துக்களை விவாதிக்கவும் பொதுக்கருத்தை அடையப் பெறவும் ஸ்தாபன அரங்கு ஒன்று இல்லாதிருந்த காரணத்தால் இந்தப் பிரச்சினை தீரவில்லை. மாறாக மோசமாகியது.

நவீன திரிபுவாதத்துக்கு எதிரான தத்துவார்த்தப் போராட்டம் மார்க்சிச லெனினிச இயக்கத்தின் புனரமைப்பில் முக்கிய பாத்திரம் வகித்ததாயிருந்ததால் விசேஷமாக மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப்புரட்சி முற்றிலும் புதிய சந்ததி ஒன்றை, மார்க்சிஸ லெனினிசவாதிகளைத் தோற்றுவித்தது. இப்புரட்சி முன்காணாத புதிய போராட்ட வடிவமாகும். அது பெரிதும் திரிபுவாதத்துக்கு எதிரான சமரின் ஒரு விளைவுமாகும். கட்சி அரசு இயந்திரங்களில் அரண் கொண்டிருந்த முதலாளித்துவப் பாதையாளர்களைத் தூக்கியெறிந்து மேற்கொண்டு சமுதாயத்தைப் புரட்சிமயமாக்க சமருக்குச் சென்ற கோடிக்கணக்கான தொழிலாளர்களும் விவசாயிகளும் புரட்சிகர இளைஞர்களும் உலகம் பூராவும் உள்ள கோடானுகோடி மக்களுடன் ஒத்த ஒலி இசைத்தனர். அறுபதாம் ஆண்டுகளிலும் ஆரம்ப எழுபதாம் ஆண்டுகளிலும் ஏற்பட்ட உலக மக்களின் புரட்சிப் பேரெழுச்சி வாரியடித்தது.



கலாச்சாரப் புரட்சி என்பது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்,
சமுதாயத்தைப் புரட்சிமயமாக்குதல் ஆகியவற்றின் மிகவும் முன்னே
றிய அனுபவமாக அமைகின்றது. முதற் கட்டமையாக தொழிலாளரும்
மற்றும் புரட்சிகர சக்திகளும் சோஷலிசத்தின் கீழ் வர்க்கப் போராட்,
டத்தின் இயல்பு, சோஷலிச சமுதாயத்துக்குள்ளிருந்தே இயல்பாகத்
தோன்றக்கூடியவர்களும் கட்சித் தலைமையில் விசேஷமாகச் செறிந்
திருப்பவர்களுமான முதலாளித்துவப் பாதையாளர்களைக் கிளர்ந்தெ
ழுந்து தூக்கியெறியும் அவசியம் சோஷலிச மாற்றத்தை மேற்கொண்டு
முன்னேற்றி இந்த முதலாளித்துவ சக்திகளைத் தோற்றுவிக்கும்
மண்ணை வாரியெறியும் அவசியம் ஆகியன பற்றித் தெளிவான விளக்
கம் பெற்றனர். கலாச்சாரப் புரட்சியில் மகத்தான வெற்றிகள்
பெறப்பட்டன. பத்தாண்டு காலம் சீனவில் திரிபுவாத மீட்சியை
அது தடுத்து நிறுத்தியது. கல்வி, இலக்கியம், கலை விஞ்ஞான ஆராய்ச்சி
மற்றும் மேலமைப்பு விஷயங்களில் மகத்தான சோஷலிச மாற்றங்கள்
அதனால் ஏற்பட்டன. உக்கிரமான சித்தாந்த, அரசியல் போராட்டத்
தில் கோடிக்கணக்கான தொழிலாளர்களும் மற்றும் புரட்சிவாதிகளும்
தமது வர்க்க உணர்வையும் மார்க்சிஸம் - லெனினிசத்தைக் கிரகித்துக்
கொள்வதையும் பெரிதும் ஆழமாக்கினார்கள். அரசியல் அதிகாரத்தைச்
செலுத்தும் அவர்களுடைய திறன் மேலும் அதிகரித்தது. பாட்டாளி
வர்க்கத்தின் சர்வதேசிய போராட்டத்தின் ஒரு பகுதியாகவும், பாட்
டாளி வர்க்க சர்வதேசியத்துவத்தின் ஒரு பயிற்சித் தளமாகவும்
கலாச்சாரப் புரட்சி நடைபெற்றது. உலகம் பூராவிலும் நடைபெற்ற
புரட்சிப் போராட்டங்களுக்கு அளிக்கப்பட்ட ஆதரவினால் மாத்திரமல்ல
இந்த ஆதரவை அளிக்க சீனமக்கள் செய்த தன்னைத் தியாகங்
களினாலும் இது நிரூபிக்கப்படுகின்றது. சியாங்சிங், சாங்சுங்சியௌ
போன்ற புரட்சித் தலைவர்கள் தோன்றினார்கள். அவர்கள் திரிபுவாதி
களுக்கு எதிராக மக்களுடன் நின்று மக்களுக்குத் தலைமை தாங்கினார்
கள் அவர்கள் கொடுமையான தோல்வியின் முன்னிலையிலும் மார்க்சிஸம்-
லெனினிசம் - மாசேதுங் சிந்தனையைத் தொடர்ந்து பாதுகாத்தார்கள்.

"வர்க்கப் போராட்டத்தை அங்கீகரிப்பதை பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை அங்கீகரிப்பது வரை எடுத்துச் செல்பவரே ஒரு மார்க்சிஸவாதியாவார்" என்று லெனின் கூறினார். மாசேதுங் தலைமை தாங்கிய மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் மூலம் பெறப்பட்ட மதிப்பிடற்கரிய படிப்பினைகளையும் முன்னேற்றங்களையும் மனதிற் கொள்ளும்போது லெனின் முன்வைத்த இந்த வரையறை மேலும் கூர்மையாகியுள்ளது. இப்பொழுது, வர்க்கப் போராட்டத்தை அங்கீகரிப்பதை பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை அங்கீகரிப்பது வரையும், கம்யூனிஸம் வரையிலான சோஷலிசத்தின் முழுக்

www.tamilarangam.net



காலகட்டத்திலும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புறநிலையாக வர்க்கங்களும், பகைமையான வர்க்க முரண்பாடுகளும் வர்க்கப் போராட்டத்தின் தொடர்ச்சியும் இருப்பதை அங்கீகரிப்பது வரையும் எடுத்துச் செல்பவரே ஒரு மாக்சியவாதியாவார் என்று கூறமுடியும். மாவோ மிகவும் ஆற்றலுடன் சுட்டிக் காட்டியவாறு, "இந்த விஷயத்தில் தெளிவின்மை திரிபுவாதத்துக்கு இட்டுச் செல்லும்"

கலாச்சாரப் புரட்சி மாக்சிஸம் லெனினிசத்தின் ஜீவத் துடிப்பின் உயிருள்ள நிரூபணமாகும். பாட்டாளி வர்க்கப் புரட்சி முந்திய புரட்சிகளைப் போன்றதல்ல, முந்திய புரட்சிகளால் ஒரு சுரண்டும் அமைப்பின் இடத்தில் இன்னொரு சுரண்டும் அமைப்பு ஏற்பட்டது என்பதை அது காட்டியது. சகல நாடுகளிலும் உள்ள புரட்சிவாதிகளுக்கு கலாச்சாரப் புரட்சி பேருக்கமளித்தது இந்தக் காரணங்களால் கலாச்சாரப் புரட்சியும் மாசேதுங்கும் சகல பிற்போக்குவாதிகளினதும் திரிபுவாதிகளினதும் நீடித்த, நச்சுத்தனமான அவதூற்றுக்கு இலக்காகினர். அதே காரணங்களால் கலாச்சாரப் புரட்சி சர்வதேசிய கம்யூனிஸ இயக்கத்தின் புரட்சிப் பாரம்பரியத்தின் பிரிக்க முடியாத பகுதியாக அமைகின்றது.

கலாச்சாரப் புரட்சி பிரமாண்ட வெற்றிகளைப் பெற்றபோதும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியிலும் அரசிலுமுள்ள திரிபுவாதிகள் முக்கிய அந்தஸ்துகளைப் பற்றிப் பிடித்திருந்து, உண்மையான சர்வதேசிய கம்யூனிஸ இயக்கத்தைப் புனரமைப்பதற்கான இன்னும் மெல்லிய முயற்சிகளுக்கு கணிசமான தீங்கிழைத்த மார்க்கங்களையும் கொள்கைகளையும் முன்தள்ளியுள்ளனர். பெருமளவில் அதன் ராஜதந்திரத் துறையையும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் மற்றும் மாக்சிஸ லெனினிசக் கட்சிகளுக்குமிடையிலான உறவுகளையும் கட்டுப்படுத்தி சீனாவிலுள்ள திரிபுவாதிகள் பாட்டாளி வர்க்கத்தினதும் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களினதும் புரட்சிப் போராட்டங்களுக்கு ஆதரவளிக்கத் தவறினார்கள். அல்லது இந்தப் போராட்டங்களை சீனாவின் அரசு நலன்களுக்குக் கீழ்ப்பணியச் செய்ய முயற்சித்தார்கள். பிற்போக்கான கொடுங்கோலர்கள் பொய்யான முறையில் "ஏகாதிபத்திய – எதிர்ப்பாளர்களா"கப் பட்டஞ் சூட்டப்பட்டார்கள். மென்மேலும் "மேலாதிக்கவதாத்"துக்கு எதிர்ப்பு என்ற பதாகையின் கீழ் மேற்கத்தைய முகாமைச் சேர்ந்த சில ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கு உலகிலுள்ள இடைநிலைச் சக்திகள் அல்லது சாதகமான சக்திகள் என்றுகூட நாமஞ்சூட்டப்பட்டுள்ளது. இந்தக் காலகட்டத்திற்கூட சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் திரிபுவாதிகளால் ஆதரிக்கப்பட்டும் பல சீன சார்பு மாக்சிஸ - லெனினிசக் கட்சிகள் பூர்ஷ்வா வர்க்கத்துக்குப் பின்னால் வெட்கமின்றி வால்பிடித்துச் செல்லவும் சோவியத் யூனியனை இலக்காகக் கொண்ட ஏகாதிபத்தியத் துணிச்சல் நடவடிக்கைகள் - யுத்தத்தயா



ரிப்புகளை ஆதரிக்கவும் அல்லது அவற்றுக்கு உடந்தையாய் இருக்கவும் தொடங்கியுள்ளன. சோவியத் யூனியன் முழு உலகத்தினதும் "பிரதான எதிரி" என்று அவை மென்மேலும் காண்கின்றன. சீனாவில் ஏற்பட்ட ஆட்சிக் கவிழ்ப்பு, அதன் பின்னர் திரிபுவாதிகள் விளக்கம் கூறிய "மூன்றுலகத் தத்துவம்" ஆகியவற்றுடன் இந்தப் போக்குகள் முழுதாக வெளிவந்தன. சீனத்திரிபுவாதிகள் மூன்றுலகத் தத்துவத்தை சர்வதேசிய கம்யூனிஸ இயக்கத்தின் மீது திணிக்க முயற்சித்தனர். "மூன்றுலகத் தத்துவம்" மாசேதுங்கால் முன்வைக்கப்பட்டது என்ற திரிபுவாத அவதூற்றை மாக்சிஸ லெனினிசவாதிகள் சரியாகவே நிராகரித்துள்ளனர். ஆனால் இது போதாது. அது உள்ளடக்கும் கருத்துக்களை விமர்சித்து மூன்றுலகத் தத்துவம் பற்றிய விமர்சனத்தை ஆழமாக்க வேண்டும். அதன் மூலத்தைப் பரிசீலிக்க வேண்டும்.

இந்த எதிர்ப் புரட்சித் தத்துவத்தை எதிர்த்ததற்காக மாவோவின் மிக நெருங்கிய தோழர்களை திரிபுவாத அபகரிப்பாளர்கள் பகிரங்கமாகக் கண்டிக்க வேண்டியிருந்தது என்பதை இங்கு குறிப்பிட வேண்டும்.

ஏகாதிபத்தியம், பாட்டாளி வர்க்கப் புரட்சி ஆகியவற்றின் யுகத்தின் முக்கிய முரண்பாடுகளில் அல்லது அம்சங்களில் ஒன்று சோஷலிச அரசுகளுக்கும் ஏகாதிபத்திய அரசுகளுக்குமிடை முரண்பாடாகும். முன்னர் சோஷலிச அரசுகளாக இருந்த பல நாடுகள் திரிபுவாத மாற்றத்தைப் பெற்றுள்ளபடியால் தற்போது இந்த முரண்பாடு தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளபோதிலும் இந்த முரண்பாட்டைக் கையாள்வதில் கம்யூனிஸ்ட் இயக்கம் பெற்ற அனுபவத்தைத் தொகுப்பது ஒரு முக்கியமான தத்துவப் பணியாக இருக்கின்றது. ஏனென்றால் ஒரு அல்லது பல சோஷலிச அரசுகள் சூறையாடல் தனமான ஏகாதிபத்திய எதிரிகளை எதிர்நோக்கும் நிலைமை பாட்டாளி வர்க்கத்துக்கு மீண்டும் ஏற்படும் என்பதால் இது அவசியமாகின்றது.

1976-ல் மாசேதுங் இறந்ததும் சீனாவிலுள்ள முதலாளித்துவப் பாதையாளர்கள் கொடிய ஆட்சிக் கவிழ்ப்பொன்றை நடத்தி கலாச்சாரப் புரட்சியின் தீர்ப்புகளை மாற்றி, சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலிருந்த புரட்சிவாதிகளைத் தூக்கியெறிந்து, பின்பு திரிபுவாத வேலைத்திட்டம் ஒன்றை நிறுவி ஏகாதிபத்தியத்துக்குச் சரணடைந்தார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சீனக் கம்யூனிஸ்ட் கட்சியிலுள்ள புரட்சிவாதிகள் இந்த ஆட்சிக் கவிழ்ப்பை எதிர்த்துப் போரிட்டனர். அவர்கள் சீனாவில் பாட்டாளி வர்க்க ஆட்சியை மீட்கத் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். சர்வதேசிய ரீதியில் பல நாடுகளிலுள்ள புரட்சிகரக் கம்யூனிஸ்டுகள் குவாகோவெங், தெங்சியாவ்பிங் ஆகியோரின் திரிபுவாத 'மார்க்சத்தை' ஊடுருவிப்பார்த்து சீனாவிலுள்ள முதலாளித்துவப் பாதையாளர்களை விமர்சித்து அம்பலப்படுத்தியுள்ளனர். இந்த ஆட்சிக் கவிழ்ப்புக்கு எதிராக சீனாவிலும் சர்வதேசரீதியிலும் நடைபெறும் இந்த எதிர்ப்பு பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ்வர்க்கப் போராட்டம்; முதலாளித்துவ மீட்சிச் சாத்தியப்பாடு ஆகியன பற்றி பாட்டாளி வர்க்கத்துக்கும் மாக்சிஸ லெனினிச வாதிகளுக்கும் தெளிவாக்க, களையாது உழைத்த மாசேதுங் தூரப்பார்வையுடைய புரட்சிகரத் தலைமையின் நிரூபணமாகும். மாசேதுங்கின் வழிகாட்டுதலில் பாட்டாளிவர்க்க ஆணைப் பகுதி செய்துள்ள தத்துவ வேலையும் சோஷலிச சமுதாயத்தில் முரண்பாடுகளின் இயல்பு பற்றி மாக்சிய லெனினிசவாதிகளுக்கு சரியான விளக்கம் கொடுப்பதில் பிரதான பாத்திரம் வகித்திருக்கின்றது. இது மாசேதுங் சிந்தனையின் முக்கியமான விளக்கமாகி அமைகின்றது. இதனால் 1976ன் சோகச் சம்பவங்களுக்கு மாக்சிஸ லெனினிச இயக்கம் சித்தாந்தரீதியில், இதற்கு 20 ஆண்டுகளுக்கு முன்னர் சோவியத் யூனியனில் திரிபுவாத ஆட்சிக் கவிழ்ப்பு நடைபெற்ற வேளையிலும் பார்க்க, தயாராயிருந்தது. சோஷலிச நாடெதுவும் இல்லாத நிலையில் இந்த நிலைமையை மாக்சிஸ லெனினிச இயக்கம் எதிர்நோக்கத் தயாராயிருக்கின்றது.

இருப்பினும் உலகின் மக்கள் தொகையில் கால்வாசியைக் கொண்டிருக்கும் நாட்டில் முதலாளித்துவத்தின் மீட்சியும் சர்வதேசிய இயக்கத்தின் முன்னணிப் படையில் இருந்த மாக்சிஸ - லெனினிசக் கட்சியைத் திரிபுவாதிகள் கைப்பற்றியமையும் உலகப் புரட்சிப் போராட்டத்தையும் மாக்சிஸ - லெனினிச இயக்கத்தையும் ஆழமாகப் பாதிக்கும் என்பது திண்ணம். முன்னர் சர்வதேசிய கம்யூனிஸ இயக்கத்தின் அங்கமாக இருந்த பல கட்சிகள் சீனத் திரிபுவாதிகளையும் அவர்களுடைய 'மூன்றுலகத் தத்துவத்தை'யும் அரவணைத்து புரட்சிப் போராட்டத்தை அறவே கைவிட்டுள்ளனர். இதனால் இந்தக் கட்சிகள் ஒருவகைச் சோர்வைப் பரப்பியுள்ளன, மறுபுறத்தில் புரட்சிகர சக்திகளின் நம்பிக்கையை இழந்துள்ளன. இக்கட்சிகள் பெரும் நெருக்கடியில் இருக்கின்றன அல்லது முழுதாக அழிந்துபோயின.



சீனத் திரிபுவாதிகளின் தலைமையைப் பின்பற்றிச் செல்ல மறுத்த மற்றும் சில மாக்சிஸ - லெனினிச சக்திகள் மத்தியிலும் கூட சீனாவில் ஏற்பட்ட இழப்பு சோர்வை ஏற்படுத்தி மாக்சிஸம் - லெனினிசம் - மாசேதுங் சிந்தனையிலேயே சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது என்வர் ஹோஷாவும் அல்பேனிய தொழிற்கட்சியும் மாசேதுங் சிந்தனை மீது பகிரங்கமான பன்முகத் தாக்குதலைத் தொடுத்தபோது இந்தப்போக்கு மேலும் மோசமாகியுள்ளது.

சீனாவில் ஏற்பட்ட ஆட்சிக் கவிழ்ப்பைத் தொடர்ந்து சர்வதேசிய கம்யூனிஸ இயக்கத்தில் ஒரு குறிப்பிட்ட நெருக்கடியை எதிர்பார்க்க வேண்டும் என்றபோதிலும் இந்த நெருக்கடியின் ஆழமும் அதற்கு முற்றுப்புள்ளி வைப்பதில் இருக்கும் கஷ்டமும் பலவடிவத் திரிபுவாதம் 1976-ல் மாக்சிஸ லெனினிச இயக்கத்தில் வலு பெற்றிருந்தது என்பதைக் காட்டுகின்றன. மாக்சிஸ லெனினிசவாதிகள் சர்வதேசிய இயக்கத்தின் சமீபகாலத்திலும் முந்திய காலகட்டங்களிலுமான திரிபுவாதத்தின் வேர்களைப் பற்றி தொடர்ந்து பரிசீலனைகளை நடத்தி ஆராய்ந்து, தொடர்ந்திருக்கும் திரிபுவாதப் பாதிப்புக்கு எதிராக இடைவிடாது போராட்டம் நடத்த வேண்டும் அதே வேளையில் சர்வதேசிய பாட்டாளி வர்க்கத்தினதும் கம்யூனிஸ்ட் இயக்கத்தினதும் வரலாற்றில் ஏற்பட்ட புரட்சிகர முன்னேற்றங்களில் உருவாக்கப்பட்ட அடிப்படைக் கோட்பாடுகளை தொடர்ந்து உயர்த்திப் பிடித்து முன்னெடுத்துச் செல்லவேண்டும்.

## புரட்சிகர கம்யூனிஸ்டுகளின் பணிகள்

சகல நாடுகளிலும் உள்ள புரட்சிகர கம்யூனிஸ்டுகளின் கடமை உலகப்புரட்சியின் முன்னேற்றத்தைத் துரிதப்படுத்தவேண்டியதே, அதாவது, பாட்டாளி வர்க்கத்தாலும் புரட்சிகர மக்களாலும் ஏகாதிபத்தியமும் பிற்போக்கு சக்திகளும் தூக்கியெறியப்பட்டு, வெவ்வேறு நாடுகளிலும் நிலவும் ஸ்தூல நிலைமைகட்கும் அத்தியாவசிய புரட்சிகர கட்டங்கட்கும் ஒப்ப பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவி நிலைநிறுத்தி, சுரண்டல் சமூகத்தின் பொருளாயத, தத்துவார்த்த அடிச்சுவடுகளை - மிச்சம்மீதிகளை அழித்தொழிக்க உறுதியுடன் போராடி, அதன் மூலம் உலகம் பூராவும் வர்க்கங்கள் அற்ற சமூக அமைப்பை - கம்யூனிஸத்தை - ஏற்படுத்தப் பாடுபட வேண்டும். எல்லாவற்றிற்கும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மேலாக, முதலில் கம்யூனிஸ்ட்டுகள் தங்கள் இலட்சியத்தையும் வாழ்வுக்கான காரணத்தையும் மனதில் நிலைநிறுத்தி அதற்கொப்ப நடைமுறையை வகுக்க வேண்டும். அல்லாவிடில், அவர்கள் புரட்சிக்கு பிரயோசனமற்றவர்களாகவும், அதற்கும் மேலாக, புரட்சியின் பாதையில் தடைகளாகவும் சீரழிவார்கள்.

பாட்டாளி வர்க்க புரட்சியானது, மாக்சிஸ - லெனினிஸ - மாசேதுங் சிந்தனையை அடிப்படையாகக் கொண்ட, பாட்டாளி வர்க்கத்தின் மத்தியிலும் மற்றும் மக்களிடையேயுள்ள பல்வேறு பிரிவினர் மத்தியிலும் உள்ள சிறந்த புரட்சிகர சக்திகளை தம்வசம் கவர்ந்து, பயிற்றுவிக்கக்கூடிய லெனினிஸ மார்க்கத்தில் கட்டியமைக்கப்பட்ட தூய்மையான பாட்டாளி வர்க்கக் கட்சியால் மாத்திரமே வெல்லப்பட்டு முன்னெடுத்துச் செல்லப்பட முடியும். இன்று உலகில் பல நாடுகளில் அவ்வாறான கட்சிகள் இல்லை. இருந்தும், அவ்வாறு இருக்கின்ற கட்சிகள் கூட, வரவிருக்கும் காலகட்டத்தில் ஏற்படும் தேவைகட்கும் சந்தர்ப்பங்கட்கும் முகம் கொடுக்கக் கூடிய வகையில் தத்துவார்த்த ரீதியாகவோ அமைப்பு ரீதியாகவோ பலம் வாய்ந்தவையாக இல்லை. இதன் காரணமாக, உண்மையான மாக்சிஸ - லெனினிசக் கட்சிகளை அமைத்து பலப்படுத்த வேண்டியது முழு சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தினதும் உயிர் நாடியான கடமையாகும்.

மாக்சிஸ - லெனினிசக் கட்சி இல்லாத நாடுகளில் உள்ள புரட்சிகர கம்யூனிஸ்ட்டுகளின் உடனடிக் கடமை அங்கு ஒரு கட்சியை, சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தின் உதவியுடன் அமைக்க வேண்டியதேயாகும். குறிப்பிட்ட நாடுகளினது தனித் தன்மைகட்கும் சூழ்நிலைக்கும் ஏற்பவும் உலகந்தழுவிய நிலைமைகட்கு ஏற்பவும் சரியான அரசியல் பாதையையும் திட்டத்தையும் வகுப்பதே கட்சியை அமைப்பதற்கான முக்கிய தேவையாகும். மக்கள் மத்தியில் புரட்சிகர வேலை முறையை மேற்கொள்ளல், புரட்சிகர மக்கள் பாதையை அமுல்படுத்தல், புரட்சிகர இயக்கம் தொடர்ந்து முன்னேறிச் செல்லும் முகமாக மக்களை அவசரமாக அழுத்துகின்ற அரசியல் பிரச்சினைகள் - விவகாரங்களில் முகங்கொடுத்தல் - தீர்த்துவைத்தல் ஆகியவற்றுடன் நெருங்கிய தொடர்புடைய முறையில் மாக்சிஸ - லெனினிஸ கட்சி கட்டியெழுப்பப்பட வேண்டும். இவ்வாறு செய்யப்படவில்லையெனில், கட்சியைக் கட்டியமைக்கும் கடமையானது புரட்சிகர நடைமுறையிலிருந்து பிரிந்து பிரயோசன மற்றதாகவே முடியும். மறுபுறத்தில், இது, குறிப்பிட்ட எண்ணிக்கை கொண்ட உறுப்பினர்களில் தங்கியிருக்கக் கூடியதாக அவர்களைச் சுற்றி கட்சியை அமைப்பது அல்லது கட்சி உருவாக்கப்பட முன் கணிசமான செல்வாக்கு மக்கள் மத்தியில் நிலைநாட்டப்பட



வேண்டும் என வற்புறுத்துவது ஆகியவற்றில் உள்ள தவறுக்கு சமமானதாகும். அநேகமாக, கட்சி முதலில் உருவாக்கப்படுகின்றபோது, அது ஒப்பீட்டளவில் சிறிய எண்ணிக்கை கொண்ட உறுப்பினர்களைக் கொண்ட கூட்டாகவே இருக்கும். எச்சந்தர்ப்பத்திலும், கட்சியின் கொடியின் கீழ் புரட்சிகர சக்திகளை அணிதிரட்டலும், மக்கள் மத்தியிலும் பாட்டாளி வர்க்கத்தின் மத்தியிலும் கட்சியின் செல்வாக்கை ஆழமாக்குதலும் இடைவிடாக் கடமையாகும்.

கட்சி உறுப்பினர்கள் மத்தியில் உள்ள முதலாளித்துவ, குட்டி-முதலாளித்துவ செல்வாக்குகட்கு எதிரான தீவிர தத்துவார்த்த போராட்டத்தின் போக்கில் மாக்சிஸ - லெனினிசக் கட்சி கட்டியெழுப்பப்பட்டு பலப்படுத்தப்பட வேண்டும். பலம்மிக்க கட்சியைக் கட்டியெழுப்புகையில், கட்சியின் பாட்டாளிவர்க்க தன்மையையும் வீரமிக்க போராட்ட பங்கினையும் உறுதிப்படுத்துவதற்காக மாவோ ஆரம்பித்து முன்நடத்திய கலாச்சாரப் புரட்சியின் அனுபவங்களில் இருந்து மாக்சிஸ்ட் - லெனினிஸ்ட்டுகள் பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும். கட்சிக்குள் இருபாதைகட்கிடையிலான போராட்டம் பற்றிய மாவோவின் விளக்கங்களும் கற்பாறை போன்ற ஒரே தன்மையான கட்சி என்ற பிழையான கருத்துப் பற்றிய அவரின் விமரிசனங்களும் கட்சி உறுப்பினர்களை தத்துவரீதியாக புடம் போட வேண்டிய தேவை பற்றிய அவரின் வலியுறுத்தல்களும் லெனின் வளர்த்தெடுத்த புரட்சிகர கட்சி பற்றிய அடிப்படை தத்துவத்தை வளப்படுத்தியுள்ளன. மத்தியத்துவமும் ஜனநாயகமும் கட்டுப்பாடும் சுதந்திரமும் மனவிருப்ப ஐக்கியமும் கேடுபிடி அற்ற மனோ நிலையும் தீவிரமும் கொண்டுள்ளதான ஒரு அரசியல் சூழ்நிலையை உருவாக்க வேண்டியது மிகவும் முக்கியமானதாகும்.

புரட்சிகர தத்துவத்தால் வழிநடத்தப்படாதவிடத்து நடைமுறையானது இருட்டில் தேடுவது போன்றதாக பிரயோசனமற்றதாக அமைந்துவிடும். சமுதாயத்திலும் உலகிலும் உள்ள ஸ்தூலநிலமைகள் பற்றி நிதர்சனமான ஆராய்வை மேற்கொள்ளும் போக்கில், மாக்சிஸ-லெனினிசக் கட்சிகளும் முழுசர்வதேசக் கம்யூனிஸ்ட் இயக்கமும் புரட்சிகர தத்துவத்தை கிரகிக்கும் தமது செயற்பாட்டைத் தீவிரப்படுத்த வேண்டும். புதிய தோற்றப்பாடுகளையும் நிகழ்வுகளையும், பற்றிய ஆராய்வை மேற்கொள்ளும் பணியை மற்றவர்கட்கு கையளிக்காமல் சமுதாயத்திலும் புரட்சிகர இயக்கத்தின் மத்தியிலும் உள்ள உயிர் நாடியான பிரச்சினைகளையும் விவாதத்திற்குரிய விவகாரங்களையும் கருத்திலெடுத்து தீவிரமான துணிவரான தத்துவார்த்த போராட்டத்தை மாக்சிஸ - லெனினிஸ்ட்டுகள் மேற்கொள்ள வேண்டும்.

www.tamilarangam.net



அதிகாரத்தைக் கைப்பற்றும் அடிப்படை இலக்கை உறுதியாக மனதில் கொண்டு, அதற்காக தன்னையும் பாட்டாளி வர்க்கத்தையும் புரட்சிகர மக்களையும் அமைப்பு ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் தத்துவரீதியாகவும் தயார் படுத்தும் கடமையை மேற்கொள்ளத்தக்க விதத்தில், மார்க்சிஸ லெனினிசக் கட்சி ஸ்தாபிக்கப்படவும் கட்டியெழுப்பப்படவும் வேண்டும். சுருக்கமாகச் சொல்வதெனில், 1980 இலையுதிர்க்காலக் கூட்டறிக்கை கூறுவது போன்று, "புரட்சிகர யுத்தத்தின் நியாயவாதிகள் கம்யூனிஸ்ட்டுக்கள்" எனலாம். புரட்சிகர மக்கள் அதிகாரத்தைக் கைப்பற்றி, சமுதாயத்தை மாற்றியமைக்கக் கூடிய விதத்தில் அவர்களை பயிற்றுவிக்கக் கூடிய பிரதான களமாக இத்தகைய புரட்சிகர யுத்தங்களும் போராட்டங்களும் மேற்கொள்ளப்பட வேண்டும். ஆயுதந் தாங்கிய போராட்டத்தை மக்கள் மேற்கொள்ளக்கூடிய சூழ்நிலைகள் நிலவாத விடத்தும் கூட, ஆயுதந் தாங்கிய மக்கள் போராட்டங்களை மேற்கொள்ளத்தக்க வகையான சூழ்நிலைகள் தோன்ற அவசியமான தயாரிப்பு வேலைகளை கம்யூனிஸ்டுகள் கட்டாயம் மேற்கொள்ள வேண்டும். இந்தக் கோட்பாடு மாக்சிய லெனினிசக் கட்சிகள் பல வேலைகளைச் செய்ய வேண்டும் என்று கோருகின்றது. பணிகளிலும் கட்டங்களிலும் வித்தியாசங்கள் இருந்தபோதும் பல்வேறு நாடுகளில் புரட்சி நடைபெறும். கட்சி பிற்போக்கு வாதிகளின் அடக்கு முறையை எதிர்த்து நிற்கத் தயாராய் இருக்க வேண்டும். உண்மையானதோர் புரட்சிக் கட்சியைப் பிற்போக்கு வாதிகள் ஒருபோதும் நீண்டகாலம் சமாதானமாகச் சகித்துக் கொள்ளமாட்டார்கள், கட்சியின் முக்கிய அங்கம் சட்டவிரோத முறையில் அமைத்துக் கொள்ளப்படவேண்டும்.

மாக்சிஸ - லெனினிசக் கட்சி அதிகாரத்துக்கான ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடும்போது அல்லது அதற்குத் தயார் செய்யும் போது பல்வடிவ சட்டரீதியான, பகிரங்க வேலையைப் பயன்படுத்த வேண்டும். முக்கியமானதும் குறிப்பிட்ட சில காலத்தில் தீர்க்கமானதுமான இந்த வேலையுடன் சேர்த்து பூர்ஷ்வா ஜனநாயகத்தின் வர்க்க இயல்பை அம்பலப்படுத்த வேண்டும். எந்த நிலைமையிலும் கம்யூனிஸ்டுகள் தமது விழிப்பைக் கூர்மையாக்கி பல்வேறு சட்டரீதியான சாத்தியப்பாடுகள் இல்லாதொழியும் போது கட்சி அதன் புரட்சிகர வேலையைத் தொடர்ந்து செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கத் தவறக் கூடாது என்பதை வரலாறு காட்டுகின்றது. சட்டவாதம், பாராளுமன்ற வழிபாடு ஆகியவற்றுக்குள் விழுந்து விடாமல் சட்டரீதியான, பகிரங்கமான சாத்தியப்பாடுகளுக்கிடையிலான முரண்பாட்டைக் கையாளுவதிலான கடந்த கால அனுபவங்கள் தொகுக்கப்பட்டு தக்க படிப்பினைகள் பெறப்படவேண்டும்.



அதன் புரட்சிப் பணிகளை நிறைவேற்றவும் அதிகாரத்தைக் கைப்பற்றப் பொதுமக்களைத் தயார் செய்யவும் மாக்சிஸ லெனினிசக் கட்சி ஒழுங்காக வெளிவரும் கம்யூனிஸ்ட் பத்திரிகையைக் கொண்டிருக்க வேண்டும். இரண்டு வகையான நாடுகளில் புரட்சிப்பாதை தரும் பணிகளைப் பொறுத்து பத்திரிகைக்கு வேறுபட்ட பாத்திரம் இருக்கும். கம்யூனிஸ்ட் பத்திரிகை அற்ப மானதாகவோ, குறுகியதாகவோ, வறண்டதாகவோ, வரட்டுத் தத்துவ ரீதியாகவோ இருக்கக்கூடாது. சமுதாயம் பற்றியும் உலகம் பற்றியும் பன்முகக் கருத்தை வர்க்க உணர்வுள்ள பாட்டாளிகளுக்கும் மற்றவர்களுக்கும் அளிக்க அதுபாடுபடவேண்டும். சம்பவங்கள் நடந்த உடனே ஆய்வுகளை எழுதியும் அரசியல் விமர்சனங்களைச் செய்தும் இதனைப் பிரதானமாகச் செய்ய வேண்டும்.

ஒவ்வொரு நாட்டிலுமுள்ள மாக்சிஸ - லெனினிசக் கட்சி சர்வதேசிய கம்யூனிஸ் இயக்கத்தின் ஒரு படை அணியாக அமைக்கப்பட வேண்டும். இக் கட்சி அதன் போராட்டத்தை கம்யூனிஸத்துக்கான உலகந் தழுவிய போராட்டத்தின் ஒரு பகுதியாக, அதற்குக் கீழ்ப் பணிவானதாக நடத்த வேண்டும். கட்சி பாட்டாளி வர்க்க சர்வதேசிய உணர்வை அதன் உறுப்பினர்களுக்கும் வர்க்க உணர்வுள்ள தொழிலாளர்களுக்கும் புரட்சிகர மக்களுக்கும் போதிக்க வேண்டும். சர்வதேசியத்துவம் என்பது ஒரு நாட்டிலுள்ள பாட்டாளி வர்க்கம் இன்னொரு நாட்டிலுள்ள பாட்டாளி வர்க்கத்துக்கு அளிக்கும் ஆதரவு மாத்திரமல்ல, ஆனால், மேலும் முக்கியமாக, பாட்டாளி வர்க்கம் என்பது உலகம் பூராவிலுமுள்ள ஒரே வர்க்கம், அதற்கு ஒரே வர்க்க நலன் உண்டு, அது உலக ஏகாதிபத்திய அமைப்புக்கு முகம் கொடுக்கின்றது, முழு மனித குலத்தையும் விடுதலை செய்யும் பணி அதற்குண்டு என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

ஒரு நாட்டில் அரசியல் அதிகாரம் பெறப்பட்டபின் தொடர்ந்து புரட்சியை முன்னெடுத்துச் செல்ல கட்சியையும் பாட்டாளி வர்க்கத்தையும் தயார் செய்வதில் இந்த சர்வதேசியத்துவக் கல்வியும் பிரச்சாரமும் தவிர்க்க முடியாதவையாகும். அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதும், சுரண்டல் இல்லாத சோஷலிச அமைப்பு முறையை ஸ்தாபிப்பதும் கூட, ஒரு முடிவாகக் கருதப்படக் கூடாது. உலகந் தழுவிய கம்யூனிச இலட்சியம் அடையப் பெறும் வரை வளைவுகளும் சுழிவுகளும் தவிர்க்க முடியாத பின்னடைவுகளும் முன்னேற்றங்களும் உடைய நீண்ட மாற்ற காலமாகக் கருதப்படவேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# காலனி, அரைக் காலனி (அல்லது நவ காலனி) நாடுகளிலான பணிகள்

ஏகாதிபத்தியத்தால் அடிப்படுத்தப்பட்ட காலனி (அல்லது நவ காலனி) நாடுகள் இரண்டாம் உலக யுத்தத்துக்குப் பிந்திய காலத்தில் பாட்டாளி வர்க்கத்தின் உலகந்தழுவிய போராட்டத்தின் பிரதான அரங்காக அமைந்தன. இன்றுவரை அப்படியே இருக்கின்றன. இந்தக் காலத்தில் புரட்சி யுத்தம் உட்பட புரட்சிப் போராட்டத்தை நடத்துவதில் பெருமளவு அனுபவம் பெறப்பட்டுள்ளது. ஏகாதிபத்தியம் மிகவும் கடுமையான தோல்விகளைக் கண்டிருக்கின்றது. பாட்டாளி வர்க்கம் சோஷலிச நாடுகளின் ஸ்தாபகம் உட்பட பிரமாண்ட வெற்றிகளைப் பெற்றிருக்கின்றது. அதேவேளையில் கம்யூனிஸ்ட் இயக்கம் கசப்பான அனுபவத்தையும் பெற்றிருக்கிறது. இந்த நாடுகளிலுள்ள புரட்சிகர மக்கள் தேசிய விடுதலை யுத்தங்கள் உட்பட வீரப் போராட்டங்களை நடத்தியுள்ளனர். இவற்றினால் பாட்டாளி வர்க்கத்தினதும் அதன் நேசவணிகளினதும் அரசியல் அதிகாரம் ஸ்தாபிக்கப்படவில்லை. ஆனால் மக்களின் வெற்றிக்கனிகள் புதிய சுரண்டல்காரர்களினால் எடுக்கப்பட்டுள்ளன. இவர்கள் வழக்கமாக ஒரு அல்லது மற்ற ஏகாதிபத்திய வல்லரசு (களு) டன் கூட்டுச் சேர்ந்து இதனைச் செய்துள்ளனர். இந்த வகை நாடுகளில் புரட்சி நடத்துவதிலான பல பத்தாண்டுகால அனுபவத்தை விமர்சனரீதியாகத் தொகுக்கும் மிக முக்கியமான பணி சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்துக்கு உண்டு என்பதை இவை அனைத்தும் காட்டுகின்றன.

காலனி, அரைக் (அல்லது நவ) காலனி நாடுகளில் புரட்சிகர யுத்த தந்திரத்தையும் தந்திரோபாயங்களையும் வகுப்பதன் விளக்க அம்சமாக சீனாவில் நடைபெற்ற நீண்டகாலப் புரட்சி யுத்தத்தின் போது மாசேதுங் விருத்தி செய்த தத்துவம் இருக்கின்றது.

இந்தவகை நாடுகளில் புரட்சியின் இலக்கு அந்நிய ஏகாதிபத்தியமும் தரகு – அதிகாரத்துவ பூர்ஷ்வா வர்க்கமும் நிலப்பிரபுத்துவ வர்க்கமும் ஆகும். இந்த வர்க்கங்கள் ஏகாதிபத்தியத்துடன் நெருங்கிய தொடர்புடையவை, அதிற் சார்ந்திருப்பவை. இந்த நாடுகளில் புரட்சி இரண்டு கட்டங்களுக்கூடாகச் செல்லும்: முதலாவது கட்டம் புதிய ஜனநாயகப் புரட்சி, இது நேரடியாக இரண்டாவது கட்டமான சோஷலிசப் புரட்சிக்கு இட்டுச் செல்லும். புரட்சியின் முதலாவது கட்டத்தின் இயல்பு, இலக்கு, பணிகள் ஆகியன இந்தப் புதிய ஜனநாயகத் திட்டத்துக்கு ஆதரவளிக்க வென்றெடுக்கக் கூடிய சகல வர்க்கங்களினதும் தட்டுக்களினதும் பரந்த ஐக்கிய முன்னணி ஒன்றை



உருவாக்கப் பாட்டாளி வர்க்கத்துக்குத் துணை புரிகின்றன; அதனைக் கோருகின்றன. ஆனால் பாட்டாளி வர்க்கம் தக்க நிலைமைகளில் அதன் சொந்த ஆயுதப் படைகளை ஸ்தாபிப்பது உட்பட அதன் சொந்த சக்திகளை வளர்த்துப் பலப்படுத்தும் அடிப்படையிலும் புரட்சிகர மக்களின் மற்றப் பகுதியினர் மத்தியில் விசேஷமாக ஏழை விவசாயிகள் மத்தியில் பாட்டாளி வர்க்கத்தின் ஆதிக்கத்தை ஸ்தாபிப்பதன் மூலமும் இதனைச் செய்ய வேண்டும். இந்த நேசவணியின் மூலக்கல் தொழிலாளி விவசாயி நேசவணியாகும். விவசாயப் புரட்சியை நடத்துவது (அதாவது கிராமப் புறத்தில் அரைப் பிரபுத்துவ சுரண்டலுக்கு எதிரான போராட்டமும் "உழுபவனுக்கே நிலம்" என்ற கோஷத்தை அமுலாக்குவதும்) புதிய ஜனநாயகத் திட்டத்தின் கேந்திரப் பகுதியாக அமைகின்றது.

இந்த நாடுகளில் பாட்டாளி வர்க்கமும் பொதுமக்களும் கடுமையாகச் சுரண்டப்படுகிறார்கள். ஏகாதிபத்திய ஆதிக்கத்தின் அட்டூழியங்கள் இடைவிடாமல் இடம் பெறுகின்றன. ஆளும் வர்க்கங்கள் வழக்கமாகத் தமது சர்வாதிகாரத்தை நிர்வாணமாகவும் மிலேச்சத்தனமாகவும் நடத்துகின்றன. அவை பூர்ஷ்வா ஜனநாயக அல்லது 'பாராளுமன்ற' வடிவத்தைப் பயன்படுத்தும் போது கூட அவற்றின் சர்வாதிகாரம் மிகவும் இலேசான திரையினால் தான் மூடப்பட்டிருக்கிறது. இந்த நிலைமையினால் பாட்டாளிகளும் விவசாயிகளும் மற்றும் பொது மக்களும் அடிக்கடி புரட்சிப் போராட்டங்களை நடத்துகின்றனர். இப்போராட்டங்கள் அடிக்கடி ஆயுதப் போராட்டங்களாக அமைகின்றன. இந்த நாடுகளிலான ஒரபக்கமான ஒழுங்கு பிசகிய வளர்ச்சி உட்பட இந்தக் காரணங்களினால் பிற்போக்கு வர்க்கங்கள் நிதானமாக ஆட்சியை நிலைநிறுத்தி அரசு பூராவிலும் அவற்றின் அதிகாரத்தை ஸ்திரப்படுத்துவது கஷ்டமாய் இருக்கின்றது. இந்த நாடுகளில் புரட்சி அநேகமாக நீடித்தகாலம் புரட்சி யுத்த வடிவத்தை எடுக்கின்றது. இந்தப் புரட்சி யுத்தத்தில் புரட்சிகர சக்திகள் கிராமப் புறத்தில் ஏதோ வகை தளப் பிரதேசங்களை ஸ்தாபித்து நகரத்தை கிராமப்புறத்திலிருந்து சுற்றி வளைக்கும் அடிப்படை யுத்த தந்திரத்தை நிறைவேற்றக் கூடியதாக இருக்கின்றது.

புதிய ஜனநாயகப் புரட்சி ஒன்றை நடத்துவதன் தீர்க்கமான அம்சம் பாட்டாளி வர்க்கத்தின் சுதந்திரமான பாத்திரமும் அதன் மார்க்சிஸ லெனினிசக் கட்சி மூலம் புரட்சிப் போராட்டத்தில் அதன் ஆதிக்கத்தை ஸ்தாபிக்கும் திறனுமாகும். தேசிய பூர்சுவா வர்க்கத்தின் ஒரு பகுதி புரட்சிகர இயக்கத்தில் சேர்ந்து கொள்ளும் போது கூட அது புதிய ஜனநாயகப் புரட்சிக்குத் தலைமை தாங்க மாட்டாது, தலைமை தாங்கவும் முடியாது என்பதை அனுபவம் மீண்டும் மீண்டும்

www.tamilarangam.net



காட்டியுள்ளது. இந்தப் புரட்சியை இறுதிவரை நடத்துவது பற்றி பேசத் தேவையில்லை. மாக்சிஸ – லெனினிசக் கட்சி ஒன்று தலைமை தாங்காத ''ஏகாதிபத்திய எதிர்ப்பு முன்னணி''யின் (அல்லது அத்தகைய ''புரட்சிகர முன்னணி'') வங்கலோட்டை வரலாறு நிரூபித்திருக்கிறது. இந்த முன்னணி அல்லது அதிலுள்ள சக்திகள் ''மாக்சிஸ (உண்மையில் போலி மாக்சிஸ) சாயம் பூசினாலும் அது வங்கலோட்டாகும். இந்தப் புரட்சிகர அணி வகுப்புகள் வீரமிக்க போராட்டங்களுக்குத் தலைமைதாங்கி ஏகாதிபத்திய வாதிகளுக்குப் பலம் வாய்ந்த அடிகள் வழங்கியுள்ள போதிலும் அவை சித்தாந்த ரீதியிலும் ஸ்தாபன ரீதியிலும் ஏகாதிபத்திய பூர்ஷ்வா செல்வாக்குகளை எதிர்த்து நிற்கும் திறனற்றவை. இத்தகைய சக்திகள் அதிகாரத்தைக் கைப்பற்றிய போதிலும் கூட சமுதாயத்தின் பூரண புரட்சிகர மாற்றத்தைச் செய்ய முடியாதவையாக இருக்கின்றன. விரைவிலோ பின்னரோ ஏகாதிபத்திய வாதிகளால் தூக்கியெறியப்படுகின்றனர், அல்லது தாமே ஏகாதிபத்திய வாதிகளுடன் கூட்டுச் சேர்ந்து புதியதோர் பிற்போக்கான ஆளும் அதிகாரம் ஆகின்றனர்.

ஆளும் வர்க்கங்கள் தமது மிலேச்சத்தன்மான அல்லது பாசிஸ சர்வாதிகாரத்தைச் செலுத்தும் நிலைமைகளில் கம்யூனிஸ்ட் கட்சி இதனால் ஏற்படும் முரண்பாடுகளை புதிய ஜனநாயகப் புரட்சிக்கு சாதகமாகப் பயன்படுத்தி மற்ற வர்க்க சக்திகளுடன் தற்காலிக உடன்பாடுகளில் அல்லது கூட்டணிகளில் ஈடுபட முடியும். ஆனால் கட்சி அதன் தலைமையை நிலைநிறுத்தி இந்தக் கூட்டணிகளை புரட்சியைப் பூர்த்திவரை நடத்தும் முழுமையான பிரதான பணியில் பயன்படுவதிலேயே இதனை வெற்றிகரமாகச் செய்ய முடியும். சர்வாதிகாரத்துக்கு எதிரான போராட்டத்தை ஒரு யுத்த தந்திரக் கட்டமாக்கக் கூடாது ஏனென்றால் பாசிஸ எதிர்ப்புப் போராட்டத்தின் உள்ளடக்கம் புதிய ஜனநாயகப் புரட்சியின் உள்ளடக்கமே தவிர வேறெதுவும் அல்ல.

மாக்சிஸ லெனினிசக் கட்சி புதிய ஜனநாயக புரட்சியை நடத்தும் உடனடிப்பணி, பல்வேறு வர்க்கசக்திகளின், நண்பர்களினதும் எதிரிகளினதும் பாத்திரம் மோதும் நலன்கள் ஆகியனபற்றி மட்டுமல்ல சோசலிசப் புரட்சிக்கான மாற்றத்துக்குத் தயாரிப்புச் செய்யும் தேவை உலகந்தழுவிய கம்யூனிஸம் என்ற இறுதி இலட்சியம் ஆகியன பற்றியும் பாட்டாளி வர்க்கத்துக்கும் புரட்சிகர மக்களுக்கும் விளக்கம் அளித்தல் வேண்டும்.

மக்களின் உண்மையான யுத்தம் என்ற முறையில் கட்சி புரட்சி யுத்தத்துக்குத் தலைமை தாங்க வேண்டும் என்பது மாக்சிஸ லெனினிச



வாதிகளைப் பொறுத்தவரை ஒரு கோட்பாடாகும். மாக்சிஸ லெனினிச வாதிகள் யுத்தத்தை நடத்தும் கஷ்டமான நிலைமைகளில் கூடபரந்துபட்ட அரசியல் போதனையை நடத்தவும் மக்களின் தத்துவ, சித்தாந்த மட்டத்தை உயர்த்தவும் பாடுபட வேண்டும். இதற்கு ஒழுங்கான கம்யூனிஸ்ட் பத்திரிகை முதலியவற்றை நடத்துவதும் கலாச்சாரத் துறைக்குள் புரட்சியைக் கொண்டு செல்வதும் அவசியம்

காலனி, அரைக் (அல்லது நவ) காலனி நாடுகளில் சமீப காலத்தில் ஏற்பட்ட பிரதான பிறழ்வு இந்த நாடுகளில் புரட்சி இயக்கத்தின் இந்த அடிப்படை திசைமார்க்கத்தை மறுக்கும் அல்லது நிராகரிக்கும் போக்காக இருந்துள்ளது, இருக்கின்றது: பாட்டாளி வர்க்கத்தினதும் மாக்சிஸ - லெனினிசக் கட்சியினதும் தலைமைப் பாத்திரத்தை மறுத்தல்; மக்கள் யுத்தத்தை நிராகரித்தல் அல்லது அதனைச் சந்தர்ப்பவாதரீதியில் பிறழ்வு படுத்தல்; தொழிலாளர் - விவசாயிகள் நேச வணியை அடிப்படையாகக் கொண்டதும் பாட்டாளி வர்க்கத்தில் தலைமையில் உள்ளதுமான ஐக்கிய முன்னணியின் உருவாக்கத்தைக் கைவிடுதல்.

கடந்த காலத்தில் இந்தத் திரிபுவாதப் பிறழ்வு ''இடது'' வடிவத்தையும் பகிரங்க வலதுசாரி வடிவத்தையும் எடுத்திருக்கிறது. நவீன திரிபுவாதிகள், குறிப்பாகக் கடந்த காலத்தில் ''சோஷலிசத்துக்கான சமாதான மாற்றம்'' என்று போதனை செய்து தேசிய விடுதலைப் போராட்டத்தில் பூர்ஷ்வா வர்க்கத்தின் தலைமையை ஊக்குவித்தனர். இந்தப்பகிரங்கமான சரணாகதிவாத, வலதுசாரித் திரிபுவாதம் எப்பொழுதும் ஒருவகை ''இடது'' ஆயுதந்தாங்கிய திரிபுவாதத்துடன் ஒத்துப்போய் மென்மேலும் ஒன்று கலந்துள்ளது. சில வேளைகளில் கியூபாத் தலைவர்களும் மற்றவர்களும் இதனை ஊக்குவித்தனர். இந்த ''இடது'' ஆயுதந்தாங்கிய திரிபுவாதம் ஆயுதப் போராட்டத்தை மக்களிடமிருந்து பிரித்து புரட்சிக் கட்டங்களை தனியொரு சோஷலிசப் புரட்சியில் சேர்க்கும் மார்க்கத்தைப் போதிக்கின்றது. இதன் உண்மை அர்த்தம் என்னவென்றால் மிகக் குறுகிய அடிப்படையில் தொழிலாளர்களை அறைகூவி அழைத்து ஏகாதிபத்தியத்தையும் அந்நிய மூலதனம் செழித்து வளர்ந்து வளம்பெறும் பின்தங்கிய ஒழுங்கு மீறிய பொருளாதார சமூக உறவுகளையும் பூரணமாக அழித்தொழிப்பதில் தொழிலாளி வர்க்கம் விவசாயிகளுக்கும் மற்றவர்களுக்கும் தலைமை தாங்குவதை நிராகரிப்பதாகும். இன்று இந்த வடிவ திரிபுவாதம் தேசிய விடுதலைப் போராட்டங்களுக்குள் ஊடுருவி அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான சமூக ஏகாதிபத்திய முயற்சியின் பிரதான தளங்களில் ஒன்றாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



காலனி, அரைக் (அல்லது நவ) காலனி நாடுகளில் புரட்சிகர இயக்கம் சரியான திசை மார்க்கத்தில் வளர்வதற்கு மாக்சிஸ - லெனினிசவாதிகள் தொடர்ந்து, பல்வடிவத் திரிபுவாதிகளுக்கும் எதிரான போராட்டத்தைத் தீவிரப்படுத்த வேண்டும். இந்த வகையான பல்வேறு நாடுகளில் ஸ்தூலமான நிலைமைகளை மேற்கொண்டு ஆராய்வதிலும் தக்க அரசியல் மார்க்கத்தை விருத்தி செய்வதிலும் மாசேதுங்கின் படைப்பை இன்றியமையாத தத்துவ அடிப்படையாகக் கொள்ள வேண்டும்.

இதேவேளையில் காலனி, சார்பு நாடுகளில் புரட்சிகர மார்க்கம் ஒன்றை அமுல்படுத்தப் பாடுபட்ட உண்மையான புரட்சிச் சக்திகள் மத்தியில் தோன்றியுள்ள மற்ற, இரண்டாந்தரமான பிறழ்வுகளைக் கவனிக்க வேண்டும். ஆபிரிக்க, ஆசிய, லத்தீன் அமெரிக்க அடக்கி ஒடுக்கப்பட்ட தேசங்களிலுள்ள நாடுகள் கற்பாறை போன்ற தனியொரு முகாமல்ல, அவற்றின் வர்க்க அமைவு ஏகாதிபத்திய ஆதிக்க வடிவம் முழு உலக நிலைமைக்குமுன்னிலையில் அவற்றின் நிலைமை ஆகியவற்றைப் பொறுத்து அவற்றுக்கிடையில் கணிசமான வேற்றுமைகள் உண்டு என்பதை முதலில் கவனிக்க வேண்டும். இந்தப் பிரச்சினைகளை முழுதாகவும் விஞ்ஞான ரீதியாகவும் ஆராயத்தவறும்போக்கு, சர்வதேசிய பாட்டாளி வர்க்கத்தின் முந்திய அனுபவத்தை இயந்திர ரீதியில் பிரதிபண்ணும் போக்கு, அல்லது சர்வதேசிய நிலைமையிலும் குறிப்பிட்ட நாடுகளிலும் ஏற்பட்டுள்ள மாற்றங்களைக் கவனிக்கத் தவறும் போக்கு ஆகியன புரட்சி இலட்சியத்துக்கு தீங்கு விளைவித்து மாக்சிஸ - லெனினிச சக்திகளைப் பலவீனப்படுத்தும்.

அறுபதாம் ஆண்டுகளிலும் எழுபதாம் ஆண்டுகளின் ஆரம்பகாலத்திலும் சீனக்கலாச்சாரப் புரட்சியின் செல்வாக்கின் கீழும் பொதுவான உலகந் தழுவிய புரட்சிகரப் பேரெழுச்சியின் பகுதியாகவும் பல நாடுகளில் மாக்சிஸ - லெனினிச சக்திகள் மக்கள் பகுதியினருடன் சேர்ந்து ஆயுதந்தாங்கிய புரட்சி யுத்தத்தை நடத்தினார்கள். பல நாடுகளில் மாக்சிஸ - லெனினிச சக்திகள் புரட்சிக் கொடியின்கீழ் கணிசமான மக்களை அணிதிரட்டி, மிலேச்சத்தனமான எதிர்ப் புரட்சி அடக்கு முறை இருந்தபோதும், மாக்சிஸ - லெனினிசக் கட்சியையும் மக்களின் ஆயுதப்படையையும் நிறுவினார்கள். புதிய, மாக்சிஸ - லெனினிசக் கட்சிகளைக் கட்டியமைக்கும் இந்த ஆரம்பகால முயற்சிகளிலும் ஆயுதப் போராட்டத்தின் ஆரம்பத்திலும் சில ஒழுங்கீனங்கள் இருப்பது இயற்கையே. அவற்றில் சித்தாந்த, அரசியல் பலவீனங்கள் பிரதிபலிப்பதும் இயற்கையே. ஏகாதிபத்தியவாதிகளும் திரிபு வாதிகளும்



இந்தத் தவறுகளையும் பலவீனங்களையும் பயன்படுத்தி இந்தப் புரட்சிவாதிகளை ''அதீத இடதுசாரிகள்'' எனவும் அதிலும் மோசமாகவும் திட்டியது ஆச்சரியத்துக்குரியதல்ல. எப்படியென்றாலும் இந்த அனுபவங்களைப் பொதுவாக மாக்சிஸ லெனினிச இயக்கப் பாரம்பரியத்தின் முக்கிய பகுதியாகக்கொள்ள வேண்டும். அவை மேற்கொண்டு முன்னேற்றங்களுக்கு அடிப்படைபோடத்துணை புரிந்தன.

ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்க அடக்கி ஒடுக்கப்பட்ட நாடுகளில் தொடர்ச்சியான புரட்சிகர நிலைமை ஒன்று பொதுவாக நிலவுகின்றது. ஆனால் பின்வரும் விஷயத்தைச் சரியாக புரிந்துகொள்வது முக்கியம்: புரட்சிகர நிலைமை ஒரு நேர்கோட்டில் செல்வதில்லை; தேய்வும் வளர்ச்சியும் அதற்குண்டு. கம்யூனிஸ்ட் கட்சிகள் இதனை மனதிற் கொள்ள வேண்டும். மக்கள் யுத்தத்தின் ஆரம்பமும் அதன் இறுதி வெற்றியும் முற்றிலும் அகநிலைக் காரணத்தில் (கம்யூனிஸ்டுகள்) தங்கியிருக்கின்றது. என்று கூறும் முறையில் அவர்கள் ஓரபக்கமாகச் செல்லக்கூடாது. இக்கருத்து லின்பியௌ விசத்துடன் அநேகமாகத் தொடர்புபடுத்தப்படுகின்றது. இந்த நாடுகளில் வர்க்கப் போராட்டப் பணிகளை நிறைவேற்றுவதில் ஏதோவகை ஆயுதப்போராட்டம் பொதுவாக எல்லாக் காலத்திலும் வரவேற்கத்தக்கதும் அவசியமானதும் என்ற போதிலும் சில காலகட்டங்களில் ஆயுதப் போராட்டம் பிரதான போராட்ட வடிவமாக இருக்கலாம் வேறு சிலகட்டங்களில் அப்படி இல்லாமல் இருக்கலாம்.

புரட்சிகர நிலைமை தாழும்போது கம்யூனிஸ்ட் கட்சிகள் தக்க தந்திரோபாயங்களைத் தீர்மானிக்க வேண்டும். குருட்டு அவசரமான பொறுமையிழந்த முற் பாய்ச்சல்களில் ஈடுபடக் கூடாது. இத்தகைய நிலமைகளில் நீடித்த கால மக்கள் யுத்தத்தை நடத்துவதற்குத் தேவையான அரசியல், ஸ்தாபனத் தயாரிப்புகளை எவ்விதத்திலும் உதாசீனம் செய்யக் கூடாது. மேற்கொண்டு முன்னேற்றத்திற்குச் சாதகமான நிலைமைகளை எதிர்பார்த்திருக்கும் அதே வேளையில் புரட்சியின் வளர்ச்சியைத் துரிதப்படுத்த ஸ்தூலமான நிலைமைகளுக்கு ஏற்ற போராட்ட ஸ்தாபன வடிவங்கள் தீர்மானிக்கப்படவேண்டும். நாடு பூராவிலும் புரட்சிக்குச் சாதகமான நிலைமைகள் தோன்றும் வரை ஆயுதப் போராட்டத்தின் ஆரம்பத்தைப் பின்போடும் அல்லது எந்த ஆயுதப் போராட்ட வடிவத்தையும் பயன்படுத்துவதைப் பின்போடும் எந்தத் தவறான. கருத்தையும் எதிர்க்க வேண்டும். இக்கருத்து இந்த நாடுகளில் புரட்சியினதும் புரட்சிகர நிலைமைகளினதும் அசமத்துவ வளர்ச்சியை நிராகரிக்கின்றது, ''தனியொரு பொறிகாட்டுத் தீயை மூட்டலாம்'' என்ற மாவோவின் கூற்றுக்கு விரோதமானது

www.tamilarangam.net



ஒரு நாட்டின் புரட்சியில் முழுமையான சர்வதேசிய நிலைமை செல்வாக்கு வகிக்கின்றது என்பதையும் கவனிப்பது முக்கியம். இதனைக் கணக்கில் எடுக்காவிட்டால் உலகரீதியான வளர்ச்சிகளால் புரட்சிகரப் போக்கு துரிதம் பெறும்போது மாக்சிஸ லெனினிசவாதிகள் இந்தச் சந்தர்ப்பத்தை இறுகப் பற்றத் தயாரில்லாதவர்களாக இருப்பார்கள்.

இன்று புதிய ஏகாதிபத்திய யுத்தம் ஒன்றின் ஆபத்து துரிதமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. நவ காலனி நாடுகளிலுள்ள மாக்சிஸ லெனினிசக் கட்சிகள், ஸ்தாபனங்கள் ஆகியனவும் இந்த ஏகாதிபத்திய யுத்தத்துக்கு எதிரான போராட்டத்தில் கவனம் செலுத்துவது அவசர பணியாகின்றது. இந்த நவ காலனி நாடுகளில் பல, அவை பல்வேறு ஏகாதிபத்திய முகாம்களுடன் கொண்டுள்ள உறவைப் பொறுத்து இந்த ஏகாதிபத்திய யுத்தத்தில் இழுக்கப்படலாம் என்பதைக் கம்யூனிஸ்டுகள் கணக்கில் எடுக்க வேண்டும். இத்தகைய ஏகாதிபத்திய யுத்தத்தின் மத்தியில் எழக்கூடிய பல்வேறு ஸ்தூலமான நிலைமைகளைக் கம்யூனிஸ்ட் கட்சிகள் கணக்கில் எடுத்து இந்த நிலைமைகளுக்கேற்ப அவற்றின் சிந்தனையை விருத்தி செய்ய வேண்டும். இந்த நாடுகளில் இப்பொழுது நிலவும் புறநிலை நிலைமைகள் காரணமாக பொதுமக்கள் பொதுவாக ஒரு ஏகாதிபத்திய யுத்தத்தின் ஆபத்துக்கள் பற்றியும் அதன் விளைவுகள் பற்றியும் அவ்வளவு அறியாதவர்களாக இருக்கின்றூர்கள். மாக்சிஸ லெனினிசவாதிகள் அவர்களுக்குப் போதனை அளிக்க வேண்டும். ஒரு ஏகாதிபத்திய யுத்தம் ஏற்படும் பட்சத்தில் மாக்சிஸ லெனினிசவாதிகளின் மிக முக்கிய பணி இந்த யுத்தம் உருவாக்கும் சாதகமான சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி புரட்சிப் போராட்டத்தை உக்கிரப்படுத்தி இந்த ஏகாதிபத்திய யுத்தத்தை ஏகாதிபத்தியத்துக்கும் பிற்போக்கிற்கும் எதிரான புரட்சிகர யுத்தமாக மாற்றுவதாகும்.

1980 இலையுதிர்காலக் கூட்டறிக்கை பின்வருமாறு சுட்டிக் காட்டியது:

''தான் ஆதிக்கம் செலுத்தும் நாடுகளில் குறிப்பிடத்தக்க முதலாளித்துவ உறவு அம்சங்களைப் புகுத்த ஏதிகாதிபத்தியம் எத்தனிக்கின்றது என்பதை மறுக்க முடியாது. சில சார்பு நாடுகளில் முதலாளித்துவ வளர்ச்சி ஏற்பட்டிருக்கிற அளவைப் பார்க்கும்போது அவற்றை அரைப் பிரபுத்துவ நாடுகள் என்று அழைப்பது சரியாகாது. பிரபுத்துவ அல்லது அரைப் பிரபுத்துவ உற்பத்தி உறவுகளும் மேல



மைப்பில் அவற்றின் பிரதிபலிப்பும் இன்னும் நிலவுகின்றபோதிலும் இந்த நாடுகளைப் பிரதானமாக முதலாளித்துவ நாடுகள் என்று அழைப்பது தான் நல்லது.

இத்தகைய நாடுகளைப் பொறுத்து இந்த நிலைமைகளை ஸ்தூலமாக ஆராய்ந்து பாதை, பணிகள், இயல்பு, வர்க்க சக்திகளின் சேர்க்கை ஆகியன பற்றித் தக்க முடிவுகள் பெறப்படவேண்டும். எந்த நிலைமையிலும், அந்நிய ஏகாதிபத்தியம் புரட்சியின் இலக்காக இருக்கின்றது''

ஏகாதிபத்தியம் ஆதிக்கம் செலுத்தும் நர்டுகளில் மென்மேலும் முதலாளித்துவ உறவுகளைப் புகுத்துவதால் ஏற்படும் விளைவுகளைப் பற்றியும் சரியாக ''பிரதானமாக முதலாளித்துவ'' நாடுகள் என்று அழைக்கப்படக் கூடிய இந்த அடக்கி ஒடுக்கப்பட்ட நாடுகள் எவை என்பதையும் பற்றிய ஆய்வு சர்வதேசிய இயக்கம் செய்ய வேண்டிய தோர் முக்கிய பணியாக இருக்கின்றது. இருப்பினும் சில முக்கியமான முடிவுகளை இப்பொழுது வகுத்துக் கொள்ள முடியும்.

பெயரளவிலான அரசியல் சுதந்திரமும் பரவலான முதலாளித்துவ உறவுகள் புகுத்தப்படுவதும் சேர்ந்து கொண்டபடியால் அநேக அல்லது பல முன்னுள் காலனிகளில் புதிய ஜனநாயகப் புரட்சியின் தேவை இல்லாதொழிக்கப்பட்டுவிட்டது. என்ற கருத்து தவறுனது, ஆபத்தானது. பல்வேறு ட்ரொஸ்கியவாதிகள், சோஷல் ஜனநாயசவாதிகள், புரட்சிகர மாக்சிஸத்தின் குட்டி பூர்ஷ்வா விமர்சகர்கள் ஆகியோர் கொண்டுள்ள இந்தக் கருத்தின்படி. ஏகாதிபத்தியத்துக்கும் அதனுல் அடக்கி ஒடுக்கப்படும் தேசங்களுக்கும் இடையில் குணும்சரீதியான வேறுபாடு கிடையாது. இது ஏகாதிபத்திய யுகத்தின் முக்கிய அம்சங்களில் ஒன்றை ஒரேயடியில் இல்லாதொழித்து விடுகின்றது.

வாஸ்தவத்தில் ஏகாதிபத்தியம் தான் சுரண்டும் நாடுகளின் உற்பத்திச்சக்திகளைப் பொறுத்து தொடர்ந்து ஒரு முட்டுக்கட்டையாக இருக்கின்றது. அது பெருமளவில் அல்லது குறைந்தளவில் புகுத்தும் முதலாளித்துவ ''வளர்ச்சி'' என்பது ஊக்கமான, தேசிய சந்தைக்கு வழிகோலவில்லை, ''தொன்மையான'' முதலாளித்துவ பொருளாதார அமைப்புக்கும் வழிகோலவில்லை. மாருக அந்நிய மூலதனத்திற்ச் சார்ந்திருப்பதும் அதற்குச் சாதகமானதுமான மிகுதியும் ஒரபக்கமான வளர்ச்சிக்குத்தான் வழிகோலுகின்றது.

பிரதானமாக அடக்கிஒடுக்கப்பட்ட முதலாளித்துவ நாடுகளிற் கூட புரட்சியின் முதற்கட்டத்தில் அந்நிய ஏகாதிபத்தியமும், அதன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உள்நாட்டு முண்டுகளும், புரட்சியின் பிரதான இலக்காக இருக்கின்றன. இந்த நாடுகளில் புரட்சியின் பாதை அரைப் பிரபுத்துவ உறவுகள் நிலவும் நாடுகளிலும் பார்க்க கணிசமானளவு வித்தியாசமானதாக இருக்கும் என்றபோதிலும், பொதுவாக, சோஷலிசப் புரட்சி தொடங்குவதற்கு முன்னர் புரட்சி ஒரு ஜனநாயக, ஏகாதிபத்திய எதிர்ப்புக் கட்டத்துக்கூடாகச் செல்ல வேண்டியிருக்கும்.

கிராமப்புறத்துடன் ஒப்பிடும்போது, அரசியல் ரீதியிலும் ராணுவ ரீதியிலும் நகரங்களின் ஒப்பீட்டளவிற் கூடுதலான பலம், சில அடக்கி ஒடுக்கப்பட்ட நாடுகளில் மென்மேலும் முதலாளித்துவ வளர்ச்சி ஏற்படுவதால் தோன்றியுள்ள மிகுதியும் முக்கியமான பிரச்சினையாகும். இவற்றில் சில நாடுகளில் நகரத்தில் கிளர்ச்சியைத் தொடுத்து ஆயுதப் போராட்டத்தை ஆரம்பிப்பது சரியானது. கிராமப்புறத்திலிருந்து நகரங்களைச் சுற்றிவளைப்பது என்ற மாதிரியைப் பின்பற்ற முடியாது, மேலும், புரட்சியின் பாதை கிராமப்புறத்திலிருந்து நகரத்தைச் சுற்றிவளைப்பது என்றிருக்கும் நாடுகளிற் கூட நகரங்களில் பொதுஜன எழுச்சிகள் பேரெழுச்சிகளுக்கும் கிளர்ச்சிகளுக்கும் வழிகோலும் நிலைமைகள் ஏற்படலாம். கட்சி அதன் கூட்டுமொத்த யுத்ததந்திரத்துக்கு இணங்க இத்தகைய நிலைமைகளைப் பயன்படுத்தத் தயாராய் இருக்கவேண்டும். எப்படியென்றாலும், இந்த இரண்டு நிலைமைகளிலும் பாட்டாளி வர்க்கத் தலைமையில் விவசாயிகளை புரட்சியிற் பங்குபற்றச் செய்யும் கட்சியின் திறன் அதன் வெற்றிக்குத் தீர்க்கமானது.

முதலாளித்துவ வளர்ச்சியின் போக்கிற்கு முன்னர் மத்திய அரசு அமைப்பு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டதன் காரணமாக, பிரதானமாக அரைக் (அல்லது நவ) காலனி நாடுகளில் பல தேசிய சமூக அமைப்புக்கள் இருக்கின்றன. பெரும்பாலான இந்த நாடுகள் ஏகாதிபத்தியவாதிகளால் உருவாக்கப்பட்டவை. மேலும், இந்த நாடுகளின் எல்லைகள் ஏகாதிபத்திய இடங் கொள்ளல்கள், சூழ்ச்சிகள் ஆகியவற்றால் தீர்மானிக்கப்பட்டன. ஆகவே ஏகாதிபத்தியத்தால் அடக்கி ஒடுக்கப்பட்ட நாடுகளின் அரசு எல்லைகளுக்குள்ளே அடக்கி ஒடுக்கப்பட்ட தேசியங்களும் தேசிய அசமத்துவமும் ஈவிரக்கமற்ற தேசிய அடக்குமுறையும் நிலவுகின்றன. இது பொதுவான விஷயமாகும். எமது யுகத்தில் தேசியப் பிரச்சினை தனிப்பட்ட நாடுகளின் அகப் பிரச்சினையாக இனிமேலும் நிலவவில்லை. உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சி என்ற பொதுப் பிரச்சினைக்குக் கீழ்ப்பட்டதாக அது நிலவுகின்றது. ஆகவே இப் பிரச்சினையை முற்றுமுழுதாகத் தீர்ப்பது ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்தில் நேரடியாகத் தங்கியிருக்கின்றது. இந்த நிலைமையில் மாக்சிஸ லெனினிசவாதிகள் பல தேசியங்களைக்



கொண்ட அரைக் காலனி நாடுகளில் அடக்கி ஒடுக்கப்பட்ட தேசியங்களின் சுய நிர்ணய உரிமையை உயர்த்திப் படிக்க வேண்டும்.

காலனி, நவகாலனி நாடுகளில் உள்ள மாக்சிஸ லெனினிசவாதிகள் தத்துவார்த்த முனையிலும் அரசியல் முனையிலும் இரட்டைப் பணியை எதிர்நோக்குகின்றனர் என்று கூறமுடியும். ஒருபுறத்தில், அவர்கள் இந்த நாடுகளில் புரட்சியின் இயல்பு, பாதை ஆகியன பற்றிய மாவோவின் அடிப்படைப் போதனைகளைத் தொடர்ந்து உயர்த்திப் பிடிக்க வேண்டும். அறுபதாம் ஆண்டுகளின் (லெனினுடைய வார்த்தையைப் பாவித்துக் கூறுவதென்றால்) "வெறிக்' கூத்தான ஆண்டுகளின்" புரட்சிகர முயற்சிகளைப் பாதுகாத்து வளர்க்கவேண்டும். அதே வேளையில் புரட்சிகர கம்யூனிஸ்டுக்கள் இந்த நாடுகளிற் புரட்சியைப் பாதிக்கும் கடந்த கால அனுபவத்தையும் நடப்பு நிலைமைகளையும் வளர்ச்சிகளையும் விமர்சனரீதியான மாக்சிஸ உணர்வுடன் பகுத்தாராய வேண்டும்.

## ஏகாதிபத்திய நாடுகள்

கூட்டறிக்கை சுட்டிக்காட்டியவாறு, ஏகாதிபத்திய நாடுகளில் "ஒக்டோபர் புரட்சி, மாக்சிஸ லெனினிச யுத்ததந்திரத்தினதும், தந்திரோபாயங்களினதும் அடிப்படை ஆதார அம்சமாக (Basic point of reference) இருக்கின்றது." இந்த அம்சத்தை உறுதிப்படுத்தி ஆழமாக்குவது அவசியம். ஏனென்றால் ஏகாதிபத்திய நாடுகளில் பாட்டாளி வர்க்கம் புரட்சிக்குத் தயாரிப்புச் செய்து நடத்துவது பற்றிய அடிப்படை லெனினிசக் கோட்பாடுகள் மலைமலையான திரிபுவாதப் புரட்டல் குவியலில் புதைக்கப்பட்டுள்ளன.

நிலைமைகள் பக்குவமடையும்போது பிற்போக்கான அரசு அதிகாரத்துக்கு எதிரான கிளர்ச்சி ஒன்றில் சமுதாயத்திலுள்ள புரட்சிச் சக்திகளுக்குத் தலைமைதாங்கக்கூடிய திறனுடைய தொழிலாளர்களின் பன்முகப்பட்ட அரசியல் இயக்கம் ஒன்றை கம்யூனிஸ்டுகள் வளர்த்தெடுக்க வேண்டியதன் அவசியத்தை லெனின் சரியாகவே வற்புறுத்தினார். இத்தகைய புரட்சிகர இயக்கம் தொழிலாளர்களின் அன்றாடப் பொருளாதாரப் போராட்டங்களிலிருந்து தன்னியல்பாகவே தோன்ற முடியாது எனவும் மேலும் இந்தப் போராட்டங்கள் புரட்சிகர வேலையின் மிக முக்கியமான அரங்கு அல்ல எனவும் லெனின் சுட்டிக்காட்டினார். உழைப்புச் சக்தியின் நிலைமைகள், அதன் விற்பனை ஆகியன பற்றிய குறுகிய போராட்டம் என்ற நிலை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மையிலிருந்து பொதுமக்களின் தன்னியல்பான இயக்கத்தைப் புரட்சிவாதிகள் ''திசைதிருப்பி'' விடவேண்டும் என்று லெனின் வாதிட்டார். இதைச் செய்வதற்கு தொழிலாளர்களுக்கு அவர்களுடைய உடனடி அனுபவத்துக்கு ''வெளியேயிருந்து'' அரசியல் உணர்வைக் கொண்டு வரவேண்டும். அரசியல் அம்பலப்பாடு மூலமும் சமுதாயத்தில் அரசியல், கலாச்சார, விஞ்ஞான மற்றும் துறைகள் அனைத்திலுமான பிரதான விஷயங்கள் அனைத்தையும் ஒட்டிய ஆய்வு மூலமும் இதனைச் செய்யவேண்டும். இந்த முறையிற்தான் தனது புரட்சிகரப் பணிகளையும் சமுதாயத்திலுள்ள மற்ற வர்க்க சக்திகளின் இயல்பு, பாத்திரம் ஆகியவற்றையும் உணர்ந்து கொள்ளும் வர்க்க உணர்வுள்ள பாட்டாளி வர்க்கப் பகுதி ஒன்றை உருவாக்க முடியும்.

பேச்சும் பிரச்சாரமும் முக்கியமானவை என்றாலும் அவை போதாது எனவும் லெனின் வற்புறுத்தினார். வர்க்கப் போராட்டத்தின் மூலம் தான், விசேஷமாக அரசியல், புரட்சிகரப் போராட்டத்தின் மூலம்தான் பொதுமக்கள் தமது புரட்சிகர உணர்வையும், போராட்டத் திறனையும் பூரணமாக வளர்த்துக் கொள்ள முடியும். இந்த முறையிலும், கம்யூனிஸ்டுகளின் பன்முக வேலையின் மூலமும் பொதுமக்கள் தமது அனுபவத்திலிருந்து கற்றுக்கொண்டு வர்க்கப் போராட்டம் என்ற ஊதுலையில் போதனை பெறுகின்றார்கள்.

லெனின் ''தொழிலாளி வர்க்கம் கற்பாறைபோல் ஒன்றானது'' என்று போதிக்கவில்லை. ஏகாதிபத்தியத்தினால் ''வர்க்க உறவுகளில் ஒரு நகர்வு'' தவிர்க்க முடியாதபடி ஏற்படும் என்று சுட்டிக்காட்டினார். ஏகாதிபத்திய நாடுகளில் தொழிலாளி வர்க்கம், அடக்கி ஒடுக்கப்பட்ட சுரண்டப்பட்ட பாட்டாளிவர்க்கம் எனவும் ஏகாதிபத்திய பூர்ஷ்வா வர்க்கத்திடமிருந்து நலன்பெற்று அதனுடன் கூட்டுச்சேர்ந்திருக்கும் மேற்பிரிவுத் தொழிலாளர்கள் எனவும் இரண்டாகப் ''பிளவுபடும்'' என்று அவர் கூறினார்.

ஏதோ வடிவத்தில் பாட்டாளி வர்க்கத்தின் நலன்களை ''அதன் சொந்த'' ஏகாதிபத்திய பூர்ஷ்வா வர்க்கத்தின் நலன்களுடன் ஒன்றாகப் பார்க்க முனைந்தவர்களையும் லெனின் கடுமையாக எதிர்த்தார் அவர் ஏகாதிபத்திய யுத்தத்தைப் பொறுத்து புரட்சிகரத் தோல்வி வாத மார்க்கம் ஒன்றிற்காகக் கடுமையாகப் போரிட்டார். பூர்ஷ்வா வர்க்கத்தின் கிழிந்த ''தேசியக் கொடி''யை எதிர்த்து பாட்டாளி வர்க்க சர்வதேசியக் கொடியை ஆட்டமசைவின்றி உயர்த்தி பிடித்தார்.



முதலாளித்துவ நாடுகளில் புரட்சி நடத்தும் சாத்தியப்பாடு புரட்சிகர நிலைமைகளின் வளர்ச்சியுடன் தொடர்புடையது எனவும் இந்தப் புரட்சிகர நிலைமைகள் இந்த நாடுகளில் அடிக்கடி ஏற்படுவதில்லை எனவும் இந்தப் புரட்சிகர நிலைமைகள் முதலாளித்துவத்தின் அடிப்படை முரண்பாடுகளின் ஒன்று செறிவு எனவும் லெனின் பகுத்தாராய்ந்தார். பொதுமக்கள் மத்தியில் படிப்படியாகவும் அமைதியாகவும் சோஷலிச செல்வாக்குப் பரவுவதில், எல்லாவற்றுக்குமாக நம்பியிருந்த இரண்டாவது சர்வதேசியத்தின்தவறை அவர் பகுத்தாராய்ந்து ஒப்பீட்டளவில் ''அமைதியான'' காலங்களில் கம்யூனிஸ்டுகளின் பணி, இந்த வகை நாடுகளில் புரட்சிகர மாற்றங்கள் ஏற்படுவது சாத்தியமானதும் புரட்சிவாதிகளின் நடவடிக்கைகள் சமுதாயத்தினதும் உலகத்தினதும் ''பல தசாப்த கால'' அம்சமாக அமைவதுமான வரலாற்றின் அந்த அரிய சந்தர்ப்பங்களுக்காகத் தயார்செய்வதாகும்.

இந்த விஷயங்களைப் பற்றி லெனின் மிகத் தெளிவாகக் கூறியுள்ள போதும் விஞ்ஞான சோஷலிசத் தத்துவம் என்ற முழு அங்கத்தில் அவை கேந்திரமானவை என்ற போதிலும் லெனினிசவாதிகள் இவற்றை அடிக்கடி மறந்து விடுகிறார்கள்.

மூன்றாவது சர்வதேசியத்தின் வரலாற்றின் ஆரம்பகாலத்தில் சில கம்யூனிஸ்ட் கட்சிகளில், புரட்சிகரமற்ற நிலைமைகளில் ''வெகுஜனக் கட்சிகள்'' என்ற தவறான கருத்துக்களும் பொருளாதார வாதப் பிறழ்வுகளும் ஏற்பட்டன. இந்தப் போக்குகள் பலம்பெற்று வளர்ந்து, ஏகாதிபத்திய நாடுகளில் பூர்ஷ்வா தேசிய நலன்களுக்காக வக்காலத்து வாங்கும் இதர தவறான, மிகுதியும் ஆபத்தான போக்குகளுடன் சேர்ந்து, கம்யூனிஸ்ட் இயக்கத்தில் சட்டப் பிரமாணங்கள் ஆகின.

அறுபதாம் ஆண்டுகளில் ஏற்பட்ட வெடிப்பில், குறிப்பாக, ஏகாதிபத்திய நாடுகளில் கம்யூனிஸ்டுகளின் யுத்தத்தந்திரம், தந்திரோபாயப் என்ற விஷயத்தில் அரைகுறைத் தன்மை ஒன்று இருந்தது. ''சமாதானப்பாதை'' நிராகரிக்கப்பட்டு விமர்சிக்கப்பட்ட அதேவேளையில், இறுதியில் ஆயுதக் கிளர்ச்சி தேவை என்பது பிரச்சாரம் செய்யப் பட்ட அதேவேளையில், துரதிஷ்டவசமாக முதலாளித்துவ நாடுகளில் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் திரிபுவாதத் தோற்றத்தின் வரலாற்று வேர்களைத் தொகுக்க முயற்சி எடுக்கப்படவில்லை. பொதுவாக மாக்சிய லெனினிச சக்திகள் லெனின் தலைமையில் உருவாகிய ''ஒக்டோபர் பாதை''யை மேற்கொள்வதை விட்டு சில ''கம்யூனிஸ்ட் கட்சிகளின் முப்பதாம் ஆண்டுகளிலான எதிர்மறை அனுபவங்களின் அடிப்படையில் இயங்கின.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்தக் காலத்தில் பெரும்பாலான ஏகாதிபத்திய நாடுகளில் புதிதாகத் தோன்றிய புரட்சிகர சக்திகளில் கணிசமான பகுதியினர் தவறான மார்க்கத்தை எடுத்து துணிச்சல்வாத அல்லது இடதுசாரி ஒருமுனைவாதக் கொள்கைகளை மேற்கொண்டனர். ஆனால் விசேஷமாக காலம் போகப் போக, புதிய மாக்சிய லெனினிசக் கட்சிகளும் ஸ்தாபனங்களும், பொதுவாக தொழிலாளர்களின் அன்றாடப் போராட்டங்களில் கவனம் குவித்து இப் போராட்டங்களின் தலைமைக்காக திரிபுவாதிகளுடனும் பூர்ஷ்வா தொழிற்சங்க உத்தியோகத்தர்களுடனும் போரிடுவதைத் தமது வேலையின் கேந்திரமாக்கிக் கொண்டன. ''சராசரித் தொழிலாளி''யை வழிபடும் இந்தப் போக்கினாலும் பொருளாதாரப் போராட்டத்தில் முழுமூச்சாக ஈடுபட்டிருந்ததாலும் தொழிலாளர்களைப் புரட்சிகர நிலைமைக்கோ, மாக்சிஸ லெனினிசக் கட்சிகளை நோக்கியோ உண்மையில் வென்றெடுப்பதில் அற்ப சாதனையே பெறப்பட்டது. அத்துடன் மாக்சிஸ லெனினிசக் கட்சிகளையும் அவற்றின் உறுப்பினர்களையும் ஊழல்படுத்தும் அபாக்கிய நிலைமையையும் இவை ஏற்படுத்தின. இந்த நாடுகளில் மாக்சிஸ லெனினிச இயக்கத்தில் ஆதிக்கம் புரிந்த இந்தப் பொருளாதாரவாத மார்க்கம் இந்த இயக்கம் எதை அடிப்படையாகக் கொண்டு ஸ்தாபிக்கப்பட்டதோ அந்தப் புரட்சிகரக் கோட்பாடுகளுக்கே நேர் விரோதமானது. உலகந்தழுவிய புரட்சிப் போக்கில் தமது பங்கையாற்ற விரும்பியபடியாலும், கம்யூனிஸத்துக்காகப் போராட விரும்பியபடியாலும்தான் இக் கட்சிகளில் பெருந்திரளாக இருந்த இளம் தீவிரவாதிகள் அவற்றில் சேர்ந்தனர். அறுபதாம் ஆண்டுகளின் புரட்சிகர இயக்கத்தை பாட்டாளி வர்க்கத்துக்குப் பரப்பி தொழிலாளர்களுடன் ஒன்றுசேரும் இந்த விருப்பம் பலம் வாய்ந்த, சரியான புரட்சிகர உணர்ச்சியாகும். கலாச்சாரப் புரட்சியில் புரட்சிகர இளைஞர்களின் அனுபவம் இதற்குக் கணிசமானளவு ஊக்கமளித்தது. ஆனால் இந்த உணர்ச்சி பொருளாதார வாதத்தின் பாதிப்பின் கீழ் திருகி நெரிக்கப்பட்டு திரிக்கப்பட்டது. உலகளாவிய புரட்சிப் பேரெழுச்சி பின்வாங்கியபோது மாக்சிஸ லெனினிசக் கட்சிகளும் ஸ்தாபனங்களும், புரட்சிகரமற்ற அடிப்படையில் வெகுஜன ஆதரவைப் பெறும் முயற்சியில் மேலும் மேலும் வலதுக்குச் செல்லக் காணப்பட்டன. இந்த ஸ்தாபனங்களின் உறுப்பினர்கள் உண்மையில் ஆற்றிவந்த பணிகள் புரட்சிக்கான தயாரிப்புடன் தொடர்பற்றவையாக இருந்தன. இதன் விளைவாக திரித்தலும், சோர்வும், சந்தர்ப்பவாதத்தின் வளர்ச்சியும் ஏற்பட்டன.

ஏகாதிபத்திய நாடுகளில் ''தேசியப் பணிகள்'' (சரியாகக் கூறினால், அப்படி ஒன்றும் இல்லாதிருப்பது) பற்றி மாக்சிஸ லெனினிச



வாதிகள் மத்தியில் எழுந்த குழப்பம் இவற்றை மேலும் சிக்கலாக்கியது. முன்னர் சுட்டிக்காட்டியவாறு, சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் வாதப் பிரதிவாதங்கள், இந்த விஷயத்தில், கடுமையான தவறுகளைக் கொண்டிருந்தன. மாக்சிஸ லெனினிச இயக்கம் இந்தத் தவறுகளைச் சேர்த்துக்கொண்டது: அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு (அக் காலத்தில் உலகப் பிற்போக்கின் பிரதான கோட்டை என்று சரியாகக் குறிப்பிடப்பட்டது) எதிராகப் போரிட வேண்டும் என்ற சரியான, சர்வதேசியத்துவ விருப்பத்துடன் அமெரிக்காவுடனும் சோவியத் யூனியனுடனும் (விசேஷமாக ஆரம்ப 70ம் ஆண்டுகள் முதல்) முரண்படும் அளவிற்குத் ஏனைய ஏகாதிபத்திய அரசுகளின் தேசிய நலன்களுக்கு ஊக்கமளிப்பது மென்மேலும் சேர்ந்து கொண்டது. பல மாக்சிஸ லெனினிசக் கட்சிகள் உலக விவகாரங்களைப் பொறுத்து மென்மேலும் தவறான நிலைப்பாடுகளை, சர்வதேசியத்துவத்திற்கு எதிரான நிலைப்பாடுகளை எடுத்து இந்த விஷயங்களில் இக் கட்சிகளின் நிலைப்பாடுகளை ஏகாதிபத்திய யுத்தத் தயாரிப்புகளுடனும் எதிர்ப்புரட்சி அடக்குமுறையுடனும் உண்மையில் இணைத்துக்கொண்டன. முன்னர் சுட்டிக்காட்டியவாறு, 1976ல் சீனாவில் சதிக்கவிழ்ச்சி ஏற்படுவதற்கு முன்னரே ஏகாதிபத்திய நாடுகளிலுள்ள சில மாக்சிஸ லெனினிசக் கட்சிகள் முற்றிலும் சமூக - சோவினிஸ (இனவெறி – மொ.ர்) மார்க்கம் ஒன்றை மேற்கொண்டிருந்தன.

சீனாவில் ஏற்பட்ட சதிக் கவிழ்ச்சிக்குப் பின்னர் ஐரோப்பாவில் மாக்சிஸ லெனினிச இயக்கம் வாஸ்தவத்தில் சரிந்து அழிந்ததற்கு பொருளாதார வாதம், சோஷல் - சோவினிசம் (கருவுருவிலான திரிபுவாத மூன்றுலகத்தத்துவம் உட்பட) இந்த இரண்டு கடுமையான, ஒன்றுடன் ஒன்று தொடர்பான தவறுகளும்தான் பிரதான அகநிலை அம்சங்களாகும். முன்னேறிய முதலாளித்துவ நாடுகளிலுள்ள கம்யூனிஸ்டுகள் உண்மையான மாக்சிஸ லெனினிசக் கட்சிகளைக் கட்டியமைத்து வளர்க்கும்போது இந்தப் பிறழ்வுகளின் பாதிப்புக்கு எதிரான போராட்டத்தில் பெரிதும் கவனம் செலுத்த வேண்டும்.

பெரும்பாலான முதலாளித்துவ நாடுகளில் மாக்சிஸ லெனினிச இயக்கம் ஊசலாடியபடியால் புரட்சிகர இளைஞர்களில் சில பகுதியினர் ''புதிய தத்துவம்'' ஒன்றையும் வேறு பாதை ஒன்றையும் காண முயற்சித்தனர். புரட்சிகர இளைஞர்களில் கணிசமான பகுதியினர் அராஜகவாதம் மற்றும் குட்டி பூர்ஷ்வா தீவிரவாதங்கள் ஆகியவற்றால் கவர்ந்திழுக்கப்பட்டனர். இது புரட்சி மாற்றத்தை ஏற்படுத்தும் அவர்களுடைய ஆவலை பிரதிபலித்தது. இருப்பினும் இந்த சக்திகள் பூரணமான புரட்சிகரப் பாத்திரத்தை வகிக்கும் திறனற்றவை,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஏனென்றல் முற்றுமுழுதாகப் புரட்சிகர சித்தாந்தமான மாக்சிஸம்
அவர்களிடம் இருக்கவில்லை. சில நாடுகளில் சிறிய தொகையினர்
பயங்கரவாதத்தில் ஈடுபட்டனர். இந்த சித்தாந்தமும் அரசியல் மார்க்
கமும் புரட்சிகர பொதுமக்களின் நம்பிக்கையற்றவை. ஏகாதிபத்தியத்
தைப் புரட்சிகரமாகத் தூக்கியெறிவதற்கு அவற்றுக்கு சரியான நோக்
கம் கிடையாது. இந்தப் பயங்கரவாத இயக்கங்கள் மிகுதியும் புரட்சி
கரமானவையாகக் காட்சிகொடுக்க விரும்பினலும் அவை அநேகமாக
பல திரிபுவாத, சீர்திருத்தவாதப் பிறழ்வுகளை சேர்த்துக் கொண்டுள்
ளன. ஏகாதிபத்திய நாடுகளில் ''விடுதலைப் போராட்டம்,'' ஏகாதி
பத்திய சோவியத் யூனியனைப் பாதுகாப்பது முதலியன இவற்றில் சில
வாகும். இந்த இயக்கங்கள் புரட்சிக்குத் தயாரிப்பாக பொதுமக்களின்
அரசியல் உணர்வை உயர்த்தி அரசியல் போராட்டத்தில் அவர்களுக்
குத் தலைமைதாங்குவது என்ற கேந்திர அம்சத்தைக் கிரகித்துக்
கொள்ள பொருளாதாரவாதத்தைப் போலவே தவறின.

ஏகாதிபத்திய நாடுகளில் புரட்சிகர மார்க்கம் ஒன்றை வகுப்ப
தற்கு அடிப்படை லெனினிசக் கோட்பாடுகளைத் ''தொண்டி எடுப்
பது'' ஆரம்பப்புள்ளி என்றபோதிலும் அது இன்னும் ஆரம்பமேயா
கும். இன்றைய ஏகாதிபத்திய நாடுகள் இந்த நூற்றாண்டின் ஆரம்ப
கால ரஷ்யா மற்றும் ஏகாதிபத்திய நாடுகளிலும் பார்க்க பல விஷ
யங்களில் வித்தியாசமானவை. அத்துடன் ஒக்டோபர் புரட்சி முதல்
இந்த நாடுகளில் புரட்சிகர இயக்கம் ஒன்றைக் கட்டியமைக்கும்
முயற்சியில் பெருமளவு (சாதகமான, பாதகமான) அனுபவங்கள்
பெறப்பட்டுள்ளன.

இந்த நாடுகளில் ஏகாதிபத்திய வளர்ச்சிப் போக்கினல் பல முக்
கியமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இவற்றில் சிலவற்றில் விவ
சாயி வர்க்கம் வாஸ்தவத்தில் இல்லாதொழிக்கப்பட்டதும் புதிய குட்டி
பூர்ஷ்வாப் பகுதியினர் துரிதமாக வளர்ச்சி அடைந்ததும் பிறவும்
இதில் அடங்கும். எப்படியென்றலும் அடக்கி ஒடுக்கப்பட்ட, தேசங்
களை சூறையாடும் அடிப்படையில் ஏகாதிபத்திய அரசுகள் தமது
சுரண்டல் தன்மையைப் பெரிதும் அதிகரித்தமையும், அதனுடன்
தொழிலாளி வர்க்கம் மேலும் பிரிவுச் சேர்க்கை கண்டதும் இதில்
மிக்க முக்கியமான வளர்சியாகும்.

ஏகாதிபத்திய நாடுகளில் பெரிய, மிகுதியும் அரண்கொண்ட,
செல்வாக்கான தொழிலாளி துரைமார்த் தட்டு ஒன்று இருக்கின்றது.
அது ஏகாதிபத்தியத்திடமிருந்து நலன் பெற்று விருப்பத்துடன் ஏகாதி
பத்திய நலன்களுக்குச் சேவை புரிகின்றது. இந்தத் தொழிலாளர்
களுக்கும் தொழிலாளி வர்க்கத்தின் குறிப்பிடத்தக்க பகுதியினருக்கும்



(அதன் தொழிற்துறை சேமப்படையான வேலையற்றோர் உட்பட)
இடையிலான முரண்பாட்டை ஏகாதிபத்தியம் கூர்மையாக்குகின்றது.
இந்தப் பிந்திய தொழிலாளர்கள் வறுமைப்பட்டவர்கள். தீவிர மாற்
றத்தை விரும்புவோர். அதற்காகப் போரிட எண்ணமுடையோர்.
பிரதான மேற்கத்தைய ஏகாதிபத்திய நாடுகளில் இந்தக் கீழ்ப் பகுதி
தொழிலாளி வர்க்கத்தில் கணிசமான தொகையினர் ஆதிக்கத்தின்
கீழிருந்த நாடுகளிலிருந்து வந்த குடியமர்வுத் தொழிலாளர்கள். சில
இடங்களில் ஏகாதிபத்திய நாடுகளுக்குள்ளேயே இருக்கும் தேசிய சிறு
பான்மை இனங்கள் அடக்கி ஒடுக்கப்பட்ட தேசியங்கள் ஆகியவற்
றைச் சேர்ந்தவர்கள். தொழிலாளி வர்க்கத்தின் இந்தக் கீழ்ப் பகுதி
தான் ஏகாதிபத்திய நாடுகளில் பாட்டாளிவர்க்கக் கட்சியின் சமூக
அடிப்படையின் மிகவும் முக்கியமான பகுதியாகும்.

இந்த இரண்டு பகுதித் தொழிலாளர்களுக்கும் இடையில் பெருந்
தொகையான, சில வேளைகளில் பெரும்பாலான இன்னெரு பகுதித்
தொழிலாளர் இருக்கின்றனர். இவர்கள் தொழிலாளித்துரை மார்த்
தட்டுப்போல் ஏகாதிபத்தியத்தினல் நலன் பெறவில்லை. ஆனல் ஒப்
பிட்டளவில் கணிசமான நீண்டகால சுபிட்சத்தினல் பாதிக்கப்பட்ட
வர்கள். சாதாரண காலங்களில் இவர்கள் புரட்சிகர எண்ணமுடைய
வர்களாக இருக்கமாட்டார்கள். நெருக்கடி ஆழமாகுவதால், விசேஷ
மாக புரட்சிகர நிலைமை வளர்வதால் இவர்கள் செயற்படத் தூண்
டப்படும்போது இந்தப் பரந்துபட்ட தொழிலாளர்களைத் தம்பக்கம்
சேர்ப்பதற்கான போராட்டம் மாக்சிஸ லெனினிசக் கட்சி தலைமை
யிலான புரட்சிகர, வர்க்க உணர்வுள்ள பாட்டாளிகளுக்கும் பிற்போக்
கான தொழிலாளித் துரைமார் தட்டு அதன் அரசியல் வெளிப்பாடு
கள் ஆகியவற்றுக்கும் இடையிலான போராட்டத்தின் முக்கிய அம்
சமாக அமையும். தொழிலாளி வர்க்கத்தின் பூர்ஷ்வா மயமாகிய
பகுதியினர் மத்தியில் வேலை செய்வதை அலட்சியம் செய்யாமல் இருக்
கும் அதேவேளையில் ஏகாதிபத்திய நாடுகளிலுள்ள மாக்சிஸ லெனி
னிசக் கட்சிகள் அவற்றின் வேலையைப் பிரதானமாக தொழிலாளர்
களின் மிகுதியும் புரட்சிகரமாகக் கூடிய பகுதியினர் மத்தியில் செய்ய
வேண்டும்.

தொழிலாளி வர்க்கத்தினதும் மற்றத் தட்டு பொதுமக்களினதும்
அன்றட வாழ்வுக்கான சமர்களில் கவனம் செலுத்தாமல் புரட்சிகர
இயக்கத்தைக் கட்டியமைத்து அதனை வெற்றிக்கு இட்டுச் செல்ல
முடியாது. கட்சி அதன் கவனத்தையும் மக்களின் கவனத்தையும் பிர
தானமாக இத்தகைய போராட்டத்தில் செலுத்தக் கூடாது, கட்சியி
னதும் மக்களினதும் சக்திகளையும் ஆற்றலையும் இந்தப் விதப்போராட்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



டங்களில் விரயம் செய்யக் கூடாது என்ற போதிலும் இவற்றைப் பொறுத்துக் கட்சி வேலை செய்யாமலும் இருக்க முடியாது. பொருளாதார போராட்டங்களுக்குத் தலைமை தாங்குவது என்பது பொருளாதாரவாதமாகாது. பாட்டாளி வர்க்கக் கட்சி இந்தப் போராட்டங்களை, விசேஷமாக மரபு எல்லைகளை மீறிச்செல்லக்கூடிய சக்தியுடைய போராட்டங்களை பாரதூரமாகக் கவனத்தில் எடுக்க வேண்டும். அதாவது பொது மக்களைப் புரட்சிகர நிலைப்பாடுகளை நோக்கி, விசேஷமாக புரட்சிக்கான நிலைமைகள் பக்குவமடையும்போது நகர்த்திச் செல்லும் முறையில் இந்தப் போராட்டங்களைப் பொறுத்து வேலை செய்ய வேண்டும்.

தொழிற்சாலைகளை கம்யூனிஸத்தின் கோட்டைகளாக மாற்றவேண்டும் என்ற லெனினின் அறைகூவலை அமுல்படுத்த மாக்சிஸ லெனினிசக் கட்சி பாடுபட வேண்டும். இது புரட்சிக்கான தயாரிப்பில் முக்கியமான அரசியல் பிரச்சினை என்பது மாத்திரமல்ல, பாட்டாளி வர்க்கத்தின் ஆயுதக் கிளர்ச்சியைப் பொறுத்தும் முக்கிய விஷயமாகும்.

ஏகாதிபத்திய நாடுகளிலுள்ள மாக்சிஸ லெனினிசக் கட்சிகள் புரட்சிகர வெகுஜன மார்க்கம் ஒன்றை வகுத்து அமுல்படுத்துவதன் மூலம் புரட்சிகர மக்கள் மத்தியில் ஆழ வேரூன்றுவிட்டால் புரட்சிகர நிலைமையைப் பயன்படுத்தும் முயற்சிகள் மிகுதியும் பலவீனமாகும். இந்த விஷயங்கள் அனைத்திலும் போல்ஷிவிக் கட்சி வளர்த்தெடுத்த, லெனின் தொகுத்த, தந்திரோபாயங்களும் வேலை நடையும் இன்னும் அடிப்படை வழிகாட்டு மார்க்கமாக இருக்கின்றன. ஆனால் புரட்சிகர வெகுஜன மார்க்கம் ஒன்றையும் வேலை நடையையும் விருத்திசெய்யும் பொருட்டு ஏகாதிபத்திய நாடுகளிலுள்ள மாக்சிஸ லெனினிசவாதிகள் "தக்க" போராட்டவடிவங்கள், ஸ்தாபனம் மற்றும் இவை போன்ற தத்துவங்கள் பற்றிய மரபுரீதியான விவேகத்தை வீசியெறிந்து, சமகால ஏகாதிபத்தியத்தின் ஸ்தூலமான இயல்புகள் பற்றியும் வெகுஜனங்கள் நடத்தும் போராட்டங்களின் இயல்பு பற்றியும் ஆராய்ந்து, புரட்சிகர நடைமுறைக்குச் சாதகமான புதிய தளங்களைக் கண்டுபிடித்து புதிய போராட்ட வடிவங்களையும் வெகுஜன ஸ்தாபனங்களையும் வளர்க்கவேண்டும்.

லெனின் தத்ரூபமாக வருணித்ததுபோல், கம்யூனிஸ்டின் இலட்சியம் "தொழிற்சங்கக் காரியதரிசியாக இருப்பதல்ல, மக்களின் மன்றமாக இருப்பதாகும்."

மாக்சிஸ லெனினிசக் கட்சி பாட்டாளி வர்க்கத்தின் மிகுதியும் புரட்சிகரமாகக் கூடிய பகுதியினர் மத்தியில் பிரதானமாக செயல்



படும் அதேவேளையில் குட்டிபூர்ஷ்வாப் பகுதிகள் உட்பட மற்றப் பகுதி மக்கள் மத்தியிலும் புரட்சிகர வேலையைச் செய்யப் பாடுபட வேண்டும்.

சில ஏகாதிபத்திய நாடுகளில் அடக்கி ஒடுக்கப்பட்ட தேசியங்களும் தேசிய சிறுபான்மை இனங்களும் இருப்பது இவற்றில் பாட்டாளி வர்கப் புரட்சிக்கு மிகுதியும் சாதகமாக வரக்கூடியதோர் அம்சமாகும். முன்னர் குறிப்பிட்டவாறு, இந்தத் தேசியங்களைச் சேர்ந்த பெருந்தொகை பாட்டாளிகள் இங்குள்ள தனியொரு, பல் - தேசிய பாட்டாளிவர்க்கத்தின் முக்கிய பகுதியாக அமைகின்றனர். அத்துடன் இந்த அடக்கி ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் மற்ற வர்க்கங்கள், தட்டுகளை உள்ளடக்கும் பரந்த தேசியப் பிரச்சினையும் இருக்கின்றது. இதனால் இந்த ஏகாதிபத்திய நாடுகளுக்குள்ளே கூர்மையான தேசியப் போராட்டங்கள் தோன்றியுள்ளன. இந்தப் போராட்டங்களைப் பாட்டாளி வர்க்கக் கட்சிகள் சரியாகக் கையாண்டால் அவை ஏகாதிபத்திய அரசுகளைத் தூக்கியெறிவதற்கான போராட்டத்தில் கணிசமான பாத்திரம் வகிக்க முடியும். பாட்டாளி வர்க்கக் கட்சிகள் இப் போராட்டங்களை ஆதரித்து, பொருத்தமான இடங்களில் சுயநிர்ணய உரிமையை ஆதரிக்க வேண்டும்.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் சோஷலிசப் புரட்சிக்கான சரியான யுத்ததந்திரம், தந்திரோபாயங்களை வகுக்கும் பணி மாக்சிஸ லெனினிசவாதிகளின் முன்னால் இருக்கின்றது. சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கத்தைக் கணக்கில் எடுத்து, அதனால், ஏற்படும் ஸ்தூலமான பணிகளைக் கணக்கில் எடுத்து, அவற்றின் சொந்த அதிகாரத்துவ பூர்ஷ்வா வர்க்கத்தின் அரசு அதிகாரத்தைத் தூக்கியெறியும் கேந்திரக் கடமையைக் குறைவாகப் பாராமலும் அலட்சியப்படுத்தாமலும் இதனைச் செய்யவேண்டும்.

உலக யுத்தத்தை நோக்கிய வளர்ச்சிகள், இப்பொழுதிருக்கும் ஆபத்துக்கள், புரட்சிகர வாய்ப்புகள் ஆகியவற்றை மனதிற்கொண்டு ஏகாதிபத்திய நாடுகளிலுள்ள மாக்சிஸ லெனினிசக் கட்சிகள் உலக யுத்தம், புரட்சி என்ற விஷயத்துக்குப் பெரு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். மாக்சிஸ லெனினிசக் கட்சி ஏகாதிபத்திய யுத்தத் தயாரிப்புகளை அம்பலப்படுத்த வேண்டும். விசேஷமாக அதன் "சொந்த" ஏகாதிபத்திய ஆளும் வர்க்கத்தின் நலன்களையும் சூழ்ச்சிகளையும் அம்பலப்படுத்த வேண்டும். முதலாளித்துவ சுரண்டலின் இயல்பிலிருந்தே இத்தகைய யுத்தம் ஏற்படுகின்றது. என்பதையும் அது ஏகாதிபத்திய பொருளாதாரத்தினதும் அரசியலினதும் தொடர்ச்சி என்பதையும் உல

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கப் புரட்சியின் முன்னேற்றந் தான் தயாரிப்பு நிலையிலுள்ள இந்த யுத்தத்தை நிறுத்தி அதன் மூலத்தைத் தாக்கமுடியும் என்பதையும் அது மக்களுக்கு எடுத்துக் கூறவேண்டும். பாட்டாளிவர்க்கத்தின் நலன்களையும் ஏகாதிபத்திய பூர்ஷ்வா வர்க்கத்தின் நலன்களையும் ஒன்றாகக் காட்ட எடுக்கப்படும் முயற்சிகள் அனைத்தையும் எதிர்த்துக் கம்யூனிஸ்டுகள் இடைவிடாது போராட வேண்டும். தேசியக் கொடி என்பதன் ஏகாதிபத்திய இயல்பை ஊடுருவிப் பார்க்கி வர்க்க உணர்வுள்ள பாட்டாளி வர்க்கத்தினரையும் மற்றவர்களையும் பயிற்றவேண்டும்.

கம்யூனிஸ்டுகள் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களினதும் தேசங்களினதும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்துக்கு மக்கள் மத்தியில் ஆதரவை வளர்க்கவேண்டும். இப் போராட்டங்கள் மாக்சிஸ - லெனினிச வாதிகளால் தலைமைதாங்கப்படாதவிடத்தும் அவர்கள் இவ்வாறு செய்யவேண்டும். கட்சி இடைவிடாமலும் ஸ்தூலமாகவும் பாட்டாளிவர்க்கத்தின் மத்தியில் சர்வதேசியத்துவ உணர்வை வளர்க்க வேண்டும்.

தற்போது ஏகாதிபத்திய நாடுகளிலுள்ள மக்கள் உலக யுத்தம் ஒன்றின் மென்மேலும் வளரும் ஆபத்தை மிகுதியும் உணர்கின்றனர். கம்யூனிஸ்டுகள் யுத்தத் தயாரிப்புக்கு எதிரான வெகுஜன இயக்கங்களிலும் இந்த இயக்கங்கள் எழுப்பும் பிரச்சனைகளிலும் பெருங் கவனம் செலுத்த வேண்டும். மாக்சிஸ லெனினிசக் கட்சி இந்த இயக்கங்களிலுள்ள புரட்சிகர சக்திகளுக்கு ஆதரவளித்து அவர்களை அதன் அணியில் சேர்த்துக் கொள்ளப் பாடுபடவேண்டும். கட்சி யுத்தத்துக்கு எதிரான மக்களின் உணர்வுகளுடன் ஐக்கியப்பட வேண்டும். ஆனால் ஒரு ''சமாதான இயக்கம்'' ஏகாதிபத்திய யுத்தத்தை நிறுத்த முடியும் என்ற மாயைகளையும் விசேஷமாக உலகின் பிற பகுதிகளைப் பாதித்து இந்த அல்லது அந்த ஏகாதிபத்திய தேசத்துக்கு யுத்த அழிவைத் தவிர்க்கும் தேசிய வெறிவாத (சாவினிஸ) கருத்துக்களையும் எதிர்த்துப் போராட வேண்டும்.

மாக்சிஸ லெனினிசக் கட்சி ஏகாதிபத்திய யுத்தத் தயாரிப்புகளுக்கு எதிராக மக்களுடன் ஒன்றுபட்டுச் செயற்படும் அதேவேளையில் ''அணு ஆயுதமற்ற பிராந்தியங்களுக்கான'' கோரிக்கை, ஏகாதிபத்திய முகாம்களை அழித்தொழிப்பது என்ற மாயைக் கருத்துக்கள் முதலியவற்றை ஏகாதிபத்திய நாடுகளில் முன்வைக்கவும் கூடாது. ஆதரிக்கவும் கூடாது. குறைவான, அணு ஆயுதமற்ற நாடுகளில் கூட கம்யூனிஸ்டுகள், ஏகாதிபத்தியம் உலக யுத்தத்தின் ஊற்றுவாய் என்பதையும் சகல ஏகாதிபத்திய ஆளும் வர்க்கங்களும் மனித இனத்துக்கு எதிராக இந்தப்



பாதகத்தைத் தயாரிப்பதில் ஈடுபட்டிருக்கின்றன என்பதையும் ஒரேயொரு உண்மையான தீர்வு புரட்சியில்தான் இருக்கின்றது, மாயையான இறுதியில் பிற்போக்கான ''நடுநிலைமை''க்கான முயற்சிகளில் தங்கி இருக்கவில்லை என்பதையும் மக்களுக்கு வற்புறுத்திக் கூற வேண்டும்.

புரட்சி உலக யுத்தத்தைத் தடுக்க முடியாதவிடத்து ஏகாதிபத்தியவாதிகளின் பலவீனத்தைப் பயன்படுத்தி நிச்சயம் ஏற்படும் யுத்தத்துக்கு எதிரான பரவலான வெறுப்பை வளர்த்து ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதிராக அதனைச் செலுத்தி ஏகாதிபத்திய யுத்தத்தை உள்நாட்டு யுத்தமாக மாற்றப் பாடுபடக்கூடிய நிலையில் இருப்பதற்கு மாக்சிஸ லெனினிசக் கட்சி தன்னையும் புரட்சிகர பாட்டாளி வர்க்கத்தையும் தயார் செய்யவேண்டும். புரட்சிகர தோல்விவாத நிலைப்பாட்டை சகல ஏகாதிபத்திய நாடுகளிலுமுள்ள மாக்சிஸ லெனினிசவாதிகள் மேற்கொள்ள வேண்டும்.

ஏகாதிபத்திய நாடுகளில் கம்யூனிஸ்ட் பத்திரிகை முதலியன பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கான தயாரிப்பில் முக்கிய பாத்திரம் வகிக்கின்றன. பத்திரிகை முதலியவற்றை கட்சியின் கூட்டுப் பிரச்சாரகனாக, கிளர்ச்சியாளராக, ஸ்தாபகராகக் கட்டியமைக்க வேண்டும்.

முன்னேறிய முதலாளித்துவ நாடுகளிலுள்ள மாக்சிஸ லெனினிசவாதிகள் தமது அணிகளில் திரிபுவாதம், சீர்திருத்தவாதம் ஆகியவற்றின் நச்சுச் செல்வாக்கை எதிர்த்துத் தொடர்ந்து போராடும் பணியைக் கொண்டிருக்கின்றனர். ஒக்டோபர் புரட்சியைத் தயாரித்து அதற்குத் தலைமைதாங்குவதில் லெனின் வளர்த்த கோட்பாடுகளுக்காகப் போராடுவது தான் இதில் முக்கியமான விஷயமாகும். அதே வேளையில் மாக்சிஸ லெனினிசவாதிகள் கடந்த கால அனுபவத்தைத் தொகுத்து, வரட்டுத் தத்துவவாதத்தை எதிர்த்துப் போரிட்டு கோட்பாட்டில் உறுதியாக இருந்து தந்திரோபாயங்களில் வளைவு நெளிவாக இருந்து கடந்த சில தசாப்தங்களில் ஏகாதிபத்திய நாடுகளில் ஏற்பட்ட வளர்ச்சிகள் பற்றியும் இதனால் தோன்றியுள்ள புரட்சிகர யுத்த தந்திரத்தை மேற்கொண்டு வளர்ப்பது பற்றியும் விஞ்ஞான ரீதியாக ஆராயவேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## மாக்சிஸ லெனினிசவாதிகளின் சித்தாந்த, அரசியல், ஸ்தாபன ஐக்கியத்துக்காக

கம்யூனிஸ இயக்கம் ஒரு சர்வதேசிய இயக்கம். அப்படித்தான் அது இருக்க முடியும். விஞ்ஞான ரீதியான சோஷலிசத்தின் அதி ஆரம்பத்திலேயே 'உலகத் தொழிலாளர்களே, ஒன்றுபடுவீர்' என்று கம் யூனிஸ்ட் பிரகடனம், பிரகடனம் செய்தது. ஒக்டோபர் புரட்சியின் வெற்றி யுடனும் கம்யூனிஸ சர்வதேசியத்தின் ஸ்தாபகத்துடனும் பின்னர் உலகத் தின் சகல மூலைகளுக்கும் மாக்சிஸம் — லெனினிசம் பரவியதுடனும் தொழிலாளி வர்க்கத்தின் சர்வதேசிய ஐக்கியம் மேலும் ஆழ்ந்த அர்த்த முடையதாகியது.

இன்று, மாக்சிஸ லெனினிசவாதிகளின் அணிகளில் ஆழமான நெருக்கடி நிலவும் நிலைமையில் சர்வதேசிய ஐக்கியத்துக்கான தேவை யும் புதிய சர்வதேசிய ஸ்தாபனம் ஒன்றின் தேவையும் நன்கு உண ரப்படுகின்றன.

சர்வதேசியப் பாட்டாளி வர்க்கம் உலக மட்டத்தில் அதன் ஸ்தா பனத்தைக் கட்டியமைப்பதில் சாதகமான, பாதகமான அனுபவங் களைப் பெற்றிருக்கின்றது. உலகக் கட்சி என்ற கருத்தும் இதனால் ஏற் பட்ட கம்யூனிஸ சர்வதேசியத்தின் (கொமின்ரேன்) கூடுதலான மத் தியத்துவமும் மதிப்பாராய்வு செய்யப்பட வேண்டும். அந்தக் காலத் திலிருந்தும் அத்துடன் முதலாவது, இரண்டாவது மூன்றாவது சர்வ தேசியங்களின் சாதகமான சாதனைகளிலிருந்தும் தக்க படிப்பினைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். கொமின்ரேனின் எதிர்மறை அம்சங் களைப் பொறுத்து சீனக் கம்யூனிஸ்ட் கட்சி காட்டிய மிகையான ஏதி ரொலிப்பையும் மதிப்பாராய்வு செய்வது அவசியம். இதனால் தான் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி சர்வதேசிய மட்டத்தில் மாக்சிஸ லெனினிச சக்திகளின் ஸ்தாபன ஐக்கியத்தைக் கட்டியமைப்பதற்கு அவசியமான தலைமைப் பாத்திரத்தை வகிக்க மறுத்தது.

உலக சரித்திரத்தின் இன்றைய கட்டத்தில் சர்வதேசிய பாட் டாளி வர்க்கம் அதன் சொந்த ஸ்தாபனத்தை உருவாக்கும் பணிக்கு முகங்கொடுக்க வேண்டும். இந்த ஸ்தாபனம் கடந்த காலத்தின் மதிப் புள்ள அனுபவத்தை உட்செலுத்தி மாக்சிஸம் — லெனினிசம் — மாசே துங் சிந்தனையை அடிப்படையாகக் கொண்டதோர் புதியரக சர்வ தேசியமாகும். வானத்தையும் இடித்துத் தாக்கி, (''முடியாது'' என்ற விஷயத்தை) கம்யூனிஸ உலகத்தைக் கட்டியமைப்பதை செய்யத் துணிந்த பாரீஸ் கம்யூன் வீரர்கள் முதல் சாங்காய்ப் பாட்டாளி



வர்க்கக் கிளர்ச்சிவாதிகள் வரையான எமது முன்னோடிகள் காட்டிய அதே புரட்சிகரத் துணிவுடன் இந்த இலட்சியத்தை சர்வதேசியப் பாட்டாளி வர்க்கத்தின் முன்னிலையிலும் உலக அடக்கி ஒடுக்கப்பட்ட மக்கள் முன்னிலையிலும் பிரகடனம் செய்யவேண்டும்

இந்த ஸ்தாபனத்தை உருவாக்கும் போக்கு அநேகமாக நீடித்த காலப் போக்காக இருக்கும்.

இந்த விஷயத்தில் மாக்சிஸ லெனினிசவாதிகள் எதிர்நோக்கும் மிக முக்கிய பணி இன்றைய உலகின் சிக்கலான யதார்த்தத்துக்கும் அது ஏற்படுத்தும் சவால்களுக்கும் பொருத்தமான பொது மார்க்கம் ஒன்றையும் சரியாக செயற்படுத்தக்கூடிய ஸ்தாபன வடிவத்தையும் வகுப்பதாகும்.

தொடர்ந்து அனுபவதொகுப்பை ஆழமாக்கி சர்வதேசியம் ஸ்தா பிக்கப்பட்ட பொது மார்க்கத்தை விருத்திசெய்து ஒரு முழுமையான வழிகாட்டும் அரசியல் கேந்திரமாக பணிபுரிவதே இப்புதிய சர்வதே சியத்தின் கடமையாகும். இந்துப் பணிகளை செய்வதற்கு மாக்சிச லெனினிசவாதிகளின் சித்தாந்த அரசியல் ஐக்கியத்தினடிப்படையில் அமைந்த ஒருவகை சனநாயகமத்தியத்துவம் அவசியமாகிறது. ஆனால் இது ஒரு நாட்டில் ஒரு கட்சி இயங்குவது போன்ற இயல்புடைய தாகாது. ஏனென்றால் இந்த சர்வதேசிய ஸ்தாபனத்தின் பகுதிகள் பல்வேறு கட்சிகளாகும். அவற்றிற்கு சமமான உரிமையுண்டு. ஒவ் வொரு நாட்டிலும் புரட்சிக்கு தலைமைதாங்கும் பொறுப்புண்டு. உல கப் புரட்சிக்குப் தயாரிப்பு அதனைத் துரிதப்படுத்தல் ஆகியவற்றில் ஒவ்வொரு கட்சியினதும் பங்குஎன்ற முறையில் கட்சி இவ்வாறு செயல் படுகின்றது.

2 வது மாநாட்டில் மாக்ஸிஸ லெனினிஸ கட்சிகளும் ஸ்தாபனங் களும் பெற்றுக்கொண்ட சித்தாந்த அரசியல் ஐக்கிய மட்டம் முதிர்ச்சி ஆகியவற்றை மனதில் கொண்டு பார்க்கையில் மேற்குறிப்பிட்ட உயர்ந்த பணிகளை நிறைவேற்ற இந்தக் கட்சிகளும் ஸ்தாபனங்களும் பின்வரும் பூர்வாங்க நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

[1] சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தைப் புனரமைப்பதில் ஒரு முக்கிய கருவியாக சர்வதேசிய பத்திரிகை ஒன்றை நடத்தவேண்டும். அது ஆய்வு அரசியல் விமர்சனப்பத்திரிகையாக இருக்கும் அதே வேலையில் சர்வதேச இயக்கத்தின் பிரச்சினைகளை விவாதிக்கும் கருத் தரங்காகவும் இருக்கவேண்டும். இயன்றளவு பல மொழிகளில் அதனை மொழிபெயர்க்க வேண்டும். மாக்சிஸ லெனினிஸ கட்சிகளின் உறுப்

www.tamilarangam.net



பினர்கள் மத்தியிலும் மற்றும் புரட்சிகர சக்திகள் மத்தியிலும் அதனை விநியோகிக்க வேண்டும். மார்க்ஸிஸ லெனினிஸக் கட்சிகள் ஒழுங்காக இந்தப் பத்திரிகைக்ளுடன் தொடர்பு கொண்டு கட்டுரைகளையும் விமர்சனங்களையும் வழங்கவேண்டும்.

[2] புதிய மார்க்ஸிஸ லெனினிஸக் கட்சிகளை ஸ்தாபிக்க துணை புரிவதும் இப்பொழுது இருக்கும் கட்சிகளை பலப்படுத்துவதும் சர்வ தேச கம்யூனிஸ்ட் இயக்கத்தின் பொதுப்பணியாகும் இந்த முக்கிய பணியை நிறைவேற்றுவதில் பல்வேறு நாடுகளில் உள்ள மாக்ஸிஸ லெனினிஸவாதிகளுக்கு துணைபுரிய சர்வதேச இயக்கம் வழிமுறைகளை கண்டுபிடிக்க வேண்டும்.

[3] மாக்ஸிஸ லெனினிஸ கட்சிகளும் ஸ்தாபனங்களும் கூட்டான; ஒத்திசைவான இயக்கங்களை நடத்தவேண்டும். மேதின நடவடிக்கைகள் ஒருமுகப்பட்ட கோசங்களின் கீழ் நடத்தப்பட வேண்டும்.

[4] பல்வேறு மாக்ஸிஸ லெனினிஸக் கட்சிகளும் ஸ்தானங் களும் வேற்றுமைகளை யொட்டி கோட்பாட்டுரீதியான ோராட்டத்தை தொடர்ந்து நடத்தும் அதேவேளை சர்வதேச மாநாடுகளால் அங்கீ கரிக்கப்பட்டதும் இந்தக்கட்சிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டதுமான அரசியல் மார்க்கத்தையும் முடிவுகளையும் அமுல்படுத்த வேண்டும்.

[5] சகல மாக்ஸிஸ லெனினிஸக் கட்சிகளும் ஸ்தாபனங்களும் தமது திறமைக்கேற்ப கம்யூனிஸ்டுகளின் ஐக்கியத்தை வளர்ப்பதிலான பணிகளில் நிதி உதவியும் நடைமுறை உதவியும் வழங்க வேண்டும்.

[6] ஒரு தற்காலிக கமிட்டி — கருவுருவான அரசியல் கேந்திரம் ஒன்று அமைக்கப்பட வேண்டும். கம்யூனிஸ்ட் இயக்கத்துக்கு பொது மார்க்கம் ஒன்றிற்கான நகல் பிரேரணையை தயாரிப்பது உற்பட கம் யூனிஸ்டுகளின் சித்தாந்த அரசியல், ஸ்தாபன ஐக்கியத்தை மேற் கொண்டு வளர்க்கும் பொதுப் பணிக்கு அது தலைமை தாங்கவேண்டும்.

மாக்ஸிஸ லெனினிஸ வாதிகள் கோட்பாட்டு ரீதியான போராட் டத்தின்மூலம் பெற்றுள்ள உயர்மட்ட சித்தாந்த அரசியல் ஐக்கியத் தின் அடிப்படையில் அமைந்துள்ள புரட்சிகர சர்வதேச இயக்கம் அமைக்கப்பட்டமை சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தை பொறுத்து மிகுதியும் முக்கியமான ஓர் நடவடிக்கையாக அமைகிறது. ஆனல் உலகின் புற நிலை வளர்ச்சிகளை பாய்ந்தோடி எட்டிப்பிடிக்கும் தேவை



இன்னமும் இருக்கின்றது. சகல நாடுகளிலும் உள்ள பொதுமக்களின் புரட்சிப் போராட்டத்துக்கு உண்மையான புரட்சிகரத்தலைமை அவ சரம் தேவையாக உள்ளது. ஒவ்வொரு நாட்டிலுமுள்ள உண்மையான மாக்ஸிஸ லெனினிஸ சக்திகளைப் பொறுத்தவரையிலும் உலகம் தழு வியமுறையிலும் அவை தமது ஐக்கியத்தை பலப்படுத்தி அதனை அதி கரிக்க தொடர்ந்து பாடுபடவேண்டும். அதேவேளை புரட்சிகர தலை மைப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும். இம்முறைகளை கடை பிடித்து நடந்தால் சரியான சித்தாந்த அரசியல் மார்க்கத்தை பின் பற்றும் புதிய போராளிகள் தோன்றுவார்கள். அவர்கள் மென்மேலும் வளர்ந்து பலமான பொருளாயுத சக்திகளாக மாறுவார்கள். பாட் டாளிகளுக்கு இழப்பதற்கு எதுவும் இல்லை., தமது அடி மைச் சங்கிலிகளைத்தவிர! அவர்கள் வெல்வதற்கோ ஓர் உலகம் உண்டு. கம்யூனிஸ்ட் பிரகடனத்தில் உள்ள இந்த புகழ்மிக்க வார்த் தைகள் இன்றும் உரத்து ஒலிக்கின்றன.

மார்ச் 1984

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புரட்சிகர சர்வதேசிய இயக்கத்தின் பிரகடனம்

புரட்சிகர சர்வதேசிய இயக்கத்தை உருவாக்கியுள்ள மாக்சிஸ்ட்-லெனினிசக் கட்சிகளினதும் ஸ்தாபனங்களினதும் இரண்டாவது சர்வதேசிய மாநாட்டின் பிரதிநிதிகளாலும் பார்வையாளர்களாலும் அங்கீகரிக்கப் பட்டது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய புனரமைப்புக் கமிட்டி (மா—லெ)

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி

கொலம்பிய கம்யூனிஸ்ட் கட்சி மாசேதுங் பிராந்தியக் கமிட்டி

துருக்கிக் கம்யூனிஸ்ட் கட்சி (மா—லெ)

ஹைத்தி சர்வதேசிய புரட்சிகரக் குழு

நேபாளக் கம்யூனிஸ்ட் கட்சி

நியூசிலாந்து செங்கொடிக் குழு

நொட்டிங்காம் / ஸ்ரொக்போட் கம்யூனிஸ்ட் குழுக்கள் (பிரிட்டன்)

கொலம்பிய புரட்சிகர கம்யூனிஸ்ட் குழு

இந்திய புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி

அமெரிக்கப் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி

புரட்சிகர கம்யூனிஸ்ட் யூனியன் (டொமினிக்கன் குடியரசு)

ஈரான் கம்யூனிஸ்டுகளின் யூனியன்

பேரு கம்யூனிஸ்ட் கட்சி

கிளர்ச்சி / பிரச்சார கம்யூனிஸ்ட் கூட்டு (இத்தாலி)

பாட்டாளி வர்க்க கம்யூனிஸ்ட் ஸ்தாபனம், மாக்சிஸ்ட்—லெனினிஸ்ட் (இத்தாலி)

பூர்வ வங்காள பாட்டாளி வர்க்கக் கட்சி (வங்காள தேசம்)

இப்பிரசுரம் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் ான். சண்முகதாசன் அவர்களால் வெளியிடப்பட்டது.